சபா.ஜெயராசா

# கல்வியில் எழுவினாக்கள்

சேமமடு

சேமமடு பதிப்பகம்

# கல்வியில் எழுவினாக்கள்

**(ISSUES IN EDUCATION)**

முனைவர் சபா.ஜெயராசா

சேமமடு

சேமமடு பதிப்பகம்

**2011**

## நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற் தலைப்பு | : | கல்வியில் எழுவினாக்கள் |
| நூலாசிரியர் | : | பேராசிரியர்.சபா.ஜெயராசா © |
| பதிப்பாளர் | : | சதபூ.பத்மசீலன் |
| பதிப்பாண்டு | : | 2011 |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கங்கள் | : | viii + 108 |
| படிகள் | : | 1000 |
| விலை | : | ரூ. 280.00 |
| அச்சிடல் | : | சேமமடு பதிப்பகம், கொழும்பு -11.<br>தொ.பே: 0777 345 666. |
| வெளியீடு | : | சேமமடு பொத்தகசாலை,<br>யுஜி.50, பீப்பள்ஸ் பார்க், கொழும்பு-11.<br>தொ.பே:011-2472362, 2321905. |
| **ISBN - NO** | : | **978-955-1857-85-1** |

| | | |
|---|---|---|
| Title | : | **KALVIEL ELUVINAKKAL** |
| Author | : | Prof.Saba Jeyarasa © |
| Edition | : | 2011 |
| Price | : | Rs. 280.00 |
| Published by | : | Chemamadu Poththakasalai<br>UG.50, People's Park,<br>Colombo -11.<br>T.P : 011-2472362, 2321905. |
| Printed by | : | Chemamadu Pathippakam,<br>Colombo -11.<br>T.P 0777 345 666.<br>E-mail : *Chemamadu@yahoo.com*<br>Web : www.Chemamadu.com |
| வெளியீட்டு எண் | : | CBCN :2011-01-01-086 |

# முன்னுரை

சமகாலத்தில் கல்விச் செயன்முறை பல்வேறு மாற்றங்களுக் குட்பட்டு வருகின்றன. இதனை விளங்கவும் விளக்கவும் பல்வேறு புதிய கோட்பாடுகள் உருவாகின்றன. இருப்பினும் அனைத்து தரப்பினருக்கும் பயனுள்ள வகையிலே கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்தல் சமூக நீதியாகும். இனத்துவநிலை, பால்நிலை; பண்பாட்டு நிலை, வறுமை, சுனாமி மற்றும் உளப்பாதிப்புக்கு உள்ளாகும் முதலான பல்வேறு நிலைகளினாலும் கல்வியில் சமத்து வமும் சமவாய்ப்பும் மேலும் பாதிப்புகளுக்கு உள்ளாகாதவாறு நாம் பார்த்துக்கொள்ள வேண்டி உள்ளது. இத்தகைய பாதுகாப்புச் செயற்பாடுகளுக்கு நடுநிலையான வளமான கருத்தாடல்கள் அவசியமாகின்றன. இவை சமூக எதார்த்தத்தை ஊடறுத்துக் கருத் தியல் வினைப்பாடுகளாக எழுச்சி பெறவேண்டியுள்ளன.

கல்விப் புலத்தில் முகிழ்த்தெழும் எழுவினாக்கள் இடர்களை யும் தடைகளையும் சவால்களையும் கடக்க வேண்டிய இடைவெளி களையும் கருத்தாடற் குவிப்புக்கு உள்ளாக்கிய வண்ணமுள்ளன. பல்வேறு புதிய பிரச்சினைப்பாடுகளை எழுப்புகின்றன.

இந்நூல் கல்வியியல் எழுவினாக்களைக் குவியப்படுத்தி எழுதப்பட்டுள்ளது. இது அனைவருக்கும் பயன்படக்கூடிய ஆக்க மாகவும் உள்ளது. எழுவினாக்கள் தொடர்பாகத் தமிழில் வெளிவரும் குறிப்பிடத்தக்க நூலாகவும் அமைந்துள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை வறுமைக்கும் பாடசாலை இடைவிலகலுக்கும் இடையே வலுவான இணைப்புக் காணப்படு கின்றது. பணவலுவுடையோரே கல்வியின் அனுகூலங்களை அனு பவிப்போராக உள்ளனர். அதேவேளை இனத்துவம் தொடர்பான சமநிலைப் பிறழ்வுகளும் கல்வியிலே காணப்படுகின்றன.

தென்னிலங்கையில் உள்ள பல தமிழ் மற்றும் முஸ்லிம் பாடசாலைகள் பிரதிகூலமெய்திய நிலையில் காணப்படுகின்றன. இன்னும் சில மூடப்பட்டுள்ளன. தொடர்ந்து தாய்மொழியே கல்வி மொழி என்ற உறுதிப்பாடு இன்னும் தெளிவற்ற நிலையில் காணப் படுகின்றன. சர்வதேச பாடசாலைகள் கல்வியமைச்சின் கீழ் உள்ள டக்கப்படாது விலகிய நிலையிலேயே செயற்படுகின்றன. பெரும் வணிக நிறுவனங்களாக இயங்குகின்றன.

நவீன உலகின் விரைந்த மாற்றங்களுக்கு ஏற்றவாறு கல்வியிலும் பல்வேறு முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்நிலையிலே பயனுள்ள கருத்து வினைப்பாடுகள் பல்வேறு மட்டங்களிலும் பல்வேறு நிலைகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இத்தகைய செயற்பாடுகளுக்கு பயன்படக்கூடிய ஒரு நூலாக்கத்தின் தேவையை உணர்ந்து இந்த ஆக்கம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதுபோன்ற கனங்காத்திரமான நூல்கள் எமது சிந்தனையில் தேடல்களில் பெரும் தாக்கம் விளைவிக்க வேண்டும். இதற்கான சாத்தியப்பாடுகளை இந்நூல் திறந்துவிடுகின்றது.

**தெ.மதுசூதனன்**

# நூலாசிரியர் உரை

எழுவினாக்கள் எழுபொருள்கள் எனவும் குறிப்பிடப்படும். கல்விச் செயல்முறையின் விரைந்த மாற்றங்களுடன் பிரச்சினை களும் தொடர்ந்து மேலெழுந்த வண்ணமிருக்கும். பிரச்சினைகளைக் குவியப்படுத்தும் கருத்தாடல்கள் செல்லும் வழியைச் செம்மைப் படுத்த உதவும்.

எழுபொருள்களின் கருத்தாடல் முக்கியத்துவத்தை அறிந்து பல்கலைக்கழகங்களும் ஆசிரிய கலாசாலைகளும், கல்வியியற் கல்லூரிகளும் தத்தமது பாடத்திட்டங்களில் இதனை உள்ளடக்கி வருகின்றார்.

கல்வியியல் சார்ந்த கருத்துக்களையும், முன்மொழிவுகளையும் திறனாய்வின்றி உள்வாங்கும் அறிவூக்கமற்ற நிலையிலிருந்து விடுபட வைப்பதற்குரிய கருத்தாடல்கள் பலநிலைகளிலும் வேண்டப்படு கின்றன. திறனாய்வும், மீள்வாசிப்பும் இன்றி முன்னேற்றங்களை எட்ட முடியாது.

கல்வியியல் அதற்கென உரிய தனித்துவமான சொல்லாடல் களைக் கொண்டுள்ளது. அறிவு நீண்டு வளர்ந்து செல்லும்பொழுது அதற்குரிய புதிய புதிய கலைச்சொற்களும் தோற்றம்பெற்ற வண்ண மிருக்கும். அந்த நடப்பியலைப் புரிந்துகொள்ளும் பொழுது புதிய சொற்கள் மலைப்பை உண்டாக்காது மகிழ்ச்சியை உண்டாக்கும். சொற்பெருக்கு மொழி வளர்ச்சியின் சுட்டியாகும்.

இந்நூலாக்கத்துக்குத் துணை புரிந்த நண்பர்களும், சேமமடு பதிப்பகத்தினரும் நன்றிக்குரியவர்கள். பயனுள்ள நூல்களைத் தந்த பிரித்ததானிய கழக நூலகத்தினருக்கும் நன்றி

**சபா.ஜெயராசா**

# பதிப்புரை

“நவீன உலகமயச் சூழலில் வாசிப்பின் உன்னதங்கள் மேலெழுகையில்... நாம் எங்கே நிற்கின்றோம்?” இக்கூற்றைப் பார்க்கும்போது இன்று கல்விசார்ந்த பிரச்சினைகள் பல. இவை யாவும் சாதாரண பொதுபுத்தி மட்டத்தில் விவாதப் பொருளாக மாற்றமுற வேண்டும். அப்பொழுதுதான் கல்விக்கும் அபிவிருத்திக் கும் இடையிலான பரஸ்பரத் தாக்கங்களை ஆழமாகப் புரிந்து கொள்ள முடியும். குறிப்பாக கல்விச் சமூகத்தின் மட்டத்திலாவது இந்தக் கல்விப் பிரச்சினைகள் பற்றிய கோட்பாட்டுப் புரிதல்களை தெளிவாக எடுத்துரைக்க வேண்டும். இதற்குத் துணை செய்யும் வகையிலேயே இந்நூல் அமைகின்றது.

கல்வியியலின் பல்வேறு பரிமாணங்களை விளக்கும் பல நூல்களை சபா.ஜெயராசா எழுதி வருகின்றார். நாமும் அவற்றை வெளியிட்டு வருகின்றோம். இந்தத் தொடர்ச்சியில் தான் இந்நூலும் வெளிவருகின்றது. இந்நூல் நமது சமகாலக் கல்வி விடயங்களை இன்னும் நுணுக்கமாக ஆய்வுக் கண்ணோட்டத்தில் புரிந்துகொள்ள வேண்டுமென்ற சிந்தனைக் கிளர்வை எமக்குள் ஏற்படுத்துகின்றது. வாசகர்கள் இந்நூலை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். கல்வியில் மாற்றங்களை உருவாக்க வேண்டும்.

பேராசிரியரின் இருபதாவது நூலாக இந்நூல் வெளியிடுவதில் நாம் உவகைக் கொள்கின்றோம். சேமமடு பதிப்பகத்தின் 85ஆவது நூல் என்ற பெருமையையும் இந்நூல் பெறுகின்றது.

இந்நூலை வெளியிடுவதற்கான சந்தர்ப்பத்தை எமக்கு வழங்கியதற்கு நன்றிகள். பதிப்புத்துறையில் எம்முடன் இணைந்து பணியாற்றுபவர்களை நன்றியுடன் நினைவுகூறுகின்றோம்.

**பதிப்பாளர்**

சதபூ.பத்மசீலன்
113, சேமமடு
வவுனியா

# பொருளடக்கம்

முன்னுரை iii

ஆசிரியர் உரை v

பதிப்புரை vi

1. கல்வியில் சமத்துவமும் சமசந்தர்ப்பமும் ....01
2. சிவில் சமூகமும் கல்வியும் ....08
3. கல்வியுலகும் கேடுறுத்தலும் ....13
4. இனக்குழும உறவுகளும் விளைவுகளும் ....20
5. கல்வி நிதி வழங்கல் ....26
6. மனிதவள விருத்தியும் கல்வியும் ....32
7. பெண்களும் கல்வியும் ....39
8. கல்விக்குரிய தனிநபர் கேள்வியும் சமூகக் கேள்வியும் ....46
9. பல்கலைக்கழகக் கல்விப் பிரச்சினைகள் ....51
10. கல்வியில் பண்பும் தரக்காப்பீடும் ....57
11. முழுமைப்புல முகாமைத்துவமும் கல்வியும் ....64
12. அறிவுக் காலனித்துவமும் மறுவாசிப்பும் ....76

13. அறிவை முகாமை செய்தல் ....................................................82

14. செயல்நிலைக் கற்றலை முன்னெடுத்தல் ..............................89

15. மரபு வழியான கற்பித்தலிலிருந்து விலகுதல் .......................94

16. ஆழ்கற்றல் ......................................................................................100

17. பின்னிணைப்பு ..........................................................................106

# கல்வியில் சமத்துவமும் சமசந்தர்ப்பமும்

மக்களாட்சிக் கருத்தியல், மானிடவாதம், மார்க்சியம் முதலி யவை கல்வியிற் சமத்துவம் என்பதைப் பலநிலைகளிலே வலியுறுத்தி வருகின்றன.

(1) சமத்துவம் *(Equality)*

(2) சமகணிப்பு *(Equity)*

(3) சமசந்தர்ப்பம்

(4) சமவாய்ப்பு

(5) சமஉரிமை

(6) வெளிப்பாட்டு ஆக்கத்திற் சமத்துவம்

(7) நுழைவிலே சமத்துவம்

மேற்குறித்தவாறு சமத்துவம் பல்வேறு பரிமாணங்களிலே வலியுறுத்தப்படுகின்றது.

அரசியலிலே சமவுரிமை, பொருளியலிலே சமபங்கீடு, பால் நிலையிலே சமத்துவம், இனத்துவ நிலையிலே சமத்துவம், நாடுகள் மற்றும் பிரதேச நிலைகளிலே சமத்துவம், சமநீதி முதலாம் எழுச்சிகள் கல்வியிலே சமத்துவத்தைத் தொடர்புபடுத்தியும் மீள வலியுறுத்தியும் வருகின்றன.

வரலாற்று வளர்ச்சியிலே சமூக ஏறுநிரை அமைப்புடன் இணைந்ததாகவே கல்விச் செயற்பாடுகளும் இடம்பெற்று வந்துள்ளமையைக் காண முடியும். சமூகத்தின் உயர் வகுப்பினருக்குத் தரச் சிறப்பு

மிக்க கல்வியும் தாழ்நிலையினருக்கு உயர்நிலைக் கல்விப் புறக்கணிப்பும் இடம்பெற்று வந்தன.

"எந்தப் பாடத்தையும், எந்த நிலையிலும் யாருக்கும் அறிவு நேர்மையுடன் கற்பிக்க முடியும்" என்பது உளவியல் நிலையிலே சமத்துவத்தை வலியுறுத்தும் செயற்பாடுகளுக்கு உறுதி வழங்கியது.

சமூக இருப்பிலே அடிநிலை மாற்றங்களை ஏற்படுத்துவதன் வாயிலாகக் கல்விச் செயற்பாடுகளை ஆற்றலுடன் முன்னெடுக்க முடியும் என்ற மார்க்சிய உளவியல் அணுகுமுறைகள் கல்விச் சமத்துவ நடவடிக்கைகளுக்கு மேலும் வலுவூட்டின.

ஒருவருக்குரிய அடிப்படையான புலன் உணர்வுகள் மற்றும் உயிரியல் வழியான உயிர் மரபுக் கொடைகள் *(Endowments)* கற்பதற்குரிய உயரியல் சமத்துவத்தைச் சுட்டி நிற்கின்றன. கல்வியிலே சம சந்தர்ப்பமின்மை மாணவரின் உள்ளார்ந்த எழுவலுவை *(Potential)* நிராகரிக்கும் செயற்பாடாகின்றது.

கல்வியை முன்னெடுப்பதற்குரிய வேண்டத்தகாத தடைகளை நீக்குதல் உள்ளார்ந்த எழுவலுவுக்கு அங்கீகாரம் தருவதாக அமையும்.

மரபுவழியான நுண்மதிச் சோதனைகளை அடிப்படையாக வைத்துக் கல்வியிற் சமவாய்ப்புக்களை நிராகரிக்கும் செயற்பாடுகளுக்குப் பிரித்தானியாவின் பட்லர் கல்விச் சட்டம் (1944) வழி வகுத்தது. நுண்மதி ஈவு கூடியோருக்கு உயர்தரத்திலான இலக்கணப் பள்ளிகளில் இடமளிக்கப்பட்டது.

பிரித்தானியக் காலனித்துவத்தின் கீழிருந்த நாடுகள் அதனை முன்மாதிரியாகவும் கொள்ளத் தொடங்கின. பின்னர் உளவியலிலே நிகழ்ந்த ஆழ்ந்து விரிந்த ஆய்வுகள் மரபு வழியான நுண்மதித் தேர்வின் மட்டுப்பாடுகளை வெளிப்படுத்தின. அவற்றின் அடியாகப் "பன்முக நுண்மதியாற்றல்" என்ற கண்டுபிடிப்பு மேலெழுந்தது. ஆற்றல்களின் பன்முகப்பாடுகளைக் கண்டறிந்தமை கல்வியின் ஒடுங்கிய ஒற்றைப் பரிமாணச் செயல்முறையைத் தகர்ப்புக்கு உள் ளாக்கியது. கல்வியிலே சமவாய்ப்பு விரிவுக்கு உற்சாகமளித்தது.

முற்போக்கு அரசியல் மற்றும் முகாமைத்துவச் சிந்தனைகள் "பங்குபற்றல்" என்ற செயற்பாட்டுக்கு முக்கியத்துவம் வழங்கத் தொடங்கின. கல்வியியலைப் பொறுத்தவரை பங்குபற்றல் என்பது அதிக

முக்கியத்துவம் பெறும் செயற்பாடாகின்றது. கல்வியிலே மேற் கொள்ளப்படும் சமத்துவ நடவடிக்கைகள் பங்குபற்றலை நடப்பு நிலவரங்களுக்குள் கொண்டு வருகின்றன. பங்குபற்றலின் நிராகரிப்பு தனியுரிமை முதலாளியத்தின் பலம் மிக்க செயற்பாடு என்பதையும் உளங்கொள்ளல் வேண்டும். அபிவிருத்தித் தந்திரோபாயத்தை முத லாளிய நோக்கிலும் தனியுரிமை அனுகூலங்களின் அடிப்படை யிலும் வலியுறுத்துவோர் கல்வியிலே சமவாய்ப்பு என்பது தேவை யற்ற ஒருதலையீடு என்று சுட்டிக் காட்டுகின்றனர்.

கல்வியிலே சமவாய்ப்பையும் முதலாளியத்தையும் தொடர்பு படுத்திய விரிவான ஆய்வுகளை மேற்கொண்ட பவுல்ஸ் மற்றும் ஜின்ரியிஸ் ஆகியோர் (1976) முதலாளியக் கட்டமைப்பை மீள உருவாக்கும் செயற்பாட்டிலே பாடசாலைகள் பலம்மிக்க கருவி களாகச் செயற்படும் நிலையைச் சுட்டிக்காட்டினர். அந்நிலையிலே கல்வி நிறுவன ஒழுங்கமைப்புக்கள் சமவாய்ப்பைப் புறக்கணிக்கும் செயற்பாட்டை வலிதாக மேற்கொண்டு வருதல் குறிப்பிடத்தக்கது.

மூன்றாம் உலக நாடுகளின் கல்விச் செயற்பாடுகளிலே உலக வங்கியின் நேரடியான தலையீடுகள் இடம்பெறத் தொடங்கியுள்ளன. உலகவங்கியின் பரிந்துரைகளுக்கு அமைந்தவாறு "கட்டுமானச் சீராக்கங்கள்" *(Structural Adjustments)* மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றின் வழியாக இரண்டு முக்கியமான செயற்பாடுகள் முன் னெடுக்கப்படுகின்றன. அவை:

(1) அதிக அளவான தனியார் மயமாக்கலைக் கல்வியிலே முன்னெடுத்தல்.

(2) நிறுவனங்கள் கல்விக்கு இட்ட செலவுகளை மாணவரிட மிருந்து மீளப்பெற்றுக் கொள்ளல்.

மேற்கூறிய இரு செயற்பாடுகளும் கல்வியிலே தனியுரிமைப் போக்கினையும், வேறு பிரித்துச் செயற்படலையும் ஊக்குவிக்கின் றன. அந்நிலையிலே கல்வியிலே சமவாய்ப்பும், சமசந்தர்ப்பமும் சமகணிப்பும், தகர்ப்புக்கு உள்ளாக்கப்படுகின்றன. தனியார் மயப் படுத்தலிலே இலாப நோக்கம் கருதி அதிக கட்டண வசூலிப்புக்குக் கல்வி வழங்கல் உள்ளாக்கப்படுகின்றது. மானியங்கள் கைவிடப்படு கின்றன. அத்தகைய நிலை வறியவர்களுக்குக் கல்வியிலே நிராகரிப்பை ஏற்படுத்தி வருகின்றது.

கல்வியிலே சமத்துவம் சமவாய்ப்பு, ஆகியவற்றை ஏற்படுத்தும் வகையிலே திறந்த கல்வி, மற்றும் தொலைக்கல்வி முதலாம் நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் அவற்றின் அனுகூலங் களை வாய்ப்பு மிக்கோரே பெற்றுக்கொள்கின்றனர். வறியோர் முழுநேர வேலைகளுக்குச் சென்றுவிடுவதாலும், உடலுழைப்பு வேலைகளால் உருவாக்கப்படும் களைப்பு மற்றும் சோர்வினாலும், கற்றலைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப் படுகின்றனர்.

மூன்றாம் உலக நாடுகளிலே காணப்படும் அகநிலை முரண் பாடுகள் கல்வியிலே சமத்துவத்தையும் சமசந்தர்ப்பங்களையும் பாதிப்படையச் செய்கின்றன. அந்நாடுகளிலே காணப்படும் கிராம - நகர ஏற்றத்தாழ்வுகள், பிரதேச வேறுபாடுகள், இனத்துவ நிராகரிப் புச் செயற்பாடுகள், பால்நிலைச் சுரண்டல்கள் மற்றும் ஆளுவோர் தமக்குச் சார்பாக உருவாக்கிக்கொள்ளும் அபிவிருத்திக் கோட்பாடு கள் முதலியவை கல்வி வழங்கலிலே சமத்துவப் பிறழ்வுகளை ஏற் படுத்துகின்றன. இலங்கையின் கல்வி வழங்கலிலே தனி மாணவருக் குரிய செலவை ஒப்புநோக்குகையில் கொழும்பிலுள்ள பிரபலப் பாடசாலைகளுக்கும் மன்னார் மற்றும் மொனராகலை மாவட்டங் களிலுள்ள பிரதிகூலமெய்திய பாடசாலைகளுக்குமிடையே பாரிய ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. பாடசாலைகளில் இடம்பெறும் கலைத்திட்ட வளம் மற்றும் இணைந்த கலைத்திட்ட வளம் ஆகிய வற்றிலே பாரிய வேறுபாடுகள் காணப்படுதல் சமவாய்ப்புக்குப் பாதகமான அமைப்பியல் நிலவரங்களாகின்றன.

சமவாய்ப்பு சமூக சூழல் நிலவரங்களினாலும் பாதிக்கப்படுகின் றது. வீடு என்ற உடனடிச் சூழலில் இடம்பெறும் வறுமையும், வளப் பற்றாக்குறைகளும் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. வீடுகளின் அண்மைநிலைச் சூழலாக்கத்திலே பாரிய ஏற்றத்தாழ்வுகள் காணப் படும் பொழுது சமவாய்ப்புக்கள் பாதிப்புக்கு உள்ளாக்கப்படும். கற்றல் ஊக்குவிப்புக்குரிய நூலக வாய்ப்புக்கள், கல்வி வளவாய்ப்புக் கள், ஆகியவற்றிலே காணப்படும் பரம்பல் ஏற்றத்தாழ்வுகள் சமவாய்ப்பைத் தாக்கும். இலங்கையிலே நூலகங்கள் இல்லாத கிரா மங்கள் உள்ளன. நூலகங்கள் உள்ள கிராமங்களிலும் சிறார்க்குரிய நூல்களும், பாடசாலைப் படிப்பை வளமூட்டும் நூல்களும் பற்றாக் குறையில் இருத்தலைக்கள ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. (கிழக்குப்

பல்கலைக்கழகத்துக் கல்வியியல் முதுமாணிகள் மேற்கொண்ட கள ஆய்வுகள் 2009)

இலங்கையின் கல்வி வரலாற்றிலே சமசந்தர்ப்பம், சமவாய்ப்புத் தொடர்பான கருத்தெழுச்சிகள் பின்காலனியச் செயற்பாடுகளோடு இணைந்திருந்தன. காலனித்துவச் சிந்தனைகளோடு முரண்பட்டு எழுந்த சமய மறுமலர்ச்சி இயக்கங்களும் அவற்றின் கல்விச் செயற்பாடுகளும் சமசந்தர்ப்ப ஏற்பாடுகளை முன்னெடுத்தன. ஆங்கிலம் தமிழ் ஆகிய இருமொழிகளையும் வாய்ப்பு வசதி குன்றிய வறிய மாணவர் கற்றுக்கொள்வதற்குரிய ஏற்பாட்டினை முன்னெடுக்கும் வகையிலே ஆறுமுக நாவலர் "சைவ ஆங்கில கலாசாலை" என்ற அமைப்பை நடைமுறைப்படுத்தலானார். மேலும் இலவச உணவுத் திட்டம், கஞ்சித் தொட்டித்தருமம் முதலியவற்றையும் அவர் ஆரம்பித்தார்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஆங்கிலக் கல்வியினூடாக மார்க்சிய சிந்தனைகளையும், பிரித்தானிய தொழிற் கட்சியினது முற்போக்கு எழுத்தாக்கங்களையும் கற்று வினைப்பாடுகளை முன்னெடுத்த தேசிய எழுகுழாத்தினர் *(Elites)* கல்வியிலே சமவாய்ப்பையும் சம சந்தர்ப்பத்தையும் வலியுறுத்தினர். சேர். பொன். அருணாசலம் அவர்கள் நிராகரிப்புக்கு உள்ளாகி நின்ற ரொடிய மக்களுக்குரிய கல்விச் செயற்பாடுகளின் முக்கியத்துவத்தைக் குடிமதிப்பு அறிக்கையிலே சுட்டிக்காட்டினார். கலாநிதி என்.எம்.பெரேரா அவர்கள் இலவசக்கல்வி ஏன் அவசியம் என்பதை விளக்கி ஒரு நூலை எழுதினார்.

யாழ்ப்பாணத்தில் 1920ஆம் ஆண்டிலிருந்து வளர்ச்சிபெறத் தொடங்கிய இளைஞர் காங்கிரஸ் என்ற அமைப்பு, தேசிய கல்விக் கொள்கை ஒன்றை உருவாக்குதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. அந்த அமைப்பிலிருந்து செயற்பட்ட வினைப்பாட்டாளர்களாகிய ஹன்டி பேரின்பநாயகம் மற்றும் சுவாமி விபுலானந்தர் ஆகியோர் கல்வியிலே சமவாய்ப்பு கிடைக்கப் பெற வேண்டுமென் பதை ஆழ வலியுறுத்தியதுடன் இலங்கைக்குப் பொருத்தமான கலைத்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு கருத்துக்களையும் முன்மொழிந்தனர்.

அவற்றைத் தொடர்ந்து உருவாக்கம் பெற்ற கன்னங்கராவின் கல்விச் சீர்திருத்தங்கள் கல்வியிற் சமசந்தர்ப்பத்தை வழங்குவதற் குரிய பின்வரும் நடவடிக்கைகளை முன்னெடுத்தன.

(1) இலவசக் கல்வி ஏற்பாடு

(2) தாய்மொழிக் கல்வி ஏற்பாடு

(3) அனைத்து வசதிகளும் கொண்ட மத்திய மகாவித்தியாலயங்களை உருவாக்கியமை.

(4) இலவச மதிய உணவு வழங்கல்.

(5) புலமைப் பரிசில் திட்டம் ஏற்பாடு

சமவாய்ப்பு நோக்கிய பாய்ச்சலை கன்னங்கராவின் கல்விச் செயற்பாடுகள் முன்னெடுத்தாலும், அவற்றின் வாய்ப்புக்களை மத்திய தரத்தினரே பெருமளவிற் பயன்படுத்திக் கொண்டனர். சமூகத்தின் அடித்தளத்து வறிய மக்கள் பெருந்தோட்டத்து மக்கள் உட்பட, அந்த அனுகூலங்கள் கிடைக்கப் பெறாதவர்களாகவே இருந்தனர்.

கல்வியிலே சமசந்தர்ப்பம் நோக்கிய பயணத்தில் இலங்கையில் அடுத்து முக்கியத்துவம் பெறும் திருப்பு முனையாக 1972ஆம் ஆண்டின் கல்விச் சீர்திருத்தங்கள் அமைந்தன. அவற்றின் சிறப்புப் பரிமாணங்கள் வருமாறு.

(1) இலங்கை முழுவதற்கும் பொதுவான கலைத்திட்ட உருவாக்கம்.

(2) கனிஷ்ட இடைநிலை மட்டத்தில் இடம்பெற்ற கலை - விஞ்ஞானம் என்ற இருமைப்பாடு ஒழிக்கப்பட்டமை.

(3) கலைத்திட்டம் சமநிலை கொண்டதாக உருவாக்கப்பட்டமை.

(4) ஏட்டுக்கல்விக்கு அளித்த முக்கியத்துவம் முன்றொழிற் பாடங்களுக்கும் வழங்கப்பட்டமை.

(5) கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், அழகியல் போன்ற பாடங்கள் முன்னர் வாய்ப்பு மிக்க பாடசாலைகளிலே மட்டும் கற்பிக்கப்பட்ட நிலை புதிய மாற்றத்தினால் விரிவாக்கம் பெற்றது. அப்பாடங்களை அனைத்து மாணவரும் கற்கும் நிலை உருவாக்கப்பட்டது.

(6) அனைத்துப் பாடங்களுக்குமுரிய பாடநூலாக்கங்களையும் ஆசிரியர் கையேடுகளையும் அரசே வெளியிடும் பொறுப்பு மேற்கொள்ளப்பட்டது.

(7) கல்வி விரிவாக்கத்துக்குத் துணை நிற்கும் வகையிலே வானொலியின் பங்களிப்புப் பெறப்பட்டது.

முன்னதாக 1960, 1961 ஆம் ஆண்டுகளில் நிகழ்த்தப்பட்ட பாடசாலைகளை அரசுடைமையாக்கும் செயற்பாடுகள் கல்வியிலே சமசந்தர்ப்பத்தை நோக்கிய நடவடிக்கை என்று குறிப்பிடப்படுதலை ஏற்றுக்கொள்ள முடியுமா என்ற வினா எழுப்பப்படுகின்றது. "பாடசாலைகளை மீள் ஒழுங்குபடுத்தல்" என்ற மகுடத்திலே இலங்கையின் தென்பகுதியிலே இயங்கி வந்த பல தமிழ்ப் பாடசாலைகளும் தமிழ்ப் பிரிவுகளும் மூடப்பட்டன. மேலும், திருநெல்வேலி ஆசிரியர் கலாசாலை, கொழும்புத்துறை மற்றும் நல்லூரில் இயங்கி வந்த ஆசிரிய கலாசாலைகள் அரசுடைமை யாக்கலைத் தொடர்ந்து மூடப்பட்டன.

இலங்கையிலே வளர்ச்சிபெற்று வந்த குரூரமான இனத்துவ முரண்பாடுகள் கல்வியிலே சமசந்தர்ப்பத்தை நோக்கிய நெடும் பயணத்திலே தொடர்ந்த எதிர்த் தாக்கங்களை ஏற்படுத்தின. தேசிய நோக்கிலே கல்வியை நோக்குதல் தளர்ச்சியுற்றது. இனத்துவ நோக்கிலே செயற்படல் மேலெழத் தொடங்கியது. அத்தகைய எதிர்வினைப்பாடுகளிடையேயும், இலவச பாடநூல், இலவச சீருடை, நவோதயப் பாடசாலைகள், வெளிச்சவீட்டுப் பாடசாலை கள், இசுறு பாடசாலைகள் முதலியவை சமவாய்ப்பை நோக்கிய நகர்ச்சிக்கு விசையூட்டுகின்றன.

பெருந்தோட்டப் பாடசாலைகள் படிப்படியாக தேசியக் கட்டமைப்பினுள் படிப்படியாகக் கொண்டு வரப்பட்டாலும், கல்வி வள நிலையில், அவை பின்தங்கிய நிலையிலே காணப்படுகின்றன. சிரேட்ட இடைநிலைக் கல்வியை வழங்குவதில் அவை மிகவும் பின்னடைந்த நிலையிலே இன்று காணப்படுகின்றன.

***

# சிவில் சமூகமும் கல்வியும்

கல்வியும் சிவில் சமூகமும் (Civil Society) அல்லது குடிமைச் சமூகமும் அண்மைக் காலமாக விதந்து பேசப்படும் ஒரு கருப்பொரு ளாகவுள்ளது. அரசுக்கும் அரச நிறுவனங்களுக்கும் வெளியால் இயங்கும் ஒரு சமூகப் பிரிவாகவும், பண்பாட்டு அமைப்பாகவும், சிவில் சமூகம் அடையாளப்படுத்தப்படுகின்றது. அரச நிறுவனங்க ளின் அதிகாரங்கள் கட்டுக்கடங்காது பெருகிச் செல்லும் நிலையில் சிவில் சமூகத்தால் அவற்றைக் கட்டுப்படுத்தி விட முடியும் என்ற இலட்சியவாதமும் ஆதர்ஸ நோக்கும் ஒருபுறம் காணப்படுகின்றன. மறுபுறம் அது அடிப்படையான சமூக மாற்றத்தைப் பின்தள்ளி விடு கின்ற மயக்கமுறும் நடவடிக்கை என்றும் குறித்துரைக்கப்படுகின்றது.

அரச அதிகாரப் பிடியிலிருந்து தனிமனிதர்களைப் பாதுகாத்தலே சிவில் சமூகமாகின்றது என்ற கருத்தை ரொக்குவிலி (Tocqueville) முன்வைத்தார். சிவில் சமூகம் தொடர்பாக மார்க்சிய சிந்தனையா ளரிடத்து இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன. அது பயன்குன்றிய நடவடிக்கை என்று ஒரு சாராரும், அதன் வழியாக சில இலக்கு களை எட்டலாம் என்று இன்னொரு சாராரும் வாதிடுகின்றனர்.

கல்வியும் சிவில் சமூகமும் பற்றி விளங்கிக்கொள்வதற்கு மேலும் ஆழ்ந்து நோக்க வேண்டியுள்ளது. சில குறிப்பிட்ட இலக்குகளை அடைவதற்கு சிலர் ஒன்றிணைந்து குறித்த நடத்தையை முன்னெடுக் கும் பொழுது சிவில் சமூகம் உருவாக்கம் பெறுகின்றது. சிவில் சமூகம் என்ற பிரிவிலே பல்வேறு நிறுவனங்கள் தோற்றம் பெறுகின்றன.

கல்விக் கழகங்கள், வாண்மைக் கழகங்கள், கலை இலக்கிய நிறுவனங்கள், தொடர்பாடல் நிறுவனங்கள், பண்பாட்டு அமைப்புக்

கள், சமய நிறுவனங்கள் என்றவாறு சிவில் சமூக நிறுவனங்கள் உருவாக்கம் பெறுகின்றன. சில ஆய்வாளர்கள் அரசியற் கட்சிகளையும் சிவில் சமூகம் என்ற பிரிவில் உள்ளடக்குவர். அடம்பேர்குசன் (1766) போன்ற ஆய்வாளர்கள் சிவில் சமூகமே சமூகத்தின் உன்னத வடிவம் என்றும் பதினெட்டாம் நூற்றாண்டிலே விதந்துரைத்தனர்.

உலகக் கல்வி வரலாற்றை நோக்கும் பொழுது கல்விச் சீர்திருத்தங்களிலே சிவில் சமூகத்தினர் குறிப்பிடப்பட்ட பங்களிப்பை மேற்கொண்டு வந்துள்ளனர். காலனித்துவ ஆட்சியில் இந்தியாவிலும் இலங்கையிலும் தோற்றம்பெற்ற சமய மறுமலர்ச்சியிலும் கல்வி மறுமலர்ச்சியிலும் சிவில் சமூகத்தினரது பங்கு சிறப்பாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது. ஆனால் அந்த மறுமலர்ச்சியினால் சமூக அடுக்கமைவின் உயர் நிலையிலிருந்தோரே மிகையான நன்மை களைப் பெற்றுக்கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிவில் சமூகத்தின் கல்வி அனுகூலங்களை வலியுறுத்துவோர் பின்வரும் பரிமாணங்களைச் சுட்டிக்காட்டுவர்.

(1) கல்வி முன்னேற்றம் நோக்கி கூட்டாக, குழுவாகச் செயற்படுதலை முன்னெடுக்கின்றது.

(2) மாற்று வழிகளைக் கண்டறிவதற்குரிய எழுமுறைகள் அதனால் முன்னெடுக்கப்படுகின்றன.

(3) அரசின் பணிகளும் சிவில் சமூகத்தினாலே சுமக்கப்படுகின் றது. கல்விச் செயற்பாடுகளிலே அரசு சார்பற்ற கல்வி நிறு வனங்கள் தொடர்ச்சியாகப் பங்கேற்று வருகின்றன.

(4) கவனம் செலுத்தப்படாத துறைகளிலும், ஓரங்கட்டப்பட்ட விடயங்களிலும் அதன் வழியாகக் கவனம் செலுத்தப்படுகின்றது.

(5) அரசினாற் பயன்படுத்தப்படாத மனித ஆற்றலும், அரச இயந்திரத்தினாற் புறக்கணிப்புக்கு உள்ளாக்கப்பட்ட மனித ஆற்றலும் சிவில் சமூகத்தின் வழியாகப் பயன்படுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றன.

(6) குறித்த அறிவுக் கையளிப்புச் செயற்பாட்டை வரன்முறை சார்ந்த வகையிலும், வரன்முறை சாரா வகையிலும் அவை முன்னெடுக்கின்றன.

(7) அரசின் கவனிப்புக்குப் பெருமளவிலே உள்ளாக்கப்படாத முன்பள்ளிக் கல்வி, மாற்றுவலுவுடையோருக்கான கல்வி முதலியவற்றிலே சிவில் சமூகம் கூடிய கவனத்தைச் செலுத்துகின்றது.

(8) விளைஞர்களின் *(Clients)* கல்வி விருப்பினை அரசைக் காட்டிலும் கூடிய ஆர்வத்துடன் சிவில் சமூகம் அணுகிச் செல்கின்றது.

(9) சில சந்தர்ப்பங்களிலே அரசைக் காட்டிலும், வினைத்திறன் கொண்ட தொடர்பாடலையும், மக்கள் பங்களிப்பையும் அவை முன்னெடுக்கின்றன.

(10) பன்மைநிலை கொண்ட நாடுகளிலே அரசின் ஒற்றைப் பரிமாண நோக்கினையும் அணுகுமுறைகளையும், தனியுரிமைச் செயற்பாடுகளையும் ஓரளவிலேனும் தடுத்துக் கொள்வதற்கு சிவில் சமூகங்கள் உதவுமென நம்பப்படுகின்றது.

கல்வி உரிமைகளை வலியுறுத்துதல், சமூகக் குழுக்களுக்கும் தனிமனிதருக்குமுரிய கல்வித் தேவைகளை இனங்காணுதல், கல்வியிலே நிறைவேற்றப்படாத பரப்புக்கள் மீது கவனக் குவிப்பை ஏற்படுத்தல் முதலியவற்றைச் சிவில் சமூகங்கள் முன்னெடுக்கின்றன. அவற்றின் பொருட்டு ஊடகங்களைப் பயன்படுத்துதல், கருத்தரங்குகளை அமைத்தல் முதலாம் அறிகை சார்ந்த செயற்பாடுகளும் ஒழுங்கமைக்கப்படுகின்றன. ஆனால் அவை சில வேளைகளிலே எதிர்மறையான செயற்பாடுகளையும் புரிகின்றன. சிறுபான்மைக்குரல்கள், தேசிய இனங்கள் முதலியவற்றை ஒடுக்குவதற்குரிய சிவில் சமூகங் களும் பல்லின மக்கள் வாழும் நாடுகளிலே காணப்படுகின்றன.

சமகாலச் சமூகம் பல்வேறு மாற்றங்களைச் சந்தித்து வருகின் றது. ஆனால் அந்த மாற்றங்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய பன்முகமாகிய கல்விச் செயற்பாடுகள் முறைசார்ந்த வகையிலும், முறைசாரா வகையிலும் இடம்பெறுகின்றனவா என்பது கேள்விக்குரியது. சமகாலச் சமூக மாற்றங்களைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

(1) மரபு வழியான குடும்ப உறவிலும், கட்டமைப்பிலும் நிகழ்ந்த தகர்ப்புக்கள், யுத்தம், சுனாமி, இடப்பெயர்வு முதலியவற்றால் நிகழ்ந்த இழப்புக்களும் நொருங்குண்ட குடும்பங்களும், மரபுவழியான குடும்பங்கள் கல்வியிலே மேற்கொண்ட

கவனத்தைச் சமகாலத்திலே மேற்கொள்ள முடியாத தடைகளும், இடர்களும், இயலாமையும்.

(2) பின்னைய முதலாளியத்தின் பரந்துபட்ட வளர்ச்சியும் மாற்று வகையான முகாமைத்துவக் கோலங்களும், கல்வியிலே நேரடியாகத் தலையிடுதல் வளர்ச்சி பெறத் தொடங்கியுள்ளமை.

(3) பல்வேறுபட்ட தொழில் முறைகள் சார்ந்த துணைப்பண்பாடுகளின் *(Subcultures)* வளர்ச்சியும் அவற்றுக்கிடையே காணப்படும் இணக்கமும் பிணக்குகளும்.

(4) உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் சேவை நிறுவனங்களிலே இடம்பெற்று வரும் மனிதம் சாரா உறவுகள் *(Impersonality of Relationship)* அதாவது ஒருவரது உணர்வை மற்றவர் புரிந்துகொண்டு வர்க்க உணர்வுடன் தொழிற்படுவதற்கு இடையூறாகக் காணப்படும் நிலவரங்கள். உதாரணமாக ஒருவர் ஒரு தொழில் நிலையத்திலிருந்து நீதியற்ற முறையிலே வெளியேற்றப்படும் பொழுது அது அவருக்குரிய சொந்தப் பிரச்சினையாகச் சுட்டிக்காட்டப்படுகின்றதேயன்றி வர்க்கப் படாது திரிபாக்கம் மேற்கொள்ளப்படுதல்.

(5) நவீன சமூக வளர்ச்சியும், பிள்ளைகளுக்குரிய கல்வி நெருக்கீடுகளும், வருமானப் பின்னடைவுகளும் பெண்களுக்குரிய சுமைத்தாங்களை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளன. பிள்ளைகளின் கல்விப் பின்னடைவுகளுக்கு தந்தையரைக் காட்டிலும் தாய்மாரே கூடிய பொறுப்பியத்துக்கு *(Accountability)* உள்ளாக்கப்படுதல்.

(6) நெருக்கீடுகள் நிறைந்த சமூக பொருளாதாரச் சூழலிலே தனிமனிதர் உளவியல் நெருக்குவாரங்களுக்கும், மனமுறிவுகளுக்கும் அன்னியமாதலுக்கும் உள்ளாகி வருதல். போதைப் பொருட்களின் பன்முகப்பட்ட வளர்ச்சியும் நுகர்ச்சியும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளமை.

சமூகத்திலே பலவீனங்கள் மலியும் பொழுதும், அறியாமை பரவலாகக் காணப்படும் பொழுதும் அதிகார மையங்கள் வளர்ச்சி யுறத் தொடங்குகின்றன. அரச அதிகாரத்துக்கு எதிராகத் தோற்றம் பெறும் சிவில் சமூகங்களே அதிகார மையங்களாக மாறிவிடும் முரண்விசைகளும் தோற்றம் பெறுதல் உண்டு.

அந்நிலையிலே சிவில் சமூகம் அனைத்தையும் ஒரே தராதரத்துக் குள் அடக்கிவிட முடியாது. ஆய்வுநிலையிலே சிவில் சமூகங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தவேண்டியுள்ளது.

(1) சீர்திருத்தங்களை முன்னெடுப்பவை: அடிப்படையான சமூக மாற்றத்தை ஏற்படுத்தாது; சில துறைகளிலே மாற்று நடவடிக் கைகளையும் செம்மைப்பாடுகளையும் முன்னெடுப்பவை.

(2) எதிர்த்தலையும் தாக்குப் பிடித்தலையும் மேற்கொள்பவை, அவற்றை எதிர்க்கட்டு வகை *(Resistance Type)* என்று குறிப்பிடலாம்.

(3) புரட்சியை முன்னெடுப்பவை சுரண்டலும் பறிப்பும் மிக்க சமூக அமைப்பை அடியோடு புரட்டி மாற்றியமைத்துப் புதிய சமூகத்தையும், புதிய பண்பாட்டையும் முழுநிறைவான ஆளுமை வளர்ச்சிக்குரிய ஊறுபடாத கல்வியையும் முன்னெ டுக்கும் வகை.

நவீன சமூகங்களின் இயல்பும் ஆட்சி முறைமைகளும், அவற்றின் மறுபக்கங்களும் சிவில் சமூகத்தைத் தோற்றம் பெறச் செய்கின்றன. சிவில் சமூகத்தின் தோற்றத்திலும், வளர்ச்சியிலும், ஊடாட்டங்களிலும் அறிவுக் கையளிப்பும் தொடர்பாடலும் என்ற செயற்பாடுகள் சிறப்பிடம் பெறுகின்றன. சிவில் சமூகத்திலே அறிவும் வினைப்பாடுகளும் *(Actions)* ஒன்றிணைக்கப்படுகின்றன.

கல்வியியல் என்பது மிகுந்த ஆழமானதும், ஆய்வு பூர்வமான தும், முற்றிலும் வாண்மை சார்ந்ததுமான ஒருதுறை. ஆனால், மூன்றாம் உலக நாடுகளிலே கல்விக் கொள்கைகளை உருவாக்குதல் கல்வியைத் திட்டமிடுதல், கலைத்திட்டங்களை வடிவமைத்தல் கல்வியின் செயலாற்றுகையை நெறிப்படுத்துதல் முதலியவற்றிலே கல்வியியல் சாராத பிறதுறைகளைச் சார்ந்தோரே ஈடுபடுத்தப்படுவ தால், பாரிய பின்னடைவுகளும் எதிர்விளைவுகளும் காணப்படு கின்றன. அதேநிலை கல்வி தொடர்பான சிவில் சமூகத்திலும் காணப்படுகின்றது.

***

# கல்வியுலகும் கேடுறுத்தலும்

"கல்வியும் கேடுறுத்தலும்" என்பது கருத்தாடல்களுக்குரிய பிரச்சினையாக மேலெழுந்துள்ளது. கேடுறுத்தல் *(Corruption)* என்பதில் இலஞ்சம் பெறுதல், அதிகாரத்தைத் தவறான வழியிலே பயன்படுத்துதல், முறைகேடாக நடந்துகொள்ளல், கல்விச் செயற்பாடுகளை வலுவிழக்கச் செய்தல் முதலிய பல செயற்பாடுகள் உள்ளடங்குகின்றன. சுரண்டல் மிக்க சமூகத்திலே கேடுறுத்தல் மேலிருந்து கீழ்நோக்கிப் பலநிலைகளிலே இடம்பெறும். தாழ்ந்த பொருண்மிய ஆற்றுகை மற்றும் கல்வி ஆற்றுகைக்கும் கேடுறுத்த லுக்குமிடையே நேர்நிலை இணைப்புக்கள் இருத்தலை ஆய்வுகள் புலப்படுத்துகின்றன.

கல்வியியற் சட்டங்கள் வலுவற்றதாகவும் வினைத்திறன் குன்றியதாகவும் இருத்தலால் கேடுறுத்தல் மேலிருந்து கீழ்நோக்கிப் பலநிலைகளிலே இடம்பெறும். தாழ்ந்த பொருண்மிய ஆற்றுகை மற்றும் கல்வி ஆற்றுகைக்கும் கேடுறுத்தலுக்குமிடையே நேர்நிலை இணைப்புக்கள் இருத்தலை ஆய்வுகள் புலப்படுத்துகின்றன.

கல்வியியற் சட்டங்கள் வலுவற்றதாகவும் வினைத்திறன் குன்றியதாகவும் இருத்தலால் கேடுறுத்தல் நிகழும் வாய்ப்புக்கள் அதிகம் என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது. எதிர்மறையான தொழிற்பாடுகள் கொண்ட சமூகக் கட்டமைப்பிலே சட்டங்களால் மட்டும் கேடுறுத்தலை நீக்கிவிட முடியுமா என்ற வினாவும் எழுகின்றது.

உத்தியோகத்தர்களுக்குரிய சம்பளத் திட்டங்கள் தாழ்ந்த நிலையில் இருப்பதாலும், ஊக்குவிப்புக்கள் போதாமையில் உள்ளதாலும், மாறுபட்ட வழிகளிலே அனுகூலங்களை அடைய அவர்கள் உந்தப் படுகின்றனர் என்பது வளர்வுறும் நாடுகளின் அனுபவமாகவுள்ளது.

கல்வியிலே கேடுறுத்தல் பின்வழிகளில் இடம்பெறுதல் சுட்டிக்காட்டப்படுகின்றது.

(1) பெரும் கட்டுமானங்களுக்கும் திட்டங்களுக்கும் ஒப்பந்தங்கள் வழங்கப்படுதலில் நிகழும் கேடுறுத்தல்கள் - அவ்வாறானவை பெரும் கேடுறுத்தல்கள் *(Grad Corruptions)* என்று பெயரிடப் படுகின்றன. *(Moody Stewart, 1997)* உலகில் மிகுந்த நேர்மை யான நாடுகள் என்று குறிப்பிடப்படும் ஸ்கந்திநேவியன் நாடுகள், சிங்கப்பூர் மற்றும் நியூசிலாந்து முதலிய நாடுகளிலும் கேடுறுத்தல் நிகழ்வதாகச் சுட்டிக்காட்டுகின்றனர். *(Zimbabwe Quarterly Report, 6/95)*

மேலும் விரிவாகக் கூறப்போனால் பெரும் கேடுறுத்தல்கள் பல்தேசிய நிறுவனங்களின் விருப்பங்களுக்கும், அவர்கள் உருவாக்கும் செயற்றிட்டப் பரிமாணங்களுக்கும் ஏற்றவாறு உருவாக்கப்படுகின்றன. அவை சமூக நோக்கினுக்கு மாறாக அங்கீகாரம் வழங்குதலுடன் ஆரம்பமாகின்றன. தேவையற்ற பொருட்களை மிகையாக இறக்குமதி செய்தலுடனும் அவை தொடர்புபட்டு நிற்கின்றன. மிகையாக இறக்குமதி செய்தல் மட்டுமன்றிக் கூடிய விலைக்கு இறக்குமதி செய்தலும் குறிப் பிடப்படுகின்றது. நைஜீரியாவின் சீமெந்து இறக்குமதியில் (1975) இந்த நிலை காணப்பட்டதாக ஆய்வாளர் குறிப்பிட் டுள்ளனர். அந்நிலையிலே பெரும் செயற்றிட்டங்களை அரசு முன்னெடுக்காது தனியார் துறைக்குக் கையளித்தால் கேடுறுத் தல் நிகழமாட்டாது என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது. தனியார் நிறுவனங்களின் உள்ளக இயக்கத்திலே கேடுறுத் தல்கள் ஓரளவு கட்டுப்படுத்தப்படுமாயினும் அந்நிறுவனங்கள் மேற்கொள்ளும் உச்ச இலாப நடவடிக்கைகளும் சுரண்டல் களும் சமூகத்துக்குப் பெரும் பாதகங்களையே உருவாக்கும்.

(2) கல்வித்துறையில் புலமைப் பரிசில் வழங்கல், விருது வழங்கல், அன்பளிப்பு வழங்கல் முதலியவற்றாலும் கேடுறுத்தல் இடம் பெறுதலை நடைமுறைகள் சுட்டிக்காட்டுகின்றன. குறிப்பிட்ட கருத்தியலை வளர்முக நாடுகளிலே திணிப்பதற்கும் கல்விச் செயற்பாடுகளின் வழியாகக் கருத்தேற்றம் செய்வதற்கும் மேற்கூறிய வழங்கற் செயற்பாடுகளை வளர்ச்சியுற்ற நாடுகள்

முன்னெடுக்கின்றன. பெரும் பதவிகளில் உள்ளோரும், உயர் கல்வி நிலையங்களில் உள்ள புலமையாளரும் இவற்றின் செல்வாக்கினுக்கு உட்படும் வாய்ப்புக்கள் அதிகமிருத்தல் சுட்டிக்காட்டப்படுகின்றது.

(3) மேலும் உயர்கல்வி நிறுவனங்களும் கேடுறுத்தற் செயற்பாடு களுக்கு விதிவிலக்கானதன்று என்பதும் கண்டுபிடிக்கப்பட் டுள்ளது. கேடுறுத்தற் செயற்பாடுகளினால் ஆற்றலுள்ள மாணவர்கள் புறந்தள்ளப்படுதலும், செயலாற்றலும், புலமை நாட்டமும் குன்றியோர் மேலுயர்த்தப்படலும் கண்டறியப்பட் டுள்ளன.

(4) கல்வியியலிலே தவறான கட்டுமான ஆக்கங்களைச் சுயநலம் கருதி மேற்கொள்ளல், தரங்குறைந்த பொருட்களை வழங்கு தல், கலைத்திட்டத்துக்குப் பயனற்றவற்றைக் கொள்முதல் செய்தல் முதலியனவும் கேடுறுத்தலுடன் இணைந்த செயற்பா டுகளாகக் கொள்ளப்படுகின்றன. கல்வி நலனைக் கருத்திற் கொள்ளாத நியமனங்களும் இடமாற்றங்களும் வள ஒதுக்கீடு களும் கேடுறுத்தல்களாகின்றன.

கேடுறுத்தலிலே இலஞ்சம் கொடுப்பவரும் வாங்குபவரும் நன்மை பெறுகின்றனர். அவற்றின் கேடுகளைச் சமூகமே அனுபவிக் கத் தொடங்குகின்றது. அவற்றினால் மேலெழும் புதிய உளப்பாங்கு மாற்றங்களையும் சமூக உளவியலாளர் ஆராய்ந்துள்ளனர். இலஞ்சம் கொடுத்தலும் வாங்குதலும் சட்டபூர்வமாகத் தடை செய்யப்பட் டாலும் அவற்றைக் கொடுத்தல் தவறில்லை என்ற புதிய உளப்பாங்கு உருவாக்கம் பெறத் தொடங்குகின்றது.

வளர்வுறும் நாடுகளில் வளர்ச்சி பெற்றுவரும் செயலாற்றுகை அறியாமையும் வினைத்திறன் குன்றியிருத்தலும் கேடுறுத்தல்களுக்கு இட்டுச் செல்கின்றன. குறிப்பிட்ட வேலைகளைப் பணிமனைக்குள், செயலாற்றாதுவிடலும் காலம் தாழ்த்தலும் இலஞ்சம் கொடுத்தலை யும் பெறுதலையும் ஊக்குவிக்கின்றன. இலங்கையிலே ஓய்வூதியம் பெற்றுக்கொள்வதிலே உள்ள சிக்கலான ஆவண முறைகளும் செயல்முறைகளும் அவ்வாறான நிலைகளுக்கு இட்டுச் செல் கின்றன. ஓய்வூதியம் பெறுவதில் ஆசிரியர்களே ஒப்பீட்டளவிலே கூடுதலான நெருக்கடிகளை எதிர்கொள்வதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கேடுறுத்தல் பற்றி ஆராயும் ஆய்வாளர்கள், புலப்படும் *(Visible)* கேடுறுத்தல்களைக் காட்டிலும் வெளித்தோன்றாதவையே! அதிக ஆபத்தானவை என்று குறிப்பிட்டுள்ளனர். அதன் தாக்கம் பெருமளவு மக்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

சுயநலம் அல்லது தன்னலம், மற்றும் பொதுநலம் இரண்டுக்கு மிடையேயுள்ள மோதலை அடியொற்றிக் கேடுறுத்தல் நிகழும்பொழுது அரசமுறை எப்பக்கம் சார்ந்து இயங்குகின்றது என்பதையும் ஆய் வாளர் ஆழ்ந்து நோக்குகின்றனர். ஆரம்பகாலத்து ஆய்வாளர்கள் அதனைப் பின்வரும் வழிகளிலே நோக்கினர்.

(1) முகாமைத்துவம் சார்ந்த பிரச்சினை.

(2) திட்டவட்டமாகக் கண்டறிய முடியாத ஒரு மௌனமான செயற்பாடு.

(3) அபிவிருத்தி நெருக்கடியோடு சார்ந்த சுயநலச் செயற்பாடு.

(4) இலாப நோக்கற்ற நிறுவனங்களின் ஆராயப்பட வேண்டிய பிரச்சினை.

(5) அறவொழுக்க நடத்தைகளோடு இணைந்த பிரச்சினை.

கல்வியியற்றொகுதியில் எவ்வெவ் பிரிவுகளிலே தவறான வழி முறைகளும், கேடுறுத்தல்களும் நிகழ்கின்றன என்பவை ஆழ்ந்த நோக்கலுக்கு உட்படுத்தப்படுகின்றன. கல்வி மனிதவள விருத்தி யோடு நேரடியாகத் தொடர்புற்று நிற்பதனால் அத்துறையிலே அவ தானிப்புக்களும் ஆய்வுகளும் தொடர்ச்சியாக வலியுறுத்தப்படு கின்றன. கல்வித்துறையில் மேலும் இனங்காணப்பட்ட கேடுறுத் தல்களைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

(1) கல்வி நிலையங்களுக்குரிய நுழைவு தொடர்பாக நிகழ்பவை.

(2) இலவசமான பொருள்களின் விநியோகம் தொடர்பானவை.

(3) மதிப்பீடுகள் கணிப்பீடுகள் தொடர்பானவை.

(4) நியமனங்கள், பதவி உயர்வுகள் இடமாற்றங்கள் தொடர்பானவை.

(5) கட்டுமானங்கள் தொடர்பானவை.

(6) கொள்வனவுகள் தொடர்பானவை.

(7) வெகுமதிகள் புலமைப் பரிசில்கள் தொடர்பானவை.

கல்விப் புலத்தில் நிகழும் கேடுறுத்தல் தனி ஒரு நபருக்குரிய தாக்கமாக அமையாது நலத்துக்குரிய தாக்கமாக அமையும். மேலும் கல்வியின் விரிவாக்கமும் பண்பு முன்னேற்றமும் பாதிப்புக்கு உள்ளாகும். தென்கொரியாவிலும், இந்தியாவிலும் தரமற்ற முறை யிலே கட்டப்பட்ட பாடசாலைக் கட்டடங்கள் இடிந்து விழுந்த சம்பவங்களைத் தூர கிழக்குப் பொருளியல் நோக்குச் சஞ்சிகை மற்றும் இந்தியன் எக்ஸ்பிரஸ் முதலியவற்றில் வெளியான கட்டுரைகளிலே சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

கேடுறுத்தலின் இன்னொரு பரிமாணத்தையும் ஆய்வாளர் சுட்டிக்காட்டியுள்ளனர். கேடுறுத்திய நபர் அல்லது நிறுவனம் அல்லது நாடு அவற்றை மூடி மறைப்பதற்குரிய வெகுமதிகளை மாற்றீடாக வழங்கல் உண்டு. அவை "மூடல் வெகுமதிகள்" அல்லது "மூடும் கம்பளங்கள்" *(Covering Carpets)* என அழைக்கப்படும்

பெரும் உட்கட்டமைப்புப் பணிகள் பலநிலை ஈடுபடுத்தல் களைக் கொண்ட சிக்கலானவையாக இருத்தலால் கேடுறுத்தல்க ளுக்கு இலகுவான வாயில்களைத் திறந்து விடுகின்றன என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது. அந்நிலையிலே பெரும் உட் கட்டமைப்புத் திட்டமிடல்களை மேற்கொள்ளும் பொழுது கேடு றுத்தல்களைத் தடுப்பதற்குரிய வழிவகைகளும் வேண்டப்படு கின்றன. ஆனால் திட்டமிடலால் மட்டும் அவற்றைத் தடுத்துவிட முடியுமா என்ற வினாவும் எழுப்பப்படுகின்றது.

கேடுறுத்தல்களை அரச மற்றும் சட்டவாக்க இயல்புகளுடன் தொடர்புபடுத்தி அதிக ஆய்வுகளை மேற்கொண்டோர் குறிப்பிட் டுள்ளனர். ஒடுக்குமுறை அரசுகளின் சட்டவாக்கங்கள் மேட்டுக்குடி யினருக்குச் சார்பாக இருக்கும் நிலையில் கேடுறுத்தல் என்பது வாழ்வதற்குரிய தந்திரமாகவும் மாற்றம் பெற்று விடுகின்றது. தொடர்ந்து அவை நீடித்துச் செல்லும்பொழுது குறித்த பண்பாட் டோடு கேடுறுத்தல் இணைந்து விடுகின்றது.

கல்வியியலில் நிகழும் தவறான கற்பித்தல் முறைகள், மற்றும் கணிப்பீட்டு முறைகள், அறிவு நவீன வளர்ச்சியோடு இணங்கிச் செல்லாத அறிவுக் கையளிப்புச் செயற்பாடுகள் ஆகியனவும் ஒருவிதமான கேடுறுத்தல் என்றே குறிப்பிடப்படுகின்றன. இவ்வகை யான கேடுறுத்தல்களுக்குப் புலமைச் சோம்பலும் ஒரு காரணியா கக் கொள்ளப்படுகின்றது. ஆசிரியத்துவ உளச்சார்பு அற்ற ஒருசாரார் அந்தவாண்மைக்குள் நுழைந்தமையாலும் அவ்விதமான கேடுறுத்தல்கள் தோற்றம் பெற்றுள்ளன.

ஆற்றல் மிக்க ஆசிரியர் புறக்கணிப்புக்கு உள்ளாக்கப்படுதலும், ஆசிரிய வாண்மையைப் புறக்கணிப்புச் செய்வோர் மேலுயர்த்தப் படுதலும் பிறிதொரு வகையான கேடுறுத்தலாகின்றது. கல்வி நிலையங்களிலே ஒருவரது ஆற்றலுக்கும் திறன்களுக்குமுரிய பணிகள் வழங்கப்படாவிடினும் கேடுறுத்தல் என்ற பகுப்புக்குள் அடக்கப்படுகின்றது. அது கல்வி சார்ந்த கீழ் உழைப்பினை அடி யொற்றிய வகைப்படுத்தலாகின்றது.

குறிப்பிட்ட தொழிலைப் புறக்கணித்து பிறதொழில்களைப் புரிதலும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடலும் கேடுறுத்தல் களை ஏற்படுத்துகின்றன. ஆபிரிக்க நாடுகளில் அரச பணியாளர்கள் அவர்களது உத்தியோகங்களோடு இணைந்த வியாபார நடவடிக்கை களில் ஈடுபடல் ஒரு பொதுவான தோற்றப்படாகக் காணப்படுகின் றது. அதுவும் கேடுறுத்தலுக்கு இட்டுச்செல்லும் செயற்பாடாகின்றது.

கிழக்கு ஐரோப்பா, ரூசியா, சீனா ஆகிய நாடுகளிலே அரசும் தனியார் துறையினரும் சேர்ந்து மேற்கொள்ளும் இணைந்த முயற்சிகள் உள்ளன. அந்நிலையில் அரசப் பணியாளர்கள், அரசதுறைக்கா தனியார் துறைக்கா விசுவாசமாகத் தொழிற்படல் என்ற இருமைப்பாங்கு தோற்றம் பெறுகின்றது. இருதுறைகளிலும் சமனான ஈடுபாட்டுடன் அவர்கள் நடந்துகொள்வார்கள் என்பது வெறும் இலட்சிய நோக்காகவேயுள்ளது. அங்கு மோதும் விருப்பங்களே முன்னெடுக்கப்படுகின்றன.

கேடுறுத்தலிற் பிறிதொரு வகையாக அமைவது சேர்ந்து பங்கீடு செய்து கொள்ளலாகும். கேடுறுத்தலால் வரும் நிதியை மேல் உத்தி யோகத்தரும் பணியைச் செயற்படுத்தும் அவரின் கீழ் உள்ள உத்தி யோகத்தரும் சேர்ந்து பங்கீடு செய்துகொள்ளல் ஆகும். அந்நிலையில்

அவை கண்டுபிடிக்கப்படும் பொழுது கீழ் உத்தியோகத்தரே தாக்கங் களுக்குப் பொதுவாக உட்படுகின்றனர். கேடுறுத்தலை நகர்த்தி விடக் கூடிய விதிமுறைகள் இருக்குமிடத்து கீழ் உத்தியோகத்தர் மீது அவை இலகுவாகச் சுமத்தி விடப்படுகின்றன.

கல்வியில் நிகழ்த்தப்பட்டுவரும் தனியார் மயமாக்கல் சமூக நிலையிலே தாக்கங்களை வருவிக்கும் கேடுறுத்தல்களை நிகழ்த்தி வருகின்றன. மேலும் சர்வதேசப் பாடசாலைகளில் அறவிடும் கட்ட ணங்களுக்கிடையே வேறுபாடுகள் தொடர்ந்த வண்ணமுள்ளன. சர்வதேசப் பாடசாலைகளிலே பயிலும் மாணவர், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய தேசிய மொழிகளைத் தாழ்வாகக் கருதும் உளப்பாங் கினை வளர்த்துக்கொள்ளலும் கல்விச் செயற்பாட்டில் நிகழ்ந்துவரும் ஒருவகையான கேடுறுத்தல் என்றே கொள்ள வேண்டும்.

பழைய நூல்களைப் பதிப்பிக்கும் பொழுது இடைச் செருகல் களை மேற்கொள்ளல், ஒருவரது ஆய்வுகளையும் கருத்துக்களையும் குறித்துரைக்காது தமது கருத்துக்களாகக் கூறுதல் முதலியனவும் கல்வியிற் கேடுறுத்தலாக குறிப்பிடப்படுகின்றன. அவற்றைத் தடுப்பதற்கு ஆக்கவுரிமைச் சட்டங்கள் இயற்றப்பட்டு வருகின்றன. நூல்களில் உள்ள குறிப்பிட்ட விடயங்களை எடுத்துப் பயன்படுத்து வதற்குக் கட்டணம் செலுத்த வேண்டும் என்ற சட்ட ஏற்பாடுகள் அறிவைத் தனியுரிமைப்படுத்தலுக்கும் இட்டுச் செல்கின்றன.

அபிவிருத்தியும், சமூக நேர்மாற்றங்களும், மீள்கட்டுமானங்களும் அடிதலையான சமூகப் பெயர்ச்சியும் பற்றிய சிந்தனைகளிலும் வினைப்பாடுகளிலும் "கேடுறுத்தல்" என்ற விடயம் முக்கியமான ஆய்வுப் பொருளாகி வருகின்றது.

***

# இனக்குழும உறவுகளும் விளைவுகளும்

பல இனக்குழுமங்கள் வாழும் நாடுகளிலே மோதல்களைத் தவிர்த்துக் கொள்வதற்கும் ஐக்கியத்தினூடாக நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் கல்வியைப் பயன்படுத்தல் வேண்டும் என்ற கருத்து பலமாக ஒலித்து வருகின்றது. கல்வியின் பொதுவான ஒரு பண்பு அது மேலாதிக்கத்தின் கருவியாக இருத்தலாகும். அந்நிலை யிலே இனக் குழுமங்கள் தொடர்பான மேலாதிக்க நோக்கு கல்வியின் வழிநடத்தலிலே தடம்பதித்துச் செல்லும். உலகக் கல்வி வரலாற்றில் கருமை இனத்தவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கல்வி நடவடிக்கைகள் மேற்கூறிய கருத்தை நன்கு புலப்படுத்தும், காலனித்துவ ஆட்சிக் காலத்திலே மேற்கொள்ளப்பட்ட தேசிய இனங்களைப் பிரித்தாளும் நடவடிக்கைகளின் தொடர்ச்சி மூன்றாம் உலக நாடுக ளில் இன்றும் தொடர்கின்றது. ஆய்வுநோக்கில் இத்துறையிலே பல்வேறு எண்ணக்கருக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு:

(1) ஒடுக்கப்பட்டோருக்கான கல்வி

(2) இனத்துவ ஐக்கியத்துக்கான கல்வி

(3) பன்மைப் பண்பாட்டுக்குரிய கல்வி

(4) அனைத்துலகப் புரிந்துணர்வுக்கான கல்வி

(5) ஊடு பண்பாட்டுக் கல்வி *(Inter Cultural Education)*

(6) மோதல் *(Conflisct)* தவிர்ப்புக்கான கல்வி

(7) பொதுவான அடையாளங்களை *(Collective Identities)* வலியுறுத்தும் கல்வி.

(8) இனக்குழுமத் தனித்துவங்களை மேம்படுத்தும் கல்வி.

(9) சிறுபான்மையினருக்கு வலுவூட்டும் கல்வி

(10) இன உறவுக்கான கல்வி

பல இனங்கள் மற்றும் இனக்குழுமங்கள் ஒன்றிணைந்து வாழும் நிலை "பன்மைச் சமூகங்கள்" என்ற தொடரால் அடையாளப்படுத்தப் படுகின்றது. இனத்துவ வேறுபாடுகளை எதிர்நிலையிற் கூர்மையாக வளர்த்தெடுக்கும் அரசியல் மற்றும் கல்விச் செயற்பாடுகள் இனமோதல் களுக்கு இட்டுச்செல்லும். வாக்குரிமை அரசிய லிலே பெரும்பான்மை இனக்குழுமத்தினரின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காகக் குறுகிய இனக்குழும உணர்வுகள் தூண்டிவிடப் படுதல் உண்டு.

இனக்குழுமங்களை அடையாளப்படுத்துதலில் மொழியும் மதமும் ஆசிய நாடுகளிலே சிறப்பிடம் பெறுகின்றன. சமூக வரலாற் றுக் காரணிகளும், கலைவடிவங்களும், மக்கள் மனங்களில் ஆழ்ந்து ஊடுருவி நிற்கும் தொன்மங்களும் இனக்குழுமங்களை அடையாளப் படுத்தலில் முக்கியத்துவம் பெறுகின்றன. அவற்றின் அடிப்படையாக இனக்குழுமங்கள் பற்றிய "கூட்டுமன உணர்வு" வளர்ந்து வியாபித்து நிற்கும் நிலையில் அவற்றுக்கு எதிர்நிலைக் கூவல் விடுக்கும் அரசியல் மற்றும் கல்வி நடவடிக்கைகள் அச்சத்தையும் மோதல் முனைப்புக்க ளையும் உருவாக்கும். உளவியல் நிலையில் இனக்குழும உயர்வுச் சிக்கல் பெரும்பான்மை இனக்குழுமத்தினருக்கு ஏற்படும் நிலையிற் சிறுபான்மை இனக்குழுமத்தினர் கூட்டு *(Collective)* அவலங்களுக்கு உட்படுவர் இந்நிலையானது மோதலை மேலும் ஊக்குவிக்கும்.

இனக்குழும முரண்பாடுகள் மேலெழுந்த நாடுகளில் இலங்கை யும் ஒன்றாக உலக அரங்கில் வரைபுபடுத்தப்பட்டுள்ளது. அதற்குரிய காரணிகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

(1) காலனித்துவ காலங்களில் இடம்பெற்ற கல்விச் செயற்பாடு களின் உத்தியோக அனுகூலங்களைப் பெற்ற தமிழர்கள், அரசியற் சுதந்திரத்தின் பின் அவற்றை இழந்தமை.

(2) இந்திய வம்சாவழித் தமிழர்களது வாக்குரிமை பறிக்கப்பட்டமை.

(3) அரசியல் வாதிகளால் தூண்டிவிடப்பட்ட குறுகிய இனவாத முனைப்புக்களால் இடம்பெற்ற மோதல்களினால் உயிரிழப் புக்கள், பொருள் இழப்புக்கள் ஏற்பட்டமையும், பிரித்தானியா வைப் பின்பற்றி உருவாக்கப்பட்ட பாராளுமன்ற முறைமையில் நம்பிக்கை இழக்கப்பட்டமையும் அதனால் சிங்கள மற்றும் தமிழ் இளைஞர்கள் மாற்றுவழிகளை மேற்கொண்டமையும்.

(4) குறுகிய இனவாதம் எழுகுழாத்தினருக்கு *(Elites)* தொடர்ந்து அரசியல் மற்றும் பொருளாதார நலன்களைத் தரும் கற்பக தருவாக இருந்தமையால் தொடர்ந்து அதனை வளர்ப்பதில் அவர்கள் உற்சாகம் காட்டி வந்தமை.

(5) அரசியற் சுதந்திரத்துக்குப் பின்னர் சிறுபான்மை இனக் குழு மங்களுக்கு மனக்கவலைகளை உருவாக்கும் குடியேற்றத் திட்டங்கள், அரச உத்தியோகப் புறக்கணிப்புக்கள், மொழி வாயிலான நிராகரிப்பு, உயர்கல்விக்குரிய கட்டுப்பாடு முதலி யவை சிறுபான்மை இனக்குழுமத்தினரிடையே கவலைகளை ஏற்படுத்தலாயின.

அதேவேளை கல்விநிலையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக் கைகள் முரண்பாடுகளை மேலும் வளர்க்கலாயின.

1960ஆம் 1961ஆம் ஆண்டுகளில் உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளையும், ஆசிரிய கலாசாலைகளையும் தேசிய நலன் கருதி அரசு பொறுப்பேற்ற வேளை பெருந்தோட்டப் பாடசாலை கள் அவற்றில் உள்ளடக்கப்படவில்லை. அரசு பொறுப்பேற்றமை யைத் தொடர்ந்து தமிழ்மொழி வாயிலான ஆசிரிய பயிற்சிக் கலா சாலைகளாகிய திருநெல்வேலி சைவ ஆசிரிய கலாசாலை, கொழும் புத்துறை ஆசிரிய கலாசாலை, நல்லூர் ஆசிரிய கலாசாலை ஆகியவை மூடப்பட்டன. பாடசாலைகளை மீள் ஒழுங்குபடுத்துதல் என்ற செயற்பாட்டில் தென் இலங்கையில் இயங்கிய தமிழ்ப் பாடசாலைகள் பல மூடப்பட்டன.

கலைத்திட்ட ஆக்கம், பாட உள்ளடக்கம் பற்றிய தீர்மானங்கள், பாடநூலாக்கம் முதலியவை வலிதான மத்திய கட்டுப்பாட்டின் கீழே கொண்டுவரப்பட்டுள்ளன. கல்வி நிர்வாக சேவைக்குரிய ஆளணி யினர், அதிபர்கள் ஆகியோரின் நியமனங்களும் மத்திய கட்டுப்பாட் டின் கீழ் உள்ளமை, அதிகாரப் பகிர்வை வேண்டி நிற்கும் சிறுபான்மை இனக்குழுமங்களுக்குப் பாதகமான நிலமைகளாகக் கருதப்படுகின்றன.

இனக்குழும நிலையிலே பார்க்கும் பொழுது பெருந்தோட்டத் துறைத் தமிழர்களுக்குக் கல்வி நிலையிலே அனுகூலங்கள் கிடைக் கப் பெறாதிருந்தமையைப் பின்வரும் நிகழ்ச்சிகள் சுட்டிக்காட்டுகின்றன.

(1) கன்னங்கராவின் கல்வி முன்மொழிவுகளை அடியொற்றி இலவசக் கல்வி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட வேளை பெருந்தோட்டத்துறை புறக்கணிக்கப்பட்டது.

(2) *1960* ஆண்டு மற்றும் *1961*ஆம் ஆண்டின் அரசு பாடசாலைகளைப் பொறுப்பேற்கும் திட்டத்தில் பெருந்தோட்டப் பாடசாலைகள் உள்ளடக்கப்படவில்லை.

(3) *1970*ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம்பெற்ற அரசியல் மாற்றங்களை அடியொற்றி பெருந்தோட்டப் பாடசாலைகள் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் படிப்படியாகக் கொண்டு வரப்பட்டா லும், பண்புநிலை முன்னேற்றங்கள் எட்டப்படவில்லை. பள்ளி செல்லாமை இடைவிலகல், மீளக்கற்றல் முதலியவை ஒப்பீட்டளவில் அங்கே கூடுதலாகக் காணப்படுகின்றன.

மலையகத்தில் மட்டுமன்றி சிறுபான்மை இனக்குழுமத்தினர் கணிசமான அளவிலே வாழும் நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம் பிரதேசங்களில் தமிழர் மற்றும் முஸ்லீம்களின் இன விகிதாசாரத் தைப் பிரதிபலிக்குமளவுக்குக் கல்வி நிர்வாகிகள் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டுப் போரினால் தமிழ் மாணவரின் கல்வியே அதிக பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டது. இடப்பெயர்ச்சி, பாடசாலைகள் மூடப்பட்டமை, உயிரிழப்புக்கள், உடமைகளின் இழப்பு, உளப் பாதிப்பு முதலாம் பரந்துபட்ட பாதிப்புக்கள் ஏற்பட்டன. அவற்றி லிருந்து மீண்டெழல் உடனடியாக அடையப்படக்கூடியதுமன்று.

மேற்கூறியவற்றைத் தொகுத்து நோக்கும்பொழுது கல்வியும் இனக்குழும உறவும் என்ற எழுவினா அரசியல் மற்றும் சமூக நிலைகளில் அதிக முக்கியத்துவம் பெறுவதைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. இனக்குழும உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளில் பின்வருவன சிறப்பாகச் சுட்டிக்காட்டப்பட வேண்டியுள்ளன.

(1) இனக்குழுமங்களின் பாதுகாப்பும் வளர்ச்சியும் தேச முன்னேற்றத்துக்குரிய அடிப்படை நிபந்தனைகள் ஆகும் என்பதை முன்னெடுத்தல். உள நிறைவுதான் ஐக்கியத்தை ஏற்படுத்துமே யன்றி இனக்குழும நிராகரிப்பினால் ஐக்கியம் எட்டப்பட முடியாது என்பதை மனித மனங்களில் ஆழப்பதியச் செய்தல்.

(2) இனக்குழுமங்களுக்கிடையே மோதல்களை உண்டாக்கி இலாபம் பெற முயலும், உலக மற்றும் உள்ளக சக்திகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

(3) மோதல்களை உருவாக்கும் அடிப்படை விசைகளை பிரதேச நிலையிலும், தேசிய நிலையிலும் ஒவ்வொரு மட்டங்களிலும் இனங்காணும் நேர் அறிவுச் செயற்பாடுகளை வளர்த்தெடுத்தல்.

(4) பிரச்சினைகள் பன்மையான பல பரிமாணங்களைக் கொண் டிருக்கும் நிலையில் ஒற்றைப் பரிமாண ஒருவழி அணுகு முறையைக் கைவிட்டு பல வழியான பன்மை அணுகுமுறை களைப் பயன்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்தல். அரசியல், பொருளாதாரம், கல்வி ஆகியவற்றில் பன்மைத்துவ அணுகுமுறைகளை மேற்கொள்ளல்.

(5) கல்வி மொழியாகத் தாய்மொழியை நிலைநிறுத்துதல், புரிந்து ணர்வையும் இடையுறவுகளையும் வளர்த்துக்கொள்வதற்காக சிங்களம்/ தமிழ் மொழியைக்கற்றல் உலக மொழியாகிய ஆங்கிலத்தைக் கற்றல் என்ற மும்மொழிக் கல்விச் செயற்பாட்டை மாற்றீடின்றி வலியுறுத்தல்.

(6) காலனித்துவ விடுதலைக் காலத்திலிருந்து பொருளாதார விடுதலைக்கான பரந்துபட்ட திட்டங்கள் மேற்கொள்ளப்படா மையினால் தோற்றம்பெற்ற வழங்கல் அருமைத்தன்மையும் போட்டியையும், இனக்குழுமம், மற்றும் பிரதேசம் முதலான வற்றை நோக்கிய குறுகிய உணர்வையும் மாற்று இனக் குழுமங்களை விரோதிகளாகப் பார்க்கும் அவலட்சணங்களை யும் உருவாக்கி வந்துள்ளது. அந்நிலையில் பொருளாதார விடு தலைக்கான திட்டங்களையும், கல்வியையும் ஒன்றிணைத்து முன்னெடுத்தல்.

(7) ஒவ்வோர் இனக்குழுமத்தினரும் தத்தமது ஆளுமையை முழு நிறைவாக வளர்த்தெடுப்பதற்குரிய கல்விமுறை, கலைத்திட்ட ஆக்கம், பாடநூலாக்கம், முதலியவற்றை முன்னெடுத்தல்.

(8) அனைத்துத் தரப்பினரையும் ஈடுபாடுகொள்ள வைப்பதற்கான கல்வி நிர்வாகம், மற்றும் பொது நிர்வாகத்தை உருவாக்கிக் கொடுத்தல். ஒற்றைப் பரிமாணமும் மத்தியநிலை அதிகாரமும்

கொண்ட காலனித்துவக் கல்வி நிர்வாக முறைமையிலிருந்து முற்றாக மீண்டெழுதல்.

(9) பண்பாட்டுத் தனித்துவங்களை மதிக்கும் அறிகைத் தளத்தை ஒவ்வொருவரிடத்தும் கல்வி மற்றும் ஊடகச் செயற்பாடுகள் வழியாக வளர்த்தல். ஒவ்வொரு பண்பாட்டிலுமுள்ள கலை களையும், இலக்கியங்களையும், கண்டுபிடிப்புக்களையும், ஆற்றுகைகளையும் அனைவருக்கும் பயன்படும் மானிடப் பொதுச் சொத்துக்களாகக் கருதும் உளப்பாங்கினைக் கட்டியெழுப்புதல்.

(10) இனக்குழும உறவைக் கட்டியெழுப்புதலிலே மொழிபெயர்ப் புக்கள் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. இலக்கியங்கள் ஒவ்வோர் இனத்துக்குமுரிய உணர்வுகளையும், மனவெழுச் சிகளையும், குறிக்கோள்களையும் தாங்கி நிற்கின்றன. மொழி பெயர்ப்புக்களின் வழியாக அவை மற்றைய இனக்குழுமத் துக்கு கையளிப்புச் செய்யப்படும்பொழுது புரிந்துணர்வுக் கான விசைகள் திறக்கப்படும். அரசு இத்துறையிலே உடனடிக் கவனிப்பை மேற்கொள்ளல் முக்கியமானது.

(11) இனக்குழும உறவுகளைக் கட்டியெழுப்புதலில் புரிந்துணர்வுக் கான கண்காட்சிகள், திரைப்படங்கள், இணையத்தளங்கள், கருத்தரங்குகள், ஒலி ஒளி பரப்புக்கள் வளமான உரையாடல் கள் முதலியவை முக்கியத்துவம் பெறுகின்றன. மேலாதிக்க மற்ற சமத்துவமான முறையில் அவை முன்னெடுக்கப்படல் வேண்டும். அவற்றை வெறும் சுலோகங்களாகவோ, புத்திமதி கூறலாகவோ வழங்காது கலையழகுடன் கையளித்தலே சிறந்தது.

(12) இனக்குழுமங்கள் பற்றிய எதிர்மறையானதும் தவறானதுமான முற்சாய்வுகளையும் உளப்பாங்குகளையும் மாற்றியமைப்பதற் குரிய கல்விச் செயற்பாடுகளை முறைசார் கல்வியிலும் முறை சாராக் கல்வியிலும் முன்னெடுத்தல்.

இனக்குழுமங்களுக்கிடையிலான உறவினை வளர்த்தெடுத்தல் சமூக பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுப்பதற்குரிய அடிப் படையான நிபந்தனை என்பதைக் கல்வித்துறையில் மட்டுமன்றி ஏனைய அரச ஆற்றுகைகளிலும் வலியுறுத்தி முன்னெடுத்தல் உடனடித் தேவையாகவும், நீண்டகாலத் தேவையாகவும் மேலெழுகின்றது.

***

# கல்வி நிதி வழங்கல்

கல்விச் செயற்பாடுகள் சமூக ஏற்றத்தாழ்வுகளை மீளமீள உரு வாக்கிக் கொண்டிருக்கும் நிலையை நவமார்க்சியவாதிகள் தெளி வாகச் சுட்டிக்காட்டியுள்ளனர். தாராண்மை அரசுகளின் வளர்ச்சியும் மார்க்சியக் கருத்தியலும் கல்விக்குரிய முழுப்பொறுப்பை அரசே ஏற்கவேண்டும் என்பதை உறுதிபெறச் செய்கின்றன. கல்வியிலே சமசந்தர்ப்பம், சமகணிப்பு, சமவாய்ப்பு முதலியவற்றை மேற்கொள்ள அரசின் நிதிவழங்கல் தவிர்க்க முடியாததாகின்றது. தேர்தற்றொகுதி அரசியலிலே அதிகஅளவு வாக்குகளைக் கவர்ந்துகொள்வதற்கு கல்வி, மருத்துவம் முதலாம் துறைகளுக்குரிய நிதி ஒதுக்கீடுகள் அரசியல் இலாபம் கருதி மிகையாக மேற்கொள்ளப்படுகின்றன.

அரச நிதிவழங்கலின் வழியாகக் கிடைக்கும் கல்வி வாய்ப்புக்க ளைச் சமூகத்தின் அடித்தளத்து மக்களைக் காட்டிலும் மத்தியதர வகுப்பினரே கூடுதலாக அனுபவித்துக் கொள்கின்றனர். "இலவசமான பாடசாலைக்கல்வி" என்று கூறப்பட்டாலும், அதனோடு "இணைந்த செலவுகளுக்கு" வறிய பெற்றோரால் ஈடுகொடுக்க முடியாதிருக்கின் றது. இலங்கையில் வரன்முறையான பொதுக்கல்விக்குச் சமாந்தர மான முறையில் வளர்ச்சி பெற்றுள்ள தனியார் நிலையங்களால் வழங்கப்படும் மேலதிகக் கல்வி தவிர்க்க முடியாத தேவையாக வளர்ந்துள்ள நிலையில் வறியோரால் அதனோடு இணைந்து கொள்ள முடியாதநிலை தோற்றம் பெற்றுள்ளது.

இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் தேர்வும் மத்தியதரத்தினருக்கே அனுகூலமாக அமைந்துள்ளது. அரச நிதியுதவி கிடைக்காவிடினும், புகழ்பெற்ற கல்லூரிகளிலே நுழைவைப் பெற்றுக்கொள்வதற்கு மத்திய தரத்தினர் தீவிர முயற்சிகளை

மேற்கொள்கின்றனர். (ரூபா 2000/- செலுத்திப் புலமைப்பரிசில் ஒருநாள் கருத்தரங்கும் நடத்தப்படுகின்றன)

அரசின் கல்விக்கான நிதி ஒதுக்கீடுகள் மரபு வழியான தொழில் களில் வினைத்திறனையும் விளைதிறனையும் அதிகரிக்கச் செய்து வருகின்றன. இந்திய விவசாயத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் இவ்வகையிலே சிறப்பாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. மரபு சாராத் தொழில்களிலும் உற்பத்தி அதிகரிப்புக்குக் கல்விக்கான முதலீடுகள் நேரடியான பங்களிப்புச் செய்தமை ஜப்பானிய அனுபவங்களாகும்.

வறுமைக் கோட்டின்கீழ் வாழ்வோரின் எண்ணிக்கையைப் படிப் படியாகக் குறைத்துக் கொள்வதற்கு கல்விக்கான அரச நிதி வழங்கல் துணைசெய்யும் என்பது விவாதத்துக்குரிய விடயமாகின் றது. வறுமையை அணுகுதல் தனித்துக் கல்வியுடன் மட்டும் தொடர்பு டையது அன்று. வருமானப் பங்கீட்டுடன் தொடர்புபடுத்தியே வறுமையை அணுக வேண்டி யுள்ளது. பலநிலைகளிலும் சுரண்டல் நிகழ்வதற்குரிய வாய்ப்புக்கள் நிலவும் சமூகங்களிலும் நாடுகளிலும் வறுமைக்கும் செல்வக் குவிப்புக்கு முள்ள இடைவெளி அகன்று கொண்டே செல்கின்றது.

கல்விக்கான நிதிவழங்கல் நிலைக்குத்துச் சமூக அசைவியத்தை *(Mobility)* யும், பக்க அசைவியத்தையும் ஏற்படுத்தும் பலமான கருவி என்று கூறப்படுகின்றது அடித்தளத்து மக்கள் மேலுயர்த்தல் நிலைக் குத்து அசைவியமாகும். கிராமத்து மக்கள் நகரங்களை நோக்கியும் விருத்தியடைந்த நாடுகளை நோக்கியும் புலம்பெயர்தல் பக்க அசைவியம் எனப்படும். கல்வி வழியான இவ்வாறான அசைவியங்கள் வறியோ ரால் பொதுவாக எட்டப்பட முடியாதவையாகவே காணப்படுகின்றன.

அரசநிதி வழங்கல் இத்துறையில் அதிகரிக்கும் பொழுது வாழ்க் கைப் பண்பு உயரும் என்றும், பிறப்பு வீதம் குறைவதனால் குடும்பப் பருமன் கட்டுப்படுத்தப்படும் என்றும் கூறல் திறனாய்வுக்குரிய கருப்பொருள்களாகின்றது. அவை சமூகத்தின் மத்திய தரத்தினரை அடியொற்றிய அவதானிப்புக்களாகவே உள்ளன. இலங்கையின் குடிப்பெருக்கம் சமூக நிரலமைப்புடன் தொடர்புடையதாகக் காணப் படுகின்றது. உயர்ந்த வாழ்க்கைத் தரமுடையோரிடத்து மட்டுமே பிறப்பு வீதம் குறைவடைந்துள்ளது.

கல்விக்குரிய நிதிவழங்கல் மக்கள் சிந்தனைகளிலும், செயற் பாடுகளிலும், அரசியல் மற்றும் சமூக நோக்குகளிலும் நேர்நிலையான

மாற்றங்களை உருவாக்கும் என்று பொதுவாகக் கூறப்படுகின் றது. மக்கள் அரசியல் சார்ந்த உற்றுணர்வு *(Consciousness)* கொண் டவர்களாக உயர்ச்சி பெறுவர் என்ற கருத்தும் முன்வைக்கப்படு கின்றது. ஆனால் பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகளில் கல்விக்குரிய அரச நிதிவழங்கல் தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ளபோதும் அரசியலில் அடிப்படையான மாற்றங்கள் நிகழவில்லை. நிலைபேறு கொண்ட ஓரிரு கட்சிகளே தொடர்ந்து ஆட்சிபீடம் ஏறிய வண்ணமுள்ளன. இனக்குழுமங்களுக்கிடையே மோதல்கள், மேலும் சமயக் குழுக்கள், சாதியக் குழுக்கள் ஆகியவற்றுக்கிடையேயுள்ள மோதல்களும் குறைந்தபாடில்லை. குறுகிய அடிப்படைவாதம் *(Fundamentalism)* குறுகிய பிரதேச வாதம் முதலியவை வளர்ந்த வண்ணமுள்ளன. ஆனாலும் கல்வியின் சமூகப் பங்களிப்பை ஒட்டுமொத்தமாக நிராகரித்து விட முடியாது. பயனுள்ள நேர்நிலையான சிந்தனைகளையும், பயனுள்ள மாற்றுச் சிந்தனைகளையும் ஒரு சிலரிடத்திடமாவது வளர்ப்பதற்கு அது துணை செய்து வருகின்றது.

கல்விக்கான அரச நிதி வழங்கலின் அனுகூலங்கள் துறைசார்ந்த வேறுபாடுகளைக் கொண்டது. குறிப்பாக மூன்றாம் உலக நாடுக ளிலே ஆரம்பக் கல்விக்குரிய முதலீடுகள், சிரேஷ்ட இடைநிலை மற்றும் உயர்நிலைகளுக்குரிய முதலீடுகளைக் காட்டிலும் அடிநிலை மாந்தருக்கு அதிக அனுகூலங்களை விளைவித்துள்ளன.

உயர்கல்விக்குரிய முதலீடுகள் சமூகத்தின் அனுகூலம் மிக்கவர் களுக்கு மேலும் நன்மைகளை வருவித்து சமூக ஏற்றத்தாழ்வுகளை மீள வலியுறுத்துகின்றன. இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் உள்ள மருத்துவப்பீடங்கள் மற்றும் பொறியியற் பீடங்களில் சமூகத் தில் பொருளாதார அனுகூலங்களைக் கொண்ட மாணவர்களே கூடுதலான அளவிற் கல்வி கற்றல் கண்டறியப்பட்டுள்ளது.

அரச நிதி வழங்கல் நேரடியான பொருள் உற்பத்தித்துறைகளை நோக்கியும் உடனடியான விளைவுப் பெறுபேறுகளை நோக்கியும் குவியப்படுத்தப்படும் பொழுது கல்விக்குரிய ஒதுக்கீடுகள் மட்டுப் படுத்தப்படுகின்றன. அந்நிலையிலே அரசுகள் தனியார் துறையின ரின் பங்குபற்றலுக்கும் முதலீடுகளுக்கும் உற்சாகம் வழங்குகின்றன. தனியார் துறையினர் கல்வியில் முதலீடுகளைச் செய்யும் பொழுது இலாப நோக்கம் முதன்மை கொண்டிருக்கும். தனியார் துறையினர் உயர்கட்டணங்களுடன் கல்வி நிலையங்களை இயக்கி வருதலைக் காணக்கூடியதாகவுள்ளது.

கொள்வனவு வலுவுடையோரே அங்கு சென்று படிக்கலாம் என்பது சமூக ஏற்றத்தாழ்வுகளை மீளவலியுறுத் தித் தக்க வைக்கும் நடவடிக்கையாகின்றது.

செலவைச் சுருக்கும் நடவடிக்கையாக முன்பள்ளிகளை இலங்கை அரசு பொறுப்பேற்காது கைவிட்டுள்ளது. அதனால் அதிக ஏற்றத் தாழ்வுள்ள நிலைகளில் முன்பள்ளிகள் தோற்றம் பெற்றுள் ளன. ஆசிரிய வாண்மையிலும் கற்பித்தல் முறைகளிலும் பாரிய ஏற்றத் தாழ்வுகள் முன்பள்ளிகளில் இடம்பெற்று வருகின்றன.

ஜப்பான் தாய்வான் முதலாம் நாடுகளிலே கல்விக்கான முதலீடுகளிலே தனியார் துறையினரின் ஈடுபாடுகள் அதிகமாக இருத்தலுடன் மொத்த மாணவரின் எண்ணிக்கையில் பருமட்டாக எண்பது சதவீதமானோர் தனியார் கல்வி நிறுவனங்களிலே பயின்று வருகின்றனர். இந்தியாவிலே பண வசதிப் படைத்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களே தனியார் கல்வி நிலையங்களிலே இணைந்து கற்கின்றனர்.

அரசாங்கம் கல்விக்குரிய முதலீடுகளை அதிகரித்துச் செல்லும் பொழுது சாதன விரயங்களும், அழிவுகளும் தடுக்கப்படும் என்ற கருத்து மீளாய்வுக்குரியது. ஆசிய நாடுகளில் எழுத்தறிவு வீதம் அதிகரித்தாலும், எயிட்ஸ் பரவல் கட்டுப்பாட்டின்கீழ் வராத நிலை காணப்படுகின்றது. பெண்கள் மீதான சமூக பொருளாதார அழுத் தங்கள் தீர்ந்தபாடில்லை. காடுகள் அழிக்கப்படுதல் தொடர்ந்த வண் ணமுள்ளன. நகர்ப்புறங்களை அண்மித்த சேரிகளின் வளர்ச்சி நீடித்துச் செல்கின்றது. பலநிலைகளிலும் இலஞ்சம் தொடர்ந்த வண்ணமுள்ளது.

நிதிவழங்கல் கல்வி நிறுவனங்களின் உள்ளார்ந்த செயற்பாடுகளை அடியொற்றியே விளைவுகளை ஏற்படுத்த வல்லது. அதன் காரணமாகப் பண்பு மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்படுகின்றன. உயர்கல்வியிலே கற்பித்தலுக்கு ஒதுக்கப்படும் நிதி கூடுதலாகவும் ஆய்வுகளுக்கு ஒதுக்கப்படும் நிதி ஒப்பீட்டளவிற் குறைவாகவும் காணப்படுகின்றது.

பல்கலைக்கழகங்களில் நிகழ்த்தப்படும் பெரும்பாலான ஆய்வுகள் பட்டம் பெறும் ஆய்வுகளாக *(Degre Research)* இருக்கின்றன வேயன்றி சமூக, பொருளாதார, அபிவிருத்தி நோக்குகள் குன்றிய நிலையிலுள்ளன. புள்ளிவிபரவியல் ஆய்வுகள் அதீத முக்கியத்துவத்துக்கு

உள்ளாக்கப்படுகின்றன. புள்ளி விபரவியல் ஆய்வுகள் நடப்பு நிலவரங்களைத் துல்லியமாக விளக்குதலோடு மட்டும் நின்று விடுகின்றது. வினாக்கொத்து வழங்குதலும், நேர்காணல் மேற்கொள்ளலும் என்ற கருவிகளை உள்ளடக்கிய தொகை மாதிரி ஆய்வுகளே சமூக விஞ்ஞானத் துறைகளில் மேலோங்கியுள்ளன.

பண்புநிலை ஆய்வுகள் பரிசோதனை ஆய்வுகள், கண்டுபிடிப்புக்களை நோக்கிய ஆய்வுகள் செயல்நிலை ஆய்வுகள் ஒப்பீட்டளவிலே குறைவாகவுள்ளன. ஒரே பண்புடைய "தட்டையான ஆய்வுகளே" *(Flatresearch)* பெருமளவில் இடம்பெறுகின்றன.

கல்வி நிதி ஒதுக்கீட்டில் குறுகிய அரசியல் இலாபங்கள் தவிர்க்கப்படல் முக்கியமானது. உடனடி இலாபம் பெறும் நோக்கில் நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது. சமூகம் பன்முகமாக தொழிற்பாடு களைக் கொண்டுள்ளமையால் நிதி வழங்கலிலே ஒற்றைப் பரிமாண நோக்குக் கைவிடப்படல் வேண்டும். பன்மைத்துவம், பன்முகநோக்கு பின்பற்றப்பட வேண்டியதாகின்றது.

சமூக நலம் கருதி நேர்ப் பயன்தரும் பாகுபாட்டை *(Positive Discrimination)* நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளும் பொழுது மிகுந்த எச்சரிக்கையாயிருக்க வேண்டியுள்ளது. எடுத்துக்காட்டாக பின்தங்கிய மாவட்டங்களுக்கு நிதி ஒதுக்கீட்டிலே முன்னுரிமை வழங்கும்பொழுது அடிநிலை மாந்தர் பயன்பெறுகின்றனரா என்பதைக் கவனித்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் பின்தங்கிய மாவட்டங்களிலும் பொருளாதார வசதி படைத்தவர்கள் இருக்கின்றார்கள். அந்த மாவட் டத்துக்கு ஒதுக்கப்படும் நிதியில் அடிநிலை மாந்தர் அனுகூலங்க ளைப் பெறாவிடில் அது சமூக நீதியாகாது. ஆகவே பின்தங்கிய மாவட்டங்கள் என்ற அடிப்படையிலே ஒதுக்கீடுகளை மேற்கொள்ளாது, பிரதிகூலமடைந்தவர்களைக் குவியப்படுத்தி நிதிவழங்கலே கூடிய பயன்தருவதாக அமையும்.

நிதி வழங்கலிலே அபிவிருத்தி முன்னுரிமைகள் தலையீடுகளை ஏற்படுத்துகின்றன. உடனடி இலாபம் தரக்கூடிய துறைகளிலே கூடுதலான முதலீடுகளை மேற்கொள்ளும் பொழுது கல்விக்குரிய நிதியிடலிலே வெட்டு நிகழ்கின்றது. மூன்றாம் உலக நாடுகளிலே இராணுவத்துக்குரிய நிதி ஒதுக்கீட்டுக்கு முன்னுரிமை வழங்கப்படும் பொழுதும் கல்விக்குரிய ஒதுக்கீடுகள் வீழ்ச்சியடைகின்றன.

உலக வங்கியின் தலையீடுகள் மூன்றாம் உலக நாடுகளிலே அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. குறித்துரைக்கப்படும் நிபந்தனை களின் அடிப்படையிலேதான் உலகவங்கி கல்விக்குரிய கடன்களை வழங்குகின்றது.

உலகமயமாக்கலும், பல்தேசிய உற்பத்தி மற்றும் வர்த்தக நிறுவனங்களின் தலையீடும் நிதி வழங்கலைப் பாதிக்கின்றன. கல்வி தொழில் வாய்ப்போடும் தொழில் வழங்கலோடும் தொடர்புபட்ட விடயமாகையால் பல்தேசியக் கம்பனிகள் குறிப்பிடும் தொழில் நிபந்தனைகளை ஏற்று கலைத்திட்டத்தையும் நிதி வழங்கலையும் ஒழுங்கமைக்க வேண்டிய நெருக்குவாரம் தோற்றம் பெற்றுள்ளது. நிறுவனங்கள் குறிப்பிட்ட தொழில்களை வழங்க முடியாதவிடத்து நெருக்கடிகள் எழுகின்றன.

அறிவுப் பொருளாதாரத்தின் வளர்ச்சி அறிவை விலைபோகக் கூடிய பண்டமாக *(Commodity)* மாற்றி வருகின்றது. அந்நிலையில் விலைப்போகக் கூடியதும், அதிக இலாபம் தரக்கூடியதுமான அறிவு உற்பத்தியில் முதலீடுகளை அதிகரிக்கச் செய்ய நேரிடுகின்றது.

கல்விக்குரிய அரசின் நிதிச் சுமையைக் குறைக்கும் பொருட்டு நான்கு ஆண்டுப் பட்டப் படிப்புக்களை மூன்று ஆண்டாகக் குறைக்க வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது. குறிப்பிட்ட பாடங்களைப் பயன்குன்றியவை என்று மறைமுகமாக அடையாளப் படுத்தலும் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் காரணமாகத் தொல்சீர் மொழிகளைக் கற்போரின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து வருகின்றது. சிறந்த மொழிபெயர்ப்பாளருக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

நிதி வழங்கலில் விரயம், இழப்பு முதலியவற்றையும் கருத்திற் கொள்ள வேண்டியுள்ளது. மாணவரின் இடைவிலகல் மற்றும் இலவசக் கல்வியைப் பயன்படுத்தி உயர்பட்டங்களைப் பெற்றோர் புலம்பெயர்ந்து சென்று வெளிநாடுகளில் குடியேறல் விரயமாகின்றது.

குறுகிய இலாபங்களைக் கைவிட்டு சமூக நலமேம்பாடு இனக் குழுமங்களின் உளநிறைவு, தொடர்ச்சியான உற்பத்தி மேம்பாடு, நீள்நோக்குத் தேசிய நலன்கள் முதலியவற்றைக் கருத்திற்கொண்டு நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளல் வேண்டுமென்பது கல்வியியலா ளரின் முன்மொழிவாகவுள்ளது. அத்தகைய நிதி ஒதுக்கீடே ஆற்றல் செறிந்ததாக அமையும்.

***

# மனிதவள விருத்தியும் கல்வியும்

மனிதருள் ஆற்றல்மிக்க மனிதரை உருவாக்குதல் மனிதவள விருத்தியாகின்றது. அது கல்வியால் எட்டப்படுகின்றது. கல்விச் செயற்பாடுகள் பொருண்மிய நோக்கில் மனிதரை மேலும் விளைதிறன் கொண்டவர்களாக மாற்றியமைக்கின்றன. அவற்றின் வழியாக அவர்கள் தமக்குரிய பொருண்மிய வலுவையும் நாட்டுக்குரிய பொருண்மிய வலுவையும் அதிகரித்துக்கொள்கின்றனர். பொருண்மிய நிலையிலே கல்வி ஏற்படுத்திவரும் செல்வாக்கின் காரணமாக கல்விக்குரிய தனி யார் கேள்வியும் சமூகக் கேள்வியும் மேலெழத் தொடங்கியுள்ளன.

மரபுவழியான தொழில்களிலும், நவீன தொழில்களிலும் கல்வி தரமுன்னேற்றத்தை ஏற்படுத்துதல் கண்டறியப்பட்டுள்ளது. கல்வியில் தரமேம்பாடு பண்பு மேம்பாடு என்பவை பொருண்மிய மேம்பாட் டுக்குரிய நேரடி விசையாகும். குடித்தொகை ஒரு வளமாகக் கருதப்படும் நிலையில் குடித்தொகைக்குரிய பொருத்தமான கல்வி மனிதவளத் தைப் பொருண்மிய வளமாக மேலெழச் செய்கின்றது. வரன்முறை யான கல்வியும், வரன்முறைசாராக் கல்வியும் மனித வளத்தைப் பொருண்மிய வளமாக விசைப்படுத்துகின்றன.

மனிதவள விருத்தி (HRD) தொடர்பாக முதலாளியப் பொருண் மியச் சிந்தனையாளருக்கும் மார்க்சிய சிந்தனையாளருக்குமிடையே அடிப்படை வேறுபாடுகள் காணப்படுகின்றன. முதலாளியப் பொருண் மிய வாதிகள் சந்தை நிலவரங்களுடன் தொடர்புபடுத்தி மனிதவள விருத்தியை வளர்த்தெடுக்கும் உபாயங்களை வலியுறுத்துகின்றனர்.

அந்நிலையிலே கட்டமைப்பு மாற்றங்கள் நிகழும்பொழுது பொருண்மியப் பின்வழுக்குகை, உற்பத்தி வீழ்ச்சி, சந்தை நெருக்கடி, பயிற்றுவிக்கப்பட்ட மனிதவளம் தொழிலிழந்து நிற்றல், உளப்பாதிப்பு

முதலியவை நிகழ்கின்றன. 2000ஆம் ஆண்டைத் தொடர்ந்து உலகில் இந்த நிகழ்ச்சி துல்லியமாக வெளிப்பட்டது.

முதலாளித்துவ வழிநின்று உருவாக்கம் பெற்ற மல்துசியன் குடித்தொகைக் கோட்பாடு பின்னர் நிகழ்ந்த அறிவியற் கண்டுபிடிப் புக்களை அடியொற்றி நிராகரிக்கப்பட்டமை, முதலாளிய மனித வளக் கோட்பாடுகளுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தியது. ஆனாலும் மல்துசியன் கோட்பாட்டுக்கு மீள்வடிவம் கொடுக்கும் முகமாக குறுகிய குடும்பத்திட்டமிடற் கோட்பாடு முன்வைக்கப்பட்டது.

அறிவால் இயற்கையை வசப்படுத்தி மனிதருக்குரிய தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியுமென்றும், சுரண்டல் நீக்கப்படும் பொழுது அந்த அனுகூலம் அனைவருக்கும் கிடைக்கப்பெறும் என்றும் மார்க்சிய சிந்தனையாளர் வலியுறுத்துகின்றனர்.

தரநிலையிலும் கல்விநிலையிலும் குடித்தொகையை வளம் படுத்துவதன் அனுகூலங்களை வலியுறுத்தும் மனிதவள அபிவிருத்தி நடவடிக்கைகள் 1960ஆம் ஆண்டைத் தொடர்ந்து எழுச்சிகொள்ள லாயின (Gould, 1993) 1984ஆம் ஆண்டில் மெக்சிக்கோவில் நிகழ்ந்த உலகக் குடித்தொகை மாநாட்டில் மனித வளத்தைப் பண்புநிலை யில் வளம்படுத்தும் பரவலான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. மனிதவளத்தையும், இயற்கை வளத்தையும் மேம்படுத்துவதற்குரிய கல்வியின் முக்கியத்துவம் அங்கே வலியுறுத்தப்பட்டது.

மூன்றாம் உலகநாடுகளின் கிராமியப் பொருளாதார மீளமைப் பிலும் மனிதவள விருத்தியிலும் கல்வியின் முக்கியத்துவத்தை ஆழ வலியுறுத்தும் கருத்துக்களும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட லாயின. உடல்நல விருத்தியில் உலக சுகாதார நிறுவனமும் உளநல விருத்தியில் யுனெஸ்கோ மற்றும் யுனிசெவ் நிறுவனமும் தமது பங்களிப்புக்களை விரிவாக்கம் செய்யத் தொடங்கின. "வம்சவிருத்தி நலப்பாங்கு" (Reproductive Health) என்ற செயற்பாட்டிலே நாடுகள் ஊன்றிய கவனம் செலுத்தலாயின.

பெளதிக முதலீடுகளில் மட்டும் கவனம் செலுத்துதலால் மட்டும் பொருண்மிய மேம்பாட்டை முன்னெடுக்க முடியாது மனிதவள முதலீடுகளிலும் கவனம் செலுத்தப்படல் வேண்டுமென்ற கருத்துக் கள் எழுச்சியுறத் தொடங்கின. இதனை முன்னெடுப்பதில் உலக வங்கியும் பிரதான வகிபாகத்தை ஏற்றது.

நுண்பாக நிலையிலே கல்வியின் நுகர்ச்சி தனிமனித வருமானத்தை அதிகரிக்கச் செய்தது. பெருநிலை நோக்கில் அது நாட்டின் தேசிய வருமானத்தை அதிகரிக்கச் செய்தது. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் மட்டுமன்றி அடைந்து வரும் நாடுகளிலும் இந்தத் தோற்றப்பாடு கண்டறி யப்பட்டுள்ளது. அவற்றால் பொருண்மிய விருத்தித் தந்திரோபாயங்களுள் மனிதவள விருத்தியும் கல்வியும் முன்னுரிமை பெறலாயின.

பொருண்மிய வளர்ச்சிக்கு மனித ஆற்றல்களை நேரடியாகவும், வினைத்திறனுடனும் பயன்படுத்தும் செயற்பாட்டுக்கு பண்புநிலை ஏற்றம் *(Quality)* என்ற எண்ணக்கரு வழங்கப்பட்டது. மனிதவள விருத்திக்குரிய கல்வி எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர் பாகப் பல்வேறு கருத்துக்களும், கருத்து மோதல்களும், எழுந்துள்ளன. கற்கும் காலத்தின் நீட்சி, கலைத்திட்ட ஆக்கம், கல்வியின் எந்தத் துறைகளுக்குக் கூடியளவு முதலீடுகளை மேற்கொள்ளல் போன்ற விடயங்களிலே கருத்து முரண்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன.

உலகவங்கி 1991ஆம் ஆண்டில் வெளியிட்ட தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்வியும் பயிற்சியும் தொடர்பான அறிக்கையில் பாடசாலைக்கு வெளியே தனியார் துறைகளிலே வழங்கப்படும் பயிற்சி களுக்கும், முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளது. ஆனால் குறிப்பிட்ட தொழிற்றுறைகளிலே சிறப்புப் பயிற்சிகளை வழங்குவ தற்கு முன்னதாக அடிப்படைக் கல்வி வழங்குதலின் முக்கியத்து வத்தை எத்தகைய நிலையிலும் நிராகரிக்க முடியாது. அந்நிலை யிலே பன்முகப் பாங்கு கொண்ட பொதுவான ஒரு கலைத்திட்டத் தின் தேவை முக்கியத்துவம் பெறுகின்றது.

குறித்துரைக்கப்பட்ட தொழில்களை முதன்மைப்படுத்திப் பாடசாலைக் கலைத்திட்டத்தை உருவாக்குதல் அதிக செலவீட்டத் தைக் கொண்ட நடவடிக்கை என்பதும் எடுத்துரைக்கப்படுகின்றது. அதற்குரிய பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் கல்விக்கான முதலீடு பயனற்ற விரயமாகி விடுகின்றது. அந்நிலை யிலே குறிப்பிட்ட தொழில்களுக்குரிய சிறப்புக் கல்வியையும் பயிற்சி யையும் பாடசாலைக் கல்வியில் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பப் பாடங்களிலே கோட்பாடு மற்றும் செயல்நிலை சார்ந்த கல்வியையும் பயிற்சியையும் வழங்குதல் கூடிய பயனுள்ளது என்பது கண்டறியப்பட்டுள்ளது.

அண்மைக் காலத்தைய உலகத் தொழிற் பணிமனை அறிக்கைகள் வரன்முறையான கல்வி பெறாதவர்களைக் காட்டிலும் கல்வி கற்றோரின் வேலையின்மை அதிகரித்துச் செல்வதைக் குறிப்பிட்டுள்ளன.

மனிதவளப் பயன்பாட்டில் முரண்பட்ட நிலைகளை உலகவங்கி தோற்றுவித்து வருகின்றது என்ற திறனாய்வும் உண்டு. பொருளா தாரச் செயற்பாட்டிலே தனியார் துறைக்கு அதிக முக்கியத்துவத்தை வழங்குவதனால் பொதுத்துறைகள் பின்னடைவுகளை எதிர்கொள் கின்றன. குறைந்தளவு பயிற்சிகளுடன் பொதுத்துறை வேலைவாய்ப் புக்களைப் பெற்றுக்கொள்ளும் நிலை உருவாக்கப்படுகின்றது. ஆபிரிக்க நாடுகளிலே உலகவங்கி மேற்கொண்ட தொழில்நுட்பக் கல்வித் தந்திரோபாயங்களும் செயற்பாடுகளும் தொழில்நுட்பத் துறையிலே முன்னேற்றம் பெற்ற வெளிநாட்டவர்களுக்குரிய கம்பனி களுக்கு மிக்க அனுகூலமாக அமைந்தமையை லாவுக்லோ *(Lauglo, 1992)* என்ற ஆய்வாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலக வங்கியின் செயற்பாடுகள் பெருநிலை அபிவிருத்திக்குரிய அதாவது நாடு தழுவிய மேம்பாட்டுக்குரிய கல்வி முதலீடுகளைக் காட்டிலும் உடனடி நலன்தரக்கூடிய மனிதவள முதலீடுகளுக்கே முன்னுரிமை வழங்குகின்றன.

மனிதவள விருத்தியில் கல்வியுடன் இணைந்த பிறிதொரு பெருந்துறையாக விளங்குவது சுகாதாரத்துறைகளுக்குரிய முதலீடா கும். நோய்வராது தடுக்கும் நடவடிக்கைகளும், வந்தபின் தீர்க்கும் நடவடிக்கைகளும் அத்துறையில் முக்கியத்துவம் பெறுகின்றன. அச்செயற்பாடுகள் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதலுடன் மட்டுமன்றி அதற்கெனவுரிய சிறப்பு ஆளணியினரை உருவாக்கும் கல்விச் செயற்பாடுகளுடன் இணைந்தது. சுகாதாரம் அல்லது நலக் காப்புத் துறையில் மேற்கொள்ளப்படும் தனியார் மயமாக்கல் மூன்றாம் உலக நாடுகளில் பெருந்தொகையான வறியவர்களுக்குப் பாதகமான நிலமைகளையே உருவாக்கிக் கொண்டிருக்கின்றது.

மனிதவளத் திட்டமிடலில் இரண்டு முக்கியமான அணுகு முறைகள் காணப்படுகின்றன. அவை வருமாறு.

(1) சமூகக்கேள்வி அணுகுமுறை இது குடித்தொகை வழியாக எழும்கேள்வியை அடிப்படையாகக் கொண்டது.

(2) மனிதவலு அணுகுமுறை - இது பொருண்மியம் சார்ந்த கேள்வியை அடிப்படையாகக் கொண்டது.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு மூன்றாம் உலக நாடுகள் மேற்கொண்ட திட்டமிடலிலே ஒரு பாரிய இடைவெளி காணப்பட்டது. எதிர்கால உழைப்பாளர் வலு பற்றிய கேள்வியைத் திட்டவட்டமாகவோ ஓரளவு சரியாகவோ அறிந்துகொள்ளவோ முடியாத நிலையில் மேற்கொள்ளப்பட்ட முன் நடவடிக்கைகள் படித்தவர்களிடத்து வேலையின்மையைத் தோற்றுவித்துள்ளன. இலங்கை இந்தியா முதலாம் நாடுகளில் பிரயோக விஞ்ஞானப் பட்ட தாரிகள் வேலையற்றிருத்தலை இச்சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

உலகமயமாக்கலும் விரைந்து வளர்ந்துவரும் தொழில்நுட்பமும் உழைப்பாளர் வலுவின் எதிர்காலக் கேள்வியைத் துல்லியமாகக் கணக்கிட்டுக் கொள்வதற்குத் தடையாக இருத்தலையும் குறிப்பிட வேண்டியுள்ளது.

குறிப்பிட்ட துறைகளில் மனிதவலு தேவைக்கும் அதிகமாக நிரம்பல் செய்யப்படுதலைக் காணமுடிகிறது. அது மனிதவளத் திட்டமிடல் தொடர்பான இடைவெளிகளையும், ஏனோதானோ என்ற நிலையில் மனிதவள ஆக்கத்தை அரசுகள் முன்னெடுத்துச் செல்வதையும் காட்டுகின்றது. குறுகிய அரசியல் நோக்கும் குறிப்பிட்ட துறைகளிலே கூடுதலான மனிதவள ஆக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றது.

மிகையான அளவில் உருவாக்கம்பெறும் பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் துறையாக இலங்கையிலே கல்வித்துறை உருவாக்கம் பெற்று வருகின்றது. பாடசாலைகளிலே கற்பிப்பதற்குரிய பாடங்களுக்குரிய மனித வலுவைக் கருத்திற் கொள்ளாது பட்டதாரிகள் என்ற பொதுநோக்கிலே நியமனம் வழங்கப்படுவதனால் பல பிரச்சினைகள் எழுகின்றன.

பட்டதாரிகளிடம் எழுகின்ற வேலையின்மைப் பிரச்சினை "திகழ்டிப்புளோமா நோய்" *(The Diploma Disease)* என்பதைத் தோற்றுவித்துள்ளதாக றொனால் டோறி *(Dore, 1976)* என்ற ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார். அதாவது, வேலையற்ற பட்டதாரிகள், வேலை கிடைக்கக்கூடிய துறைகளிலே டிப்புளோமா அல்லது பட்டயச் சான்றிதழ்களைப் பெறும் அவாவுக்கும் அங்கலாய்ப்பு நோய்க்கும் உள்ளாகின்றனர்.

தொழில் வழங்குனர்கள் தமது தொழிலுக்குரிய சிறப்புத் தேர்ச்சி களைக் கருத்திலே கொள்ளாது கல்வித் தகைமைச் சான்றிதழ்களை முதன்மைப்படுத்தும் தோற்றப்பாடுகளும் வளரத் தொடங்கியுள்ளன. இதன் காரணமாக தேவைக்குரிய தேர்ச்சிகளைக் காட்டிலும் முறை சார் கல்விக்கு அதிக முக்கியம் கொடுத்தலும் அவற்றில் அதிக நம்பிக்கை வைத்தலும் வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளன. இந்நிலையானது திகழ்கடதாசிப் பட்டம் தொடர்பான குழப்பமான அறிகுறியைத் *(The Paper Qualigication Syndrome)* தோற்றுவித்துள்ளது.

இந்நிலையில் உருவாக்கம் பெற்றுவரும் கேள்வியின் எழுச்சிக்கு ஈடுகொடுக்கும் முகமாக வெளிவாரிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங் களும், திறந்த பல்கலைக்கழகங்களும் ஆக்கம் பெற்று வருகின்றன. இதனோடு இணைந்த ஒரு சிறப்பான செயற்பாடாக வரன்முறை யான பரீட்சைகள் அதீத முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளன. அதன் தொடர்ச்சியாக "உண்மையான கற்றற் செயற்பாடுகள்" பாதிப் புக்கு உள்ளாகின்றன. பரீட்சைகளைக் கையாளும் முறைமைகளில் கவனம் செலுத்தப்படுமளவுக்கு அறிவுத் தேட்டத்திலும் ஆழ்கற்றலி லும் கவனம் செலுத்தப்படுதல் இல்லை. முதல் வகுப்புக்களிலே சித்திபெறுபவர்கள் ஆழ்ந்த வினாக்களுக்கு விடைதர முடியாது திணறுதலை நேர்முகப் பரீட்சைகளிலே கண்டறிந்ததாகக் கொழும் பில் நிகழ்ந்த கல்விக் கருத்தரங்கு ஒன்றிலே குறிப்பிடப்பட்டுள்ளது. கல்வியியல் ஆய்வாளரும் இவ்வாறான ஒரு கருத்தை முன்வைத்துள் ளனர். *(Gould, 1993, p.154)*

மனிதவள விருத்தியைக் குறிப்பிட்டுள்ள பிரதேசங்களைக் குவியப்படுத்தியும், குறிப்பிட்ட சில உற்பத்தித்துறைகளைக் குவியப் படுத்தியும் மேற்கொள்ளப்படும் பிறிதொரு வளர்ச்சி நிலையையும் காணமுடிகின்றது. பின்தங்கிய பிரதேசங்களை முன்னேற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் கல்விசார்ந்த மனிதவள நடவடிக்கைகள் எதிர் பாராத விளைவுகளையும் ஏற்படுத்தி வருகின்றன. எடுத்துக்காட் டாக இலங்கையின் பல்கலைக்கழகங்களுக்குரிய நுழைவுகளுக்குப் பயன்படுத்தப்படும் குறித்த மாவட்டங்களுக்குரிய குறைந்த "செற்" புள்ளிகளைப் பயன்படுத்தி மருத்துவர்களாயும், பொறியியலாளர் களாயும் விவசாய விஞ்ஞானிகளாயும் வருவோர் தமது மாவட்டங் களின் முன்னேற்றங்களிலே ஈடுபடாது தலைநகரிலே அல்லது பெரும்

நகரங்களை ஒட்டிய பகுதிகளிலே தொழில்புரிவோராய் மாற்றமுறு கின்றனர்.

இந்தியாவிலே கணனிப் பொறியியல் துறையில் கற்பதற்கென ஈடுபடுவோர் எண்ணிக்கை மிகையாக அதிகரிக்கத் தொடங்கியுள்ள நிலையில் அவர்களுக்குரிய தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதிலே சிக்கற்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன. அவர்கள் வெளிநாடுகளுக்குப் புலம்பெயரலும் தோற்றம்பெறத் தொடங்கியுள்ளது.

மனிதவள விருத்தி தொடர்பான உறுகொள்கைக்கும் தொழில் வழங்கல் தொடர்பான உறுகொள்கைக்குமிடையே காணப்படும் இணக்கமின்மை மூன்றாம் உலகிலே காணப்படும் பொதுவான தோற்றப்பாடாகவுள்ளது. பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங் களிலும், மரபுவழியான பாடக் கலைத்திட்டத்தின் செல்வாக்குகளே மிகையாகவுள்ளன. அதாவது தொழிற்சூழல் மாற்றத்தையும் நவீனத் துவத்தையும் எதிர்கொண்டு மேலெழுமளவுக்கு பாடசாலைகளும், பல்கலைக்கழகங்களும் ஈடுகொடுக்க முடியாதுள்ள நிலை அவ்வப் போது சுட்டிக்காட்டப்படுகின்றது. அதேவேளை பல்கலைக்கழகங் களினால் அறிமுகம் செய்யப்பட்ட புதிய பாடநெறிகளைக் கற்றோர் வேலையின்மை மற்றும் குறையுழைப்பை அனுபவித்தலும் முரணு ரையாகவுள்ளன.

மேலும் மனிதவள விருத்தியை சமூக நிலவரங்களோடு தொடர்புபடுத்தி நோக்க வேண்டியுள்ளது. பொதுவான மனிதவள விருத்தி வழங்கல் நடவடிக்கைகள் சமூக அடுக்கமை மீளமீள உருவாக்கும் வகையிலே உருவாக்கப்பட்டு வருகின்றன. அதாவது, மத்தியதரத்தினருக்கும் அதற்கு மேல்வாழும் சமூக மேலமைவினருக் கும் அனுகூலமாகவே இருந்து வருகின்றன. சமூகத்தின் அடிநிலை களில் வாழ்வோர் உயர்நிலையான தொழில்நுட்பக் கல்வியையும், வாண்மைக்கல்வியையும் பெற்றுக்கொள்ள முடியாத பொருண்மிய இடர்நிலையில் வாழும் பொழுது மேலெழு சமூக அசைவியம் சாத்தியமற்றதாகின்றது.

***

# பெண்களும் கல்வியும்

சமூக ஒடுக்குமுறை வடிவங்களின் ஒரு முக்கிய பரிமாணம் பெண்ணிலை ஒடுக்குமுறையாகும். மிகவும் தொன்மையான சமூகங்களில் அதாவது தொன்மையான பொதுவுடைமைச் சமூகங்க ளில் பெண்கள் தீவிர சுரண்டலுக்கு உள்ளாக்கப்படவில்லை. "மெல்லியலார்" என்ற ஆணாதிக்க மனோரதியப் புனைந்துரைகளுக்கும் உள்ளாக்கப்படவில்லை. ஆண்களும் பெண்களும் கடின உழைப்பைப் பூர்விக சமூகங்களில் மேற்கொண்டனர். தனிச் சொத்துரிமையை அடிப்படையாகக் கொண்ட சமூக வளர்ச்சியில் ஆண் களின் மேலாதிக்கம் எழுச்சியுறத் தொடங்கியது. தனிச் சொத்துரிமை யின் காப்பு அரணாகவும், அடிப்படை அலகாகவும் குடும்பம் வளர்ச்சியுறத் தொடங்கியது. உயிரியல் நிலையிலும் உற்பத்தி நிலையிலும் பெண்களின் பொறுப்புக்கள் குடும்ப நிலையில் அதிகரிக்கத் தொடங்கின. அதனால் ஆண்களோடு ஒப்பிடுகையிற் பெண்களின் கல்வி தடைப்பட்டது. இல்லத்தைவிட்டு வெளிச்சென்று கற்க முடியாத நிலைதோற்றம் பெற்றது.

ஆண்களின் கல்வியிலும் இருமைப் போக்குக் காணப்பட்டது. சமூகத்தின் உயர் நிலையிலிருந்த மேட்டுக்குடி ஆண்களுக்கே தரமான உயர்கல்வி கிடைக்கப்பெற்றது. அடிநிலை மாந்தர் நாட்டார் மரபுகள் சார்ந்த கல்வி கிடைக்கப்பெற்றவர்களாயிருந்தனர்.

நிலமானிய சமூகம் மற்றும் கைத்தொழிற் புரட்சிக்குப் பிற்பட்ட சமூகக் கோலங்கள் ஆகியவற்றிலே பெண்களுக்கான கல்வி புறக் கணிப்புக்கு உட்பட்ட நிலை காணப்பட்டது. பெண்கள் வீட்டு வேலை களுடன், தொழிற்சாலைகளிலும் கடுமையான உழைப்பை வழங்க வேண்டியவராய் இருந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டிலே

பெண்களின் நிலை "பெருவிரலின் ஆட்சி" *(Rule of Thumb)* என்ற எண்ணக்கருவாற் புலப்படுத்தப்பட்டது. *(Jene Kelly, 2000)* இதன் பொருள் என்னவென்றால் பெண்களுக்குச் சவுக்கடி கொடுப்பதற்கு ஆண்கள் உரிமை உடையவர்கள். ஆனால் அந்தப் பிரம்பின் தடிப்பம் பெருவிரலின் தடிப்பத்துக்குக் கூடுதலாக இருத்தலாகாது.

பெண் கல்வியைப் பொறுத்தவரை வர்க்க வேறுபாடு பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியது. உயர்வர்க்கம், மற்றும் மத்திய தரத்துப் பெண்கள் இல்லங்களில் இருந்து பொழுதுபோக்கில் ஈடுபட்டனர். ஓரளவு கல்வியையும் பெறத்தொடங்கினர். ஆனால் தொழிலாளர் வர்க்கப் பெண்கள் குடும்பச் சுமையுடன் தொழிற் சாலைகளிலும் கடினமாக உழைக்க வேண்டி நேரிட்டது. அதேவேளை வீடுகளிலே முடக்கப்பட்டிருந்த மத்தியதர வகுப்புப் பெண்களிடம் ஹிஸ்டீரியா நோய் தோற்றம் பெறுவதற்குரிய நிலையையும் ஏற் பட்டது. ஆண்களின் ஒடுக்குமுறையும், வீட்டில் முடக்கப்பட்டிருந்த நிலையும் அத்தகைய அவலத்தை ஏற்படுத்தின.

கார்ல் மாக்சினால் உருவாக்கப்பட்ட பொதுவுடைமைக் கட்சிப் பிரகடனமும், தொழிலாளர்களை முன்னுரிமைப்படுத்தும் சிந்தனை களின் வளர்ச்சியும், தாராண்மை அரசியல் நோக்கும் பெண்கல்வி முனைப்புக்களுக்கு வலுவூட்டின. 1980ஆம் ஆண்டில் மத்தியதர வர்க்கப் பெண்கள் கற்பதற்கென ஒரு புலமைக் கல்லூரி இலண்டன் நகரிலே திறக்கப்பட்டது. தாராண்மைக் கல்விச் செயற்பாடுகளுடன் இணைந்த சமூகநலச் செயற்பாடுகள் பெண் கல்வியிலே முன்னேற் றங்களை ஏற்படுத்தலாயின.

தமிழ் மரபிலே பெண்களுக்குரிய தனித்துவமான கல்வி அமைப் பாக மரவடிப்பள்ளிகள் அமைந்திருந்தன. வீடுகள் சூழ்ந்திருந்த பெருமர நிழலில், (வேம்பு, பலா, நாவல், மா, புளி) அனுபவம் மிக்க மூத்த பெண்ணிடத்துக் கல்வி கற்றல் மரவடிப்பள்ளிகளில் இடம் பெற்றன. மண்ணில் எழுதுதலில் இருந்து ஏட்டில் எழுதுதல் வரை எழுத்துப் பயிற்சி நிகழ்ந்தது. மனக் கணிதம் என்ற பாடமும் இடம்பெற்றிருந்தது. தேவாரம் நீதி வெண்பா முதலியவற்றைப் பாட மாக்கி ஒப்புவித்தலும் நிகழ்ந்தது. இராமாயணம், மகாபாரதம், கோவலன் கதை முதலியனவும் வாய்மொழி வாயிலாகக் கையளிக் கப்பட்டன. பத்தொன்பதாம்

நூற்றாண்டின் முற்பகுதி வரை இவ்வகைப் பாடசாலைகள் இயங்கி வந்தமையை இணுவையூரில் வாழ்ந்த முதியோர்களின் வாய்மொழிச் சான்றுகளால் அறிந்து கொள்ளலாம்.

மேலைப்புலத்து திருச்சபையினரது வருகையோடு பெண்களுக்குரிய கல்வி "வகுப்பறை" என்ற புதிய பரிமாணத்தோடு வளர்ச்சியுறலாயிற்று.

1865ஆம் ஆண்டிலே பெண்களுக்கென விடுதியுடன் கூடிய பாடசாலை ஒன்றினை உடுவில் கிராமத்திலே அமெரிக்க அருட்பணியாளர் நிறுவினர். இலங்கையின் பெண்கல்வி வளர்ச்சியில் இது ஒரு சிறப்பார்ந்த நிகழ்ச்சியாகும்.

கத்தோலிக்க திருச்சபையினர், மெதடிஸ்த திருச்சபையினர், திருச்சபைக் குழுவினர் இலங்கையிலே பரவலாகப் பெண்கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். அதேவேளை சுதேச சமயங் களின் எழுச்சியின் சிறப்பு விளைவாக பெண் கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. 1913ஆம் ஆண்டிலே சேர்.பொன். இராமநாதன் அவர்கள் சைவப் பெண்களுக்கென ஒரு பாடசாலையைத் திறந்து வைத்தார். இணுவிலின் வடபால் அமைந்த ஐம்பது ஏக்கர் நிலத் திலே வதிவிட வசதிகொண்ட பெரும் பாடசாலையாக அது அமைக்கப்பட்டது. பூஞ்சோலை, ஆடல் அரங்கு, கோயில், தியான மண்ட பம் முதலியவை அங்கே அமைக்கப்பட்டன. மரபுவழியான இந்துக் கல்விச் செயற்பாடு களையும், ஆங்கிலேயர் வழியாகப் பெறப்பட்ட நவீனத்துவத்தையும் இணைக்கும் கலைத்திட்டம் நடைமுறைப்படுத் தப்பட்டது. பெண் கல்வியை முன்னெடுப்பதற்குரிய ஏற்பாடாக பெண் ஆசிரியர்களை உருவாக்கும் கலாசாலை ஒன்றும் அங்கே நிறுவப்பட்டது.

சமூகத்திலும் கல்வியிலும் பெண்கள் பற்றிய நிலை பெருமள விலே ஆண்களின் கட்டுமைக்கு *(Construct)* உட்பட்டதாகவே காணப்படுகின்றது. பாலர் கல்வியில் பெண்பாலாரை வேறுபடுத்தும் அறிகைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இடைநிலைக் கல்வியிலும் விளையாட்டுக்களிலும், பாடத்தெரிவுகளிலும் ஆண் பெண் வேறுபாடுகள் மேலும் மீள வலியுறுத்தப்படுகின்றன. றக்பி உதைப்பந்தாட்டம், துடுப்பாட்டம், மேலைநாடுகளிலே பனிச் சறுக் கல் முதலிய கடின விளையாட்டுக்கள் பெருமளவில் ஆண்களுக்குரிய வையாக்கப்பட்டுள்ளன. உயர்கல்வியின் பாடத் தெரிவுகளிலும்

பல்நிலை வேறுபடுத்தல் தொடர்ந்த வண்ணமுள்ளது. அழகியற் பாடங்கள், கலைப்பாடங்கள் முதலியவற்றிலே பெண்களின் எண்ணிக்கையே மிகையாகவுள்ளது.

குழந்தை வளர்ப்பு மற்றும் குடும்ப வாழ்வுடன் தொடர்புடைய தாதியர் தொழில், ஆசிரியத் தொழில் முதலியவற்றில் பெண்களின் எண்ணிக்கை நீட்சியே காணப்படுகின்றது. அதேவேளை முக்கிய மான நிர்வாகப் பணிகளிலும், தீர்மானங்கள் மேற்கொள்ளலிலும் ஆண்களின் வலுவே மேலோங்கியுள்ளது. அதாவது "ஆண்முகா மைத்துவப் பண்பாடு" *(Culture of Male Management)* உலகளாவிய ஒரு பொதுப் பண்பாகக் காணப்படுகின்றது.

கல்வியைப் பொறுத்தவரை வறிய பெண்களே அதிக தாக்கத் துக்கு உள்ளாக்கப்படுகின்றனர். வறிய பெண்களின் கல்வி அவர்களது திருமணத்துக்கு உதவப் போவதில்லை என்றும் மாறாக நெருக்கடிக ளையே உருவாக்கும் என்ற கருத்து நீடித்து வருகின்றது. கல்வியை யும் கற்றலையும் பயனற்றவையாகக் கருதும் பண்பாட்டு மயமாக்க லும் அவர்களிடத்து உருவாக்கப்படுகின்றது.

ஆண்களும் பெண்களும் சேர்ந்து கற்கும் கலவன் பாடசாலைகள் காலனித்துவ ஆட்சிக் காலத்திலிருந்து வளர்ச்சி பெற்று வருகின்றன. பாடசாலையில் ஆண்களாற் பிரதிநிதித்துவம் செய்யப்படும் மன வெழுச்சிகளையும் உணர்ச்சிச் சுமைகளையும் சுமக்க வேண்டிய "விசை தாங்கிகளாக" *(Buffer)* பெண்கள் செயற்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். பாடசாலையில் மட்டுமல்ல, இல்லங்களிலும் இதே நிலைதான் காணப்படுகின்றது.

இலங்கையில் இடம்பெற்றுவரும் அரசியல் மற்றும் சமூக நடவடிக்கைகளால் பெண்களின் எழுத்தறிவீதம் அதிகரித்து வரு கின்றது. அந்த அதிகரிப்பின் அனுகூலம் குடும்ப ஆற்றுகைகளுக்கே பெருமளவிலே பயன்படுத்தப்படுகின்றது. பெண்களின் கல்வி மேம்பாடுகளை ஆண்கள் தமக்குரிய "பயமுறுத்தலாக"க் கொள்ளும் நிலையே பாடசாலைகளிலும் காரியாலயங்களிலும் காணப்படுகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை வறிய பெண்களே கூடுதலான இடைவிலகலுக்கும் மீளக் கற்றலுக்கும் உள்ளாகின்றனர். பெருந் தோட்டத் துறையில் இந்த நிகழ்ச்சி துல்லியமாகப் புலப்படுகின்றது.

சமூக நிலையிலே உயர்ந்த மேட்டுக்குடியினர் தமது பெண்களின் கல்வியிலே காட்டும் அக்கறை போன்று வறிய பெற்றோரால் காட்ட முடியாதிருக்கின்றது. மேலும் மேட்டுக்குடியினர் அழுத்தக் குழுவின ராகச் செயற்பட்டுத் தமது பெண் பிள்ளைகளுக்குரிய கல்வி வசதி களைப் பெற்றுக்கொள்கின்றனர். பெண்கல்வி தொடர்பான அண்மைக்காலத்து ஆய்வு முடிவுகள் வருமாறு.

(1) ஆண்களும் பெண்களும் இணைந்து கற்கும் பாடசாலைகளில் இருசாராரது கல்வி அடைவுகளிலும் பொருண்மை கொண்ட வேறுபாடுகள் காணப்படவில்லை.

(2) அரசாங்கத்தின் பொதுப் பரீட்சைகளின் அடைவுகளைப் பொறுத்தவரையில் பால்நிலையிலே குறிப்பிட்டுக் கூறக்கூடிய வேறுபாடுகள் காணப்படவில்லை.

(3) வறுமை நிலையிலுள்ள பெண்கள் மற்றும் வசதியான நிலை யில் உள்ள பெண்கள் ஆகியோரின் கல்வி அடைவுகளிலே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படுகின்றன.

பெண்கள் அரசியல் வட்டம் வெளியிட்ட கொள்கை விளக்க அறிக்கையில் (2005-2006) கல்வி தொடர்பான முக்கியமான கருத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கையைப் பொறுத்தவரை பெண்களின் எழுத்தறிவு முன்னேற்றம் சாதகமான நிலையிலே காணப்படுகின்றது. ஆனால், பெருந்தோட்டத்துறையில் வாழும் பெண்களதும் ஏனைய பிரதேசங்களில் உள்ள தாழ்ந்த வருமான முள்ள குடும்பங்களைச் சேர்ந்த பெண்களினதும் எழுத்தறிவு வீதம் மிகவும் தாழ்ந்த நிலையிலே உள்ளது. அதனால் பெண்களுக்குரிய கல்விச் செயற்பாடுகளிலே ஊன்றிய கவனம் செலுத்தப்படல் வேண்டும் என வற்புறுத்தப்பட் டுள்ளது. வறுமையும் சட்டபூர்வமற்ற இனத்துவப் புறக்கணிப்பும் பெருந்தோட்டத்துறைப் பெண்களின் கல்வியைப் பாதிக்கின்றன.

கிழக்குப் பல்கலைக்கழகத்துக் கல்வியியல் மாணவர்கள் பேராசிரியர் ம.செல்வராசா அவர்களின் வழிகாட்டலில் மேற்கொண்ட தாய்மார் பள்ளிக்கூடம் என்ற அமைப்பு கிராமப்புறத்துப் பெண் களின் கல்வியறிவு மேம்பாட்டில் நேர்முகமான விளைவுகளை ஏற்படுத்தி வருதல் குறிப்பிடத்தக்கது. அத்திட்டம் மலையகத்துக்கும் விரிவாக்கம் பெறுமாயின் எதிர்பார்க்கப்படும் கல்வி நலன்களை எட்ட முடியும்.

பெண்களைக் குவியப்படுத்தி இலங்கையில் மேற்கொள்ளப் படும் சீர்மியம் மற்றும் கல்வி வழிகாட்டற் சேவைகள் போதுமான அளவில் வளர்ச்சி கொள்ளவில்லை. பெண்கள் தொடர்பான சமூக அணுகு முறைகளில் எதிர்மறையான பரிமாணங்கள் ஆழ்ந்து காணப் படுதலைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. சில எடுத்துக்காட்டுக்கள் வருமாறு:

(1) மரபுவழியான வீட்டு வேலைகளைச் செய்யாத பெண்களை "விலகல்" நடத்தை கொண்டவர்களாகக் கருதுதல்.

(2) அழுகை, சிரிப்பு முதலாம் மனவெழுச்சிகளை மிகையாக வெளியிடும் ஆண்கள் உளநிலையிலே சந்தேகத்துக்குரியவர்களாகக் கருதப்படுதல் இல்லை. ஆனால் அவ்வாறான பெண்கள் உளப் பிசகு கொண்டவர்கள் என்ற முத்திரை குத்தலுக்கு இலகுவாக உள்ளாக்கப்படுகின்றனர்.

(3) எதிர்காலம் தொடர்பான எழுச்சி கொண்ட இலக்குகள் வறிய பெண்களிடம் தோற்றம் பெறும்பொழுது, அவர்கள் எள்ளி நகையாடலுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

(4) உடல் உளக் குறைபாடுடையவர்களில் பெண்களே சமூகத்தில் அதிக பாதிப்புக்கு உள்ளாகின்றனர். அத்தகைய பெண்களின் மாற்று வலுக்கள் உரிய முறையிலே வளர்த்தெடுக்கப்படுதல் இல்லை.

(5) பாலியல் தொடர்பான தவறுகள் நிகழும் பொழுது பெண்களே கூடுதலான பாதிப்புக்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். ஆண்கள் இலகுவாகத் தப்பிக்கொள்கின்றனர்.

(6) சீர்மியம் மற்றும் உள மருத்துவம் முதலாம் துறைகள் ஆண்களை மட்டுமே குவியப்படுத்தி மேற்கொள்ளப்பட்டிருத்தலை பிலிப்செஸ்லர் என்பார் தாம் எழுதிய "பெண்களும் பைத்தியமும்" என்ற நூலிலே தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

(7) கல்வியால் உருவாக்கப்பட்டுவரும் சமூகமயமாக்கற் செயற்பாட்டிலும் குறைபாடுகள் காணப்படுகின்றன. அதாவது ஆண்களின் உலகத்தோடு இசைவுபட்டு வாழ்வதற்குரிய பயிற்சிகளே சமூக மயமாக்கலிலே குவியப்படுத்தப்படுகின்றன.

(8) பெண்கள் ஏதோ நிலையிலே போதாது இருக்கின்றனர் *(Woman As Lack)* என்ற கருத்து சமூகத்திலே ஆழப் பதிந்துள்ளது.

(9) பாடசாலைகளிலும் பொதுவிடயங்களிலும் மாணவிகள் இலகுவிலே சொல்சார்ந்த பாலியற் சுரண்டலுக்கு *(Verbal Sex Ploitation)* உள்ளாக்கப்படக்கூடிய நிலையிலே உள்ளனர்.

கல்வியிலும், சீர்மியத்திலும் வளமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொழுது மேற்குறிப்பிட்டவற்றை ஆழ்ந்து நோக்க வேண்டியுள்ளது.

கல்வி வழியாக எட்டப்படும் உயர்மட்ட நிர்வாகம், மற்றும் முகாமைத்துவப் பதவிகளிலே பெண்கள் இடம்பெறுதல் படிப்படியாக இலங்கையிலே அதிகரித்து வருகின்றதாயினும் அந்த அனுகூலங்கள் வறிய குடும்பச் சூழலில் உள்ள பெண்களால் எட்டப்படவில்லை என்பது ஆழ்ந்த நோக்கலுக்குரியது.

இலங்கையைப் பொறுத்தவரை பெண் கல்வியின் பின்னடைவுகள், குடும்பங்களின் பொருளாதாரநிலை, இனக்குழும நிலை, வாழ்விடநிலை, உள்நாட்டு யுத்த முடிவின் தொடர்ச்சி முதலாம் பல்வேறு காரணிகளுடன் தொடர்புபட்டுள்ளது.

***

# கல்விக்குரிய தனிநபர் கேள்வியும் சமூகக் கேள்வியும்

கல்வியாற் பெறப்படும் பொருண்மிய நலன்கள் தனிநபர் கேள்வியையும் சமூகக் கேள்வியையும் அதிகரிக்கச் செய்துவருதல் பொதுவான ஓர் எழுகோலமாகக் காணப்படுகின்றது. குடும்ப எழுச்சிகள் கல்வியோடு தொடர்புபட்டு நிற்றலால் கல்விக்குரிய முதலீடுகளிலே குடும்பங்கள் அதீத அக்கறை காட்டுகின்றன. கற்றுயர்ந்துவரும் குடித்தொகையானது அபிவிருத்திக்குரிய முன் நிபந்தனையாகின்றது. தேசிய அபிவிருத்தியைப் பலநிலைகளிலும் முன்னெடுப்பதற்கு கல்வியூட்டம் பெற்ற மனிதவளம் அடிப்படை யாகின்றது. தனியார் கேள்வியும் சமூகக் கேள்வியும் ஒன்றுக்கு அனுசரணையானவை. அவற்றில் எது முந்தியது என்ற வினாவுக்கு விடைகாண சமூகத்தின் அடிக்கட்டமைப்பாகிய பொருண்மியத் தளத்தின் வளர்ச்சியைத் தொடர்புபடுத்தி நோக்கல் வேண்டும்.

ஐரோப்பியரால் மேற்கொள்ளப்பட்ட காலனித்துவக் கல்வி நடவடிக்கைகள் கல்விக்குரிய தனிநபர் கேள்வியைத் தூண்டின. அவர்களின் நோக்கம் தமது தேவைக்குரிய பணியாட்களை உருவாக்கிக் கொள்ளலாகும். அந்நிலையிலே தனிநபர்கள் அடைந்த நன்மைகளிலும் காலனித்துவ அரசினாற் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுகூலங்களே ஒப்பீட்டளவில் மிகையாகக் காணப்பட்டன. காலனித்துவம் தமக்குரிய பெருஞ்சுரண்டல் அமைப்புக்கு ஓரளவுக் கற்ற தனிநபர்களை நடைமுறைப் பயன்கொண்ட கருவிகளாக்கிக் கொண்டனர். காலனித்துவக் கல்வியிலே தனிநபர்களுக்கு எண்ணும் எழுத்தும் கற்பிக்கப்பட்டனவேயன்றி ஐரோப்பாவிலே வளர்ச்சி பெற்று வந்த தொழில்நுட்ப அறிவுக் கையளிப்பு மேற்கொள்ளப்படவில்லை.

தனிநபர் நிலையிலான கல்விக்குரிய கேள்வி சமூக அடுக்கமை வுக்கேற்றவாறு வேறுபடுகின்றது. மத்தியதர வகுப்பினரும் அந்த

வகுப்பினருக்கு மேற்பட்டோரும் வாண்மை நிலையிலான தொழில் களை நோக்கிய கல்விக்குரிய கேள்வி உந்தல் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். அதேவேளை அடித்தளத்து மக்களின் கேள்வி யானது அவர்களுக்குரிய தாழ்ந்த நுகர்ச்சி வலுவுடன் தொடர்புடை யதாகக் காணப்படுகின்றது.

ஒருவரது வாழ்க்கை நீட்சியளவும் தொடரும் வருமானத்துக்கும் கல்வி மட்டத்துக்கும் நேரடியான இணைப்பு இருத்தலை ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. தனிநபரும் அவற்றை உணர்ந்துகொள்கின் றனர். அதாவது குறிப்பிட்ட கல்வி மட்டத்தை எட்டுவதற்கு உட் செலுத்திய முதலீட்டைக் காட்டிலும் அதிக பெருக்கம் கொண்ட வருமானத்தை ஈட்டிக்கொள்கின்றனர். இந்த நடைமுறை அனுபவம் கல்விக்குரிய தனிநபர் கேள்வியை மேலும் தூண்டிய வண்ண முள்ளது.

தொழிற்கோலங்களில் வளர்ச்சி பெற்றுவரும் மாற்றுச் சந்தர்ப் பங்களும் கல்விக்குரிய தனிநபர் கேள்வியைத் தூண்டி வருகின்றன. தொழில் வழங்கலில் அரச துறைக்குச் சமாந்தரமாகவும், மிகையாக வும் தனியார்துறை வளர்ச்சியடைந்து வருகின்றது. அந்நிலையில் தொழில் வாய்ப்புகளிற் காணப்பட்ட ஒற்றை வழிப்பாதை பலவழிப் பாதைகளாக மாற்றம் பெறத் தொடங்கியுள்ளது. புதிய புதிய உயர் தொழில்கள் தோற்றம்பெறத் தொடங்கியுள்ளன.

குறைந்த கல்வி மட்டங்களுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் மரபு வழித் தொழில்கள் வாயிலாகப் பெறப்படும் வருமான ஈட்ட மானது கல்வி அடைவுகளுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் தொழில் கள் ஈட்டித்தரும் வருமானத்தைக் காட்டிலும் ஒப்பீட்டளவிலே குறைவாக இருத்தல் கல்விக்குரிய கேள்வியைத் தொடர்ந்து தூண்டி வருகின்றது.

கல்வி சமூக அந்தஸ்தைத் தீர்மானிக்கும் கருவியாகவுமுள்ளது. சமூக எழுகுழாத்தினர் (Elites) முன்மாதிரியான ஆளுமை கொண்ட வராகவும் விளங்கும் நிலை மேலும் தூண்டுதலை வழங்கலாயிற்று. "எழுகுழாத்து வலு" என்ற சமூகவியல் தோற்றப்பாடு அண்மைக் காலமாக வளர்ச்சிபெறத் தொடங்கியுள்ளது. அதாவது, எழுகுழாத்தினர் அரசியல், பொருளாதாரம், மற்றும் பண்பாட்டுத் துறைகளிலே தமது செல்வாக்குகளைப் பிரயோகிப்பவர்களாகவும், அழுத்தக் குழுவின ராகவும், சுயஇலாபம் ஈட்டுவோராயுமிருத்தல் தனிநபர் நிலைக் கேள்வியைத் தூண்டிவிடுகின்றது.

அண்மைக்காலமாக வளர்ச்சி பெற்றுவரும் பெண்ணிலை இயக்கங்கள், பெண்களிடத்துக் கல்விக்கான ஆவலையும் விருப்பையும் தூண்டி வருகின்றன. கல்வியாலும் அதன் வழியாகப் பெறப்படும் தொழில்களாலும் பெண்கள் தங்கி வாழ்வோராய் இருக்கும் நிலைத் தகர்க்கப்படுகின்றது.

சிக்கலடைந்து மேலுயர்ந்துவரும் தொழில்நுட்ப வளர்ச்சியும், அறிவுப் பொருளாதாரத்தின் எழுச்சியும் கல்விக்குரிய சமூகக் கேள்வி யிலே செல்வாக்குகளை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன. பொதுவான பொருண்மியத்துறைகளும் சிறப்புப் பொருண்மியத் துறைகளும் கல்வியோடு நேரடியாகத் தொடர்புபட்டு நிற்கின்றன.

பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளவர்களுக்குக் கல்வியை வழங்குதல் வாயிலாக மொத்தப் பயிர் உற்பத்தியிலே தொடர்ச்சி யான அதிகரிப்பு இடம்பெற்று வருதலை அரசுகள் நேரடியாக அனுபவித்து வருகின்றன.

பொருண்மிய வளப் பெருக்கில் மூளை வலுவின் முக்கியத்துவம் அதிக வலியுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது. பொருளியலின் பிற துறைகளிலே முதலீடுகளை செய்வதைக் காட்டிலும் கல்வியிலே மேற்கொள்ளப்படும் முதலீடுகள் அதிக விளைதிறன் கொண்டிருத்தல் குறிப்பிடப்பட்டுள்ளது.

வரன்முறையான சமூக நீரோட்டத்தினுள் மக்களை அழைத்துச் செல்வதற்கும் நேர்முக சமூகமயமாக்கலுக்கும் கல்வி வேண்டப்படு தல் சமூகக் கேள்வியைத் தூண்டி வருகின்றது. வரலாற்றுப் பாடத்தைக் கற்பிப்பதன் வாயிலாக அரசுகள் தமக்குச் சார்பான அறிகைச் சூழலை உருவாக்கிக் கொள்கின்றன.

சமூகக் கேள்வியானது சமயச்சார்பான கல்வி சமயச் சார்பற்ற கல்வி என்ற இருநிலைகளிலே நோக்கப்படுகின்றது. தீவிர சமயநோக் கும் ஒவ்வொரு சமயத்திலும் மேலெழுந்துள்ள அடிப்படை வாதமும் சமயக்கல்விக்குரிய சமூகக் கேள்வியை அதிகரிக்கச் செய்து வருகின்றன.

1950ஆம் ஆண்டிலே ஐக்கிய நாடுகள் அமையம் வெளியிட்ட கல்வி ஓர் அடிப்படை உரிமை என்ற பிரகடனம் கல்விக்கான சமூகக் கேள்வியின் அதிகரிப்புக்கு மேலும் விசையூட்டியது. அதேவேளை உலகளாவிய முறையில் வளர்ச்சிபெறத் தொடங்கிய தகவல் தொடர்பாடல் வளர்ச்சியும், ஊடகங்களின் எழுச்சியும் கேள்வியின் அதிகரிப்புக்குத் துணை செய்தன.

ஒன்றிணைந்த திட்டமிடற் செயற்பாடுகளின் வளர்ச்சியும் இத்துறையிலே தாக்க விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றது. கல்வியும், சுகாதாரமும் ஒன்றிணைந்த திட்டமிடலிலே இடம்பெற வேண்டிய பிரதான மனிதவளத் துறைகளாகவுள்ளன. சமூகத்திட்டமிடல் பொருண்மியத் திட்டமிடல் ஆகிய இரண்டிலும் கல்வி ஒன்றிணைந்த சிறப்புக் கூறாக நிலைபேறு கொண்டுள்ளது.

மானிடவாதம், மார்க்சியவாதம் ஆகியவற்றின் உலகம் தழுவிய புதிய வளர்ச்சி நிலைகள் கல்விக்குரிய சமூகக் கேள்வியைக் கருத்தியல் நிலையிலே தூண்டி வருகின்றன.

ஐவான் இலிச் அவர்களும் பாடசாலைக் கலைப்புச் சமூகத் துக்கு ஆதரவானவர்களும் கல்விக்குரிய கேள்வியின் நடப்பியல் நிலவரங்களைத் திறனாய்வு செய்துள்ளனர். கல்வி நிலையங்களும் கற்பிப்போரும் வறியவர்களின் நலன்களைப் புறக்கணிப்புக்கு உள்ளாக்கும் வழிமுறைகளைக் கையாளுகின்றனர் என்பதை இலிச் குறிப்பிட்டுள்ளனர்.

"பாடசாலைகள் நவீனமயப்பட்ட பாட்டாளிகளுக்குரிய உலக சமயமாக மாறி வருகின்றன. நவீன தொழில்நுட்ப யுகத்தில் அவை பயனற்ற உறுதிமொழிகளை வழங்குகின்றன" என்று ஐவான் இலிச்சின் அறிவுறுத்தினார். கல்விக்குரிய தனியார் கேள்வி அதிகரித்துவரும் நிலையிலே, கல்வி நிலையங்களைத் தேவைகருதி திறனாய்வு செய்தலும் மேலெழத் தொடங்கியுள்ளன.

வறியோரைத் தாழ்ந்த வகுப்பினராகத் தொடர்ந்து தக்க வைப் பதற்குரிய கல்வி முறைமையே இலத்தீன் அமெரிக்க நடுகளிலே காலனித்துவம் உருவாக்கியுள்ளமையை போலோ பிரேரி தாம் எழுதிய "ஒடுக்குமுறைக்கான ஆசிரியத்துவம்" (1972) என்ற நூலிலே குறிப்பிட்டுள்ளார். சமூக மாற்றத்துக்குரிய மீளமைக்கப்பட்ட கல்வியின் தேவையை ஒடுக்கப்பட்ட தனிநபர் நிலையிலும், பொது நிலையிலும் அவர் வலியுறுத்தினார். அவரின் கருத்து புரட்சி நோக்கிலே மாற்றியமைக்கப்பட்ட கல்விக்குரிய கேள்வியை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அந்தக் கேள்வி முறைசார் கல்வியுடன் மட்டுமன்றி முறைசாராக் கல்வியுடனும் தொடர்புபட்டிருந்தது.

கல்விக்குரிய கேள்வியைக் கலைத்திட்ட மாற்றங்களை அடியொற்றி யுலியஸ் நியெரெரே குறிப்பிட்டுள்ளார். கல்வியின் வழியாகத் தற்சார்புடைமையை வளர்த்தல் அதன் அடிப்படை நோக்காக அமைந்துள்ளது.

பொதுக்கல்வியை விரிவாக்குதலை ஓர் உரிமையாகக் கொள் ளும் நடவடிக்கைகள் அண்மைக்காலமாக முன்னேற்றம் பெற்று வருகின்றன. அதேவேளை வரன்முறையான கல்விக்குரிய செலவு கள் அதிகரித்து வருதல் நெருக்கடிகளை ஏற்படுத்தி வருகின்றது. அந்த முரண்பாடுகளிடையே கல்விக்குரிய அரசியற் கேள்வி அதிகரித்து வருகின்றது. அனைத்து மட்டங்களிலும் கல்வி நிறுவனங்களை நோக்கிய நுழைவுகள் அதிகரித்துச் செல்லலை அரசியற் கட்சிகள் புறக்கணிக்க முடியாத நிலையிலுள்ளன. அந்நிலையில் அரசுகள் பிறதுறைகளுக்குரிய முதலீடுகளைச் சுருக்கிக் கல்விக்குரிய முதலீடு களை அதிகரிக்கச் செய்யும் நிலைக்குத் தள்ளப்படுகின்றன. அந்நிலையிலும் கேள்விக்குரிய நிரம்பலை வழங்க முடியாத நிலையில் அரசுகள் தத்தளித்தலையும் காணமுடிகின்றது.

இலங்கையில் மருத்துவம், பொறியியல் முதலாம் துறைகளில் எழுந்துவரும் கேள்விக்குரிய இட நிரம்பலை வழங்க முடியாத இடர்ப்பாடான நிலை காணப்படுகின்றது.

கல்வி நிலைக்குத்து அசைவியத்தை மட்டுமன்றி கிடை அசை வியத்தையும் ஏற்படுத்துகின்றது. நிலைக்குத்து அசைவியம் சமூக அடுக்கமைவில் ஏறிச் செல்லும் நிலையைக் குறிப்பிடுகின்றது. கிடை அசைவியம் கிராமங்களில் இருந்து நகரங்களுக்குப் பெயர்ந்து செல்லலையும், விருத்தி அடைந்த நாடுகளை நோக்கி விருத்திய டைந்து வரும் நாட்டினர் பெயர்ந்து செல்லலையும் குறிப்பிடுகின்றது. கல்வியினால் உருவாக்கப்படும் இவ்வாறான அசைவியச் செயற் பாடுகளும் அசைவியக் கவர்ச்சியும் கல்வி மீதான கேள்வியை அதிகரிக்கச் செய்கின்றது.

எதிர்பார்ப்பு நிலையிலே கல்விக்குரிய கேள்வி தொடர்ந்தும் அதிகரிப்பதற்குரிய எழுவிளைவுகளே நடப்பு நிலையிற் காணப்படுகின்றன.

***

# பல்கலைக்கழகக் கல்விப் பிரச்சினைகள்

இலங்கையின் ஆரம்பக் கல்வி மற்றும் இடைநிலைக்கல்வி விரிவடைந்த அளவுக்கு உயர்கல்வியின் வளர்ச்சியும் விரிவும் இணைந்து செல்லாமையினால், பாடசாலைக் கல்வியை நிறைவேற் றும் மாணவர் மேல்நோக்கிய அசைவைப் பெறமுடியாத அழுத்தங் களுக்கு உள்ளாகின்றனர். கல்விப் பிரச்சினையாக மட்டுமன்றி சமூகப் பிரச்சினையாகவும், உளவியல் சார்ந்த நெருக்கீடுகளை உருவாக்கும் பிரச்சினையாகவும் அது கிளர்ந்தெழுகின்றது. தனியார் பல்கலைக்கழகங்களும் உயர்கல்வி நிறுவனங்களும் இயக்கப்படு வதற்கு அனுமதி வழங்கப்பட்டாலும் அவற்றின் கட்டணங்கள் சாமானியர்க்கு எட்டாதவையாகி விடுதல் இன்னொரு புறம் சமூக முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன.

பிரித்தானியர் காலத்தில் இலங்கையில் இயங்கி வந்த மருத்துவக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகக் கல்லூரி ஆகியவற்றில் எழு குழாத்தினரே கற்றுத் தம்மை மேலும் வளப்படுத்தினர். எழுகுழாத்தி னர் பல்கலைக்கழகக் கல்வியால் தொடர்ந்து பாதுகாக்கப்பட்டு வந்தனர். 1942ஆம் ஆண்டிலே இலங்கைப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்ட பின்னரும் அதிலே கல்வி கற்கும் வாய்ப்பினை எழுகுழாத்தினரே பெற்றுக்கொண்டனர். தாய்மொழி வழிக்கல்வி இலங்கையில் வலுப்பெறத் தொடங்க சாமானியரும் பல்கலைக் கழகங்களிலே பயிலும் வாய்ப்பைப் படிப்படியாகப் பெறத் தொடங் கினர். 1960ஆம் ஆண்டைத் தொடர்ந்து அந்நிகழ்ச்சி ஏற்படலாயிற்று. கலைப்பாடங்கள் தாய்மொழி வாயிலாகக் கற்பிக்கப்பட்டமையால் அத்துறைகளிலே சாமானியர்கள் எண்ணிக்கை அதிகரிக்கலாயிற்று. மருத்துவம், பொறியியல் முதலாம் துறைகளில் சமூகத்தில் அனுகூலம் மிக்கவர்களே

கூடுதலான இடங்களைத் தொடர்ச்சியா கக் கைப்பற்றி வருகின்றனர். ஆரம்பம் மற்றும் உயர்நிலைக் கல்வியை வறுமை தாக்கும் பொழுது எவ்வாறு அவர்களால் உயர் கல்வியை எட்டிப்பிடிக்க முடியும். மேலும் யுத்தப் பாதிப்புக்கு உள்ளான மாணவரும் தமக்குரிய பல்கலைக்கழகக் கல்வியை இழந்தமை இலங்கையின் கல்வி வரலாற்றிலே இடம்பெற்ற நெருடல் நிகழ்ச்சியாகும்.

இலங்கையின் பல்கலைக்கழகக் கல்வி வரலாற்றிலே பெண்களின் பங்குபற்றல் அதிகரித்து வருதல் குறிப்பிடக்கூடிய ஒரு சிறப்புப் பரி மாணமாகும். பெண்களின் உயர்கல்வியைப் பொறுத்தவரை வறுமை பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. வறுமை நிலையில் உள்ள ஆண்களைக் காட்டிலும் பெண்களே மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகின்றனர். பெருந்தோட்டத் துறையிலே பெண்களின் பல் கலைக்கழகக் கல்விப் பங்குபற்றலில் மிகுந்த பின்னடைவு காணப் படுகின்றது.

இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படும் மாணவர் எண்ணிக்கையிலும், பயில்துறைகளின் எண்ணிக்கை யிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. தொடக்க காலத்து மூத்த பல்கலைக்கழகங்கள் அமைப்பியல் நிலையிலே பலமுள்ளவை யாகக் காணப்படல் சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒரு முக்கியமான பண்பாகும். கொழும்பு, பேராதனை, மொரட்டுவை முதலாம் பல்கலைக்கழகங்கள் இவ்வகையிலே வள அமைப்பிலும், ஆளணித் தொகுதியிலும் ஒப்பீட்டளவில் முன்னேற்றகரமான நிலையில் உள்ளன.

இலங்கை ஒரு விவசாய நாடாக இருக்கும் பொழுது விவசாயத்துக் கென தனியான ஒரு பல்கலைக்கழகமோ, கடல்வளம் கொண்ட நாடாக இருக்கும் நிலையில் கடல் வளத்துக்கென தனியான ஒரு பல்கலைக்கழகமோ உருவாக்கப்படவில்லை. உயர்கல்விக்கும் பொருளாதாரச் செயல்முறைகளுக்குமிடையேயுள்ள இடைவெளியை இந்த நிகழ்ச்சி ஒருவகையிலே சுட்டிக்காட்டுகின்றது.

பல்கலைக்கழகங்களுக்குரிய அனுமதிக்கொள்கை பிரச்சினைக் குரியதொன்றாகவே காணப்படுகின்றது. முன்னேற்றமடைந்த மாவட்டங்களில் உயர்சித்தியைப் பெறும் மாணவர் அனுமதி பெற முடியாத அவலமான நிலை தொடர்கின்றது. அதேவேளை முன் னேறிய மாவட்டங்களிலும் பின்தங்கிய சமூக அலகுகளும், பிரதிகூலமடைந்தோர் கற்கும் பாடசாலைகளும் உள்ளன. அவர் களுக்கு எதுவிதமான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

வறுமைக்கோடு பல்கலைக்கழக அனுமதியில் கருத்திற் கொள்ளப்படவில்லை. மிகுந்த வறுமை நிலையில் வாழும் மாண வருக்கு அனுமதியில் எவ்விதமான நலன்தரு பாகுபாடும் வழங்கப்பட வில்லை. பின்தங்கிய மாவட்டங்களுக்கு வழங்கப்பட் டுள்ள அனுமதிச் சலுகையினை அந்த மாவட்டங்களில் வாழும் வாய்ப்பு மிக்கோருடன் வாய்ப்புமிக்க பாடசாலைச் சமூகத்தினருமே அனுபவித்துக் கொள்கின்றனர். பொருளாதார நிலையில் எல்லைப் படுத்தப்பட் டோருக்கு பின்தங்கிய மாவட்ட சலுகையின் நலன்கள் கிடைக்கப் பெறுவதற்குரிய ஏற்பாடுகள் இல்லை. மேலும் பல்கலைக்கழக அனுமதிமுறை இந்நாட்டிலுள்ள பின்தங்கிய பாடசாலைகளின் மேல் நோக்கிய அசைவியத்துக்குத் துணை செய்வதாகவும் அமையவில்லை.

பல்கலைக்கழகக் கல்வியின் தரங்களிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. அதாவது ஒரே பட்டத்தை பல பல்கலைக்கழகங் கள் வழங்கி வந்தாலும், அவற்றிடையே பாட உள்ளடக்கம், கற்பித்தல் முறைமை, கற்பிக்கும் ஆளணியினரின் தராதரம், கற்றல் வளங்கள், மதிப்பீட்டு முறைமை முதலியவற்றிலே ஏற்றத்தாழ்வுகள் நிலவுகின் றன. அந்நிலையிலே பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் பெறும் குறிப்பிட்ட பட்டத்தை ஒரே தரத்தில் வைத்து மதிப்பிட முடியாதுள்ளது.

பல்கலைக்கழகப் பாடத்திட்டங்கள் தொடர்ச்சியான நவீனப் படுத்தலை வேண்டி நிற்கின்றன என்பது அறிவுப் பொருளாதார எழுச்சியின் முக்கியமான கருத்தாகும். அந்த நவீனமயப்பாடு உரிய முறையிலே மேற்கொள்ளப்படுகின்றதா என்பது கேள்விக்குரியதா கின்றது. நவீனப்படுத்தப்படாத பழைய குறிப்புக்களை வழங்கல் தொடர்ந்த வண்ணமுள்ளது என்ற அவதானிப்பும் உண்டு. மறுபுறம் தவறான நவீனப்பாடும் முன்னெக்கப்படுகின்றது. வலைத்தளங்களி லிருந்து தரவிறக்கம் செய்யப்பட்டவற்றை எதுவித விளக்கமோ திறனாய்வோ இன்றி ஒப்படைத்தலும் தவறான நவீனப்பாடு ஆகின்றது.

மாணவர்கள் பரீட்சைகளைக் கையாள்வோராய் மாற்றப்படு கின்றனரே அன்றி அறிவை அள்ளிச் செல்வோராயும் அறிவைப் பயன்படுத்துவோராயும் உருவாக்கப்படவில்லை. அறிவுப் பலத்தைக் காட்டிலும் பரீட்சையைக் கையாளும் ஆற்றலைப் பயன்படுத்தி உயர் வகுப்புச் சித்திகளைப் பெறக் கூடியதாகவுள்ளது.

ஆய்வுகளே பல்கலைக்கழகங்களுக்குரிய தலையாய பணியா கின்றது. இலங்கைப் பல்கலைக்கழகங்கள் கற்பித்தலிலே செலுத்தும் ஊன்றிய கவனத்தை ஆய்வுகளிலே ஒப்பீட்டளவிற் செலுத்துதல் இல்லை. உரிய முறையில் ஆய்வுப் பண்பாடு வளர்த்தெடுக்கப்பட வில்லை. பட்டம் பெறுவதற்கு ஆய்வுகள் கையாளப்படுகின்றன வேயன்றி நாட்டின் நலன்களை நோக்கியோ, பொருளாதார நலன் களை நோக்கியே, புதிய கண்டுபிடிப்புக்களை நோக்கியோ வளர்த் தெடுக்கப்படவில்லை. "ஒரே வகையான தட்டையான" ஆய்வுகளே வளர்க்கப்படுகின்றன.

புதுமை என்ற வகையிலே நவீன புள்ளிவிபரவியல் ஆய்வுகளே முன்னெடுக்கப்படுகின்றன. இருக்கின்ற நிலவரங்களைத் துல்லி யமாக விளக்குவதற்கு அவை உதவுமேயன்றி அதற்குமேல் அவற்றால் நகர்ந்து செல்ல முடியாது. நாட்டுக்குத் தேவையான பிரயோக ஆய்வுகள், அடிப்படை ஆய்வுகள், பரிசோதனை ஆய்வு கள், செயல்நிலை ஆய்வுகள் முதலியவை உரிய முறையிலே வளர்த் தெடுக்கப்படவில்லை. பொருளாதார நலன்களை ஈட்டித்தரவல்ல ஆழ்ந்த ஆய்வுகளும் பொருத்தமான முறையில் முன்னெடுக்கப்படவில்லை.

ஒருவர் மேற்கொண்ட புள்ளிவிபரவியல் ஆய்வை அடியொற்றி இன்னொருவர் இலகுவாக வேறோர் ஆய்வைச் செய்து சமர்ப்பிக் கும் வாய்ப்பும் உள்ளது. உதாரணமாக குறித்த ஒரு மாவட்டத்தின் மதுப்பழக்கம் பற்றி ஒருவர் ஆய்வு செய்திருந்தால் அதே இலக்கிய மீளாய்வு ஆய்வுமுறை, ஆய்வுக் கருவிகள் முதலியவற்றைப் பயன்படுத்தி இன்னொரு மாவட்டத்தின் மதுப்பழக்கம் பற்றிய ஆய்வை இலகுவாகச் சமர்ப்பித்து விடலாம். இதனால் ஆய்வுக் குரிய பண்புகளாகிய புதிய தேடல், ஆழ்ந்தநோக்கு, ஆக்கமலர்ச்சி, புத்தாக்க முனைப்பு, பயன்கொள் பரிமாணம், புலமைநீட்சி முதலியவை இல்லாமற் போய்விடுகின்றது.

அதேவேளை பல்கலைக்கழகங்களுக்கு வெளியே அதிக தரம் மிக்க ஆழ்ந்த ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தேயிலை, தென்னை, இறப்பர், நெல் ஆராய்ச்சிகளில் பல்கலைக்கழகத்துக்கு வெளியில் உள்ள நிறுவனங்கள் ஆழ்ந்த ஆய்வுகளை மேற்கொண்டு வருதல் குறிப்பிடத்தக்கது. சமூக விஞ்ஞானத் துறைகளிலும் புலமை ஆழம்மிக்க ஆய்வுகளும் வெளியீடுகளும் பல்கலைக்கழகங்களுக்கு

வெளியே நிகழ்த்தப்படுகின்றன. ஆய்வுகளுக்கென நிதி ஒதுக்குதல் மட்டும் போதாது. புலமை மிக்க வல்லுனர்களையும் ஆய்வை ஆற்றுப்படுத்தலுக்குப் பயன்படுத்திக்கொள்ளல் வேண்டும். ஆய்வை மேம்படுத்தும் அலகுகளை உருவாக்குதல், இலங்கையிலும், உலகிலும் நிகழ்ந்த ஆய்வுகள் தொடர்பான பரிமாற்றங்களை ஏற்படுத்துதல், ஆய்வு மேம்பாட்டுக்குரிய கட்டளைகளை ஏற்படுத்துதல், மாமூலான தட்டையான ஆய்வுப் போக்கினைக் கைவிடல் முதலிய செயற்பாடுகளை முன்னெடுத்தலில் ஊன்றிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

பல்கலைக்கழகங்கள் மூடிய நிலையிலிருந்து தொழிற்பட முடியாது. வளர்ச்சியடைந்த பல்கலைக்கழகங்களுடன் புலமைத் தொடர்புகளை வளர்த்துக்கொள்ளும் பொழுதுதான் அறிவு மேலோங்கலை முன்னெடுக்க முடியும்.

விரிவுரையாளர்களின் நியமனங்களைப் பொறுத்தவரை அரை நூற்றாண்டுகளுக்கு முன்னரான ஏற்பாடுகளே இன்றும் பெருமளவிலே இந்நாட்டிற் பின்பற்றப்படுகின்றன. பல்கலைக்கழகம் சிறப்புத் தேர்ச்சிக்கும் ஆய்வுத் தேர்ச்சிக்குமுரிய நிறுவனமாகும். அந்நிலையில் முதலாவது பட்டத்தை *(First Degre)* மட்டும் வைத்து நியமனத்தை வழங்கும் பழைய முறைமை சமகாலத்தைய உயர் அறிவு வளர்ச்சிக்குப் பொருத்தமானது அன்று, உலகப் பல்கலைக்கழகங்கள் பின் பட்டங் களையும் சிறப்புத் தேர்ச்சிகளையும் ஆய்வுகளையும் அடிப்படை யாக வைத்தே நியமனங்களை வழங்குதல் குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழக விரிவுரையாளர் தமது இருப்பிலே ஊன்றிய கவனம் செலுத்துமளவுக்கு சமூக இருப்பிலே கவனம் செலுத்தாத குறுகிய உளப்பாங்குடன் வாழ்ந்து வருகின்றனர் என்ற திறனாய்வும் முன்வைக்கப்படுகின்றது. அதனால் சமூகத்தின் எதிர்பார்ப்புக்களை அவர்களால் நிறைவேற்ற முடியாதுள்ளது. சமூகத்தை விளங்கிக் கொள்வதற்கும், மேம்படுத்துவதற்கும், மாற்றியமைப்பதற்குமான அறிவுப் பிரயோகத்தை எதிர்பார்க்குமளவுக்குப் பல்கலைக்கழகங் களிடமிருந்து பெறமுடியாதுள்ளது. தற்கர்வம் *(Egoism)* மேலோங் கலும் சமூக நோக்கை இருட்டடிப்புச் செய்துவிடுகின்றது. ஆற்ற லால் எழுச்சி பெறுவதைக் காட்டிலும் "வேறு வழிகளால்" முன் னேற்றம் பெற முயலும் செயற்பாடுகளும் வளர்வுறும் நாடுகளிலே காணப்படுகின்றன.

பல்கலைக்கழகங்கள் வழங்கும் வெளிவாரிப் பட்டப்படிப்புக் கள் தொடர்பான ஆய்வுகள் பலநிலைகளிலே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உள்வாரிப் பட்டங்களுக்கும் வெளிவாரிப் பட்டங் களுக்குமிடையே வேறுபாடு காணப்படுதலை ஆய்வுகள் வெளிப் படுத்தியுள்ளன. வெளிவாரிப் பட்டங்களுக்கெனக் கற்பிக்கும் தனியார் நிறுவனங்கள் வளங்குன்றிய நிலையிலே காணப்படு கின்றன. அங்கு பரீட்சை உபாயங்களுக்கெனக் கற்பிக்கும் முறையே மேலோங்கியுள்ளது. உள்வாரி மாணவரும் வெளிவாரி மாணவரும் விரிவுரையாளர் வழங்கும் குறிப்புக்களில் தங்கியிருக்கும் நிலையே உருவாக்கப்பட்டுள்ளது. மேலதிகமான அறிவுத் தேடலும், வளமான வாசிப்பும் பின்தள்ளப்பட் டுள்ளன. "குறிப்பே போதும்" ஏனையவை தேவையற்றன என்ற உளப்பாங்கு உருவாக்கப்பட்டுள்ளது. அதனால் பட்டப்படிப்பின் பண்பும் தரமும் வீழ்ச்சியடைகின்றன.

பரீட்சை வினாக்கள் ஒரே தளத்திலே தட்டையாகச் சென்று கொண்டிருப்பதனால் பரீட்சை வினாக்களை மாத்திரம் படித்துச் சித்திபெறும் வாய்ப்புக்களும் உள்ளன.

உள்வாரிப் பட்டப் படிப்பிலும் வெளிவாரிப் பட்டப் படிப்பி லும் இடம்பெறும் பாடங்கள் தொழிற்சந்தைக்குப் பொருத்தமற்றவை யாயிருக்கும் நிலையில் தொழில் பெற்றுக்கொள்ள முடியாத பட்ட தாரிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. ஆசிரியத் தொழிலை நோக்கியே அவர்கள் அனைவரும் தள்ளப்படும் பொதுவான போக்கு இலங்கையிலே தோற்றம்பெற்று வருகின்றது. அதனால் ஆசிரியத் தொழிலுக்குரிய உளச்சார்பு அற்றவர்களும் அதற்குள் நுழைந்து விடுகின்றனர். அதனால் "அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்கள்" மற்றும் "அர்ப்பணிப்பு அற்ற ஆசிரியர்" என்ற இருமைப்பாட்டினர் ஆசிரிய வாண்மையிலே தோற்றம் பெற்றுள்ளனர்.

இலங்கையின் பல்கலைக்கழகக் கல்வியில் பலபரிமாணங்க ளைக் கொண்ட பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவற்றில் அபிவிருத்தி சார்ந்த நெருக்கடிகளும் உள்ளடங்குகின்றன. பிரதேச நோக்கு இனக்குழும நோக்கு முதலியனவும் பிரச்சினைகளுடன் ஒன்றிணைந்துள்ளன.

***

# கல்வியில் பண்பும் தரக்காப்பீடும்

செயல்முறையிலும் முடிவுப் பொருளிலும் சிறப்பான அம்சங்களை உள்ளடக்கியிருத்தல் பண்பு எனப்படும். பண்பின் ஒரு குறிப்பிட்ட மட்டமே தரம் என்று கூறப்படும்.

கல்வியில் ***பண்பு*** *(Quality)* ***தரம்*** *(Standard)* ஆகியவை வலியுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படும் பொருள்களாக முன் வருகின்றன. முதலில் மேற்குறித்த இரு எண்ணக்கருக்களும் பற்றிய தெளிவான விளக்கம் கல்வியியலாளருக்கு வேண்டப்படுகின்றது. இரண்டு எண்ணக்கருக்களுக்குமிடையே தொடர்புகள் காணப்பட்டாலும் வேறுபாடுகளும் உட்பொதிந்துள்ளன.

பண்பு என்பது கல்விச் செயல்முறையால் ***எழும் விளைவுகளை*** கல்வியில், சமூகவியல், பொருளியல் முதலியவற்றில் வருவிக்கக் கூடிய மேம்பாடுகளுடன் தொடர்புபடுத்தி நோக்கும் அணுகுமுறை யாகும். உள்ளகத்தே நிகழும் செயல்முறையில் விரயங்களைக் குறைத்தல் அங்கு ஆழ்ந்து நோக்கப்படும். அதேவேளை வெளியீடு கள் விளைதிறன் கொண்டவையா என்பதும் நோக்கப்படும். கற்றல் கற்பித்தல் வழியாக எதிர்பார்க்கப்பட்ட உயர்ந்த இலக்குகள் எட்டப் பட்டனவா என்பதும் பண்பிலே கருத்திற் கொள்ளப்படும். பண்பின் முக்கிய பரிமாணம் செயல்முறையை வினைத்திறன் படுத்தலாகும்.

பண்புக்காப்பீடு *(Assurance)* என்பது கல்வி முகாமைத்துவத்துடன் தொடர்புடைய விடயம். பண்பை நிலைநிறுத்துவதற்குரிய திட்டமிடல் ஒழுங்கமைந்த செயற்பாடுகளை இயக்குதல், செயற்பாட்டிலே ஆசிரியரையும், மாணவரையும் நம்பிக்கையுடன் ஈடுபடுத்துதல், வினைத்திறனுடன் தொழிற்படச் செய்தல், தொழில்

வழங்குனரது உளநிறைவுக்குரிய படித்தவர்களை வழங்கும் நடவடிக்கைகளைச் சிக்கனமாக முன்னெடுத்தல் முதலியவை உள்ளடக்கப்படுகின்றன.

***பண்பைக் கணிப்பீட்டு அடிப்படையிற் குறிப்பிடுதல் தரம் என்ற எண்ணக்கருவாகின்றது.*** உயர்ந்த தரம், தாழ்ந்த தரம், நடுநிலைத்தரம் என்றவாறு விளக்குதல் தரம் என்ற செயற்பாட்டிலே உள்ளடக்கப்படுகின்றது. தரம் பின்வரும் நிலைகளிலே இடம் பெறுகின்றது.

(1) வரிசைப்படுத்தல்

(2) குறிப்பிட்ட நிலைகளை எட்டுதல்

(3) தெரிவு செய்தல்

(4) இனங்காணல்

(5) ஒப்புநோக்கல்

வரன்முறைப்படுத்தப்பட்ட தேவைகளை அடியொற்றியே தரம் அமைகின்றது. அந்த வரன்முறைப்பாட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய தனிக்கூறுகள், எழுபண்புத் தொகுதிகள் முதலியனவும் தரத்தில் உள்ளடக்கப்படுகின்றன. அனைத்துலக நிலையில் நிறுவனங்களில் இதனை நிலை நிறுத்தும் பொருட்டு ISO - 9000 உருவாக்கப்பட்டுள்ளது.

பண்பு என்ற எண்ணக்கரு நீண்ட வரலாற்றுத் தொடர்ச்சியைக் கொண்டது. தமிழ் மரபிலே சங்கப் புலவர் மத்தியிலே பண்பு தொடர்பான கருத்தாடல்கள் நிகழ்ந்தன. தொன்மையான கிரேக்கர் தமது சொல்லாடற் கலையிலே பண்பை வலியுறுத்தினர். தொன்மையான சீன மருத்துவத் துறையில் எழு பண்பு வலியுறுத்தல் இடம்பெற்றது.

பண்பின் நவீன இயக்கம் 1990ஆம் ஆண்டிலே ஆரம்பித்தது. டொனால் ஏ.பிசர் என்ற வேளாண்மையாளர் அதனை முன்னெடுத்தார். காரணம் விளைவு ஆகியவற்றை அடியொற்றித் தொடர்ச்சியான பயிர் வளர்ப்புப் பரிசோதனைகளை ஒழுங்கமைத்தார். அதாவது விளைவை அதிகரிக்கக்கூடிய செயல்முறையில் *(Process)* திறன்மிகு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

உலகளாவிய முறையில் எழுபண்புக் கருத்தை வளர்ப்பதில் டபிள்யு. எட்வேட் டெமிங் என்பாரின் பங்களிப்புச் சிறப்பாகக் கருதப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்காவில் ஆரம்பத்தில் அவரது செயற்பாடுகளுக்கு ஆதரவு கிடைக்கவில்லை. ஆனால், ஜப்பானியர்கள் அவற்றுக்கு அதிக ஆதரவை வழங்கினர். அவரது பெயரால் ஜப்பானிய விஞ்ஞானிகளினதும் பொறியியலாளரதும் ஒன்றியம் *(Juse)* 1951ஆம் ஆண்டிலே பண்பு தொடர்பான ஒரு பரிசுத்திட்டத்தை ஆரம்பித்தது.

பண்பில் ஜப்பானியர் காட்டிய ஆர்வமும் மேற்கொண்ட நடவடிக்கைகளும் பலதுறைகளிலும் அவர்களது உற்பத்தி ஆக்கங்களை மேலெழச் செய்தன. ஜெனிச்சி ரகுச்சி என்பார் பண்பையும் பண்பு அற்ற நிலையையும் *(Non Quality)* துல்லியமாக வேறுபடுத்திக் காட்டினார். பண்பிலே முன்வகைப்பாட்டு ஆக்கத்தை *(Prototyping)* வடிவமைத்தார்.

பூச்சிய நிலைக் குறைபாடுகள் *(Zero Defects)* என்ற செயற்பாட்டை வளர்த்தெடுப்பதில் ஜப்பானியர் ஊன்றிய கவனம் செலுத்தினர். குறித்த வடிவமைப்பைச் சிறப்புறச் செய்தலாலும் பொருத்தமான கட்டுப்பாடுச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தலாலும் தவறுகள் வராது தடுத்துக் கொள்ளலாம் என்பதை அவர் முன்மொழிந்தார். பூச்சிய நிலைக் குறைபாடு என்ற திட்டத்தை மேலும் முன்னெடுக் கும் முகமாக இமாய் என்பார் "கைசென்" *(Kaizen)* என்ற ஆக்கத்தை உருவாக்கினார். செயல் முறையிலே தொடர்ச்சியான முன்னேற் றத்தை இடைவிடாது மேற்கொள்ளலை அது வலியுறுத்துகின் றது. அது முடிவுறாதது. தொடர்ச்சியானது. உயர்நிலையான எழு பண்பை நோக்கிய காரணம் விளைவுகளை கண்டறிந்து செயற்படும் நோக்கைக் கொண்டது.

பண்பு உருவாக்கலை ஜப்பானியர் ஒவ்வொருவருக்குமுரிய பணியாகக் கொள்கின்றனர். சிறுசிறு வழுக்களைக் கூட உடனடி யாகக் கண்டறிந்து உடனே திருத்தியமைக்கும் கருத்தியல் அதனைத் தொடர்ந்து கல்வியியலிலே வளர்க்கப்படலாயிற்று. ஜப்பானியரின் உற்பத்தித்துறை வளர்ச்சிக்கு கைசென் திட்டம் பெரும் விசையை வழங்கியது.

மேற்கூறிய வளர்ச்சி நிலைகளைத் தொடர்ந்து பண்புக்காப்பீடு என்ற ஆக்கம் இடம்பெற்றது.

பயன்கொள் நடப்பியல் அடிப்படையில் ஜப்பானியரும் ஐக்கிய அமெரிக்கரும் ஒன்றிணைந்து பண்பு முகாமைத்துவத்துக்குரிய அடிப்படைகளை உருவாக்கினர். அவை:

(1) குறித்துரைப்புக்காக *(Specifications)* அன்றி உறுதேவை வேண்டலை அடிப்படையாகக் கொண்டு உற்பத்திகளை மேற்கொள்ளல்.

(2) பண்பு செலவை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படல் வேண்டும். உறுதேவைகளைக் *(Requirements)* கருத்திலே கொள்ளக்கூடாது.

(3) பண்பு என்பது நீடித்து நிலைப்பதற்கு வேண்டப்படுகின்றது. அது பொருண்மியக் காரணிகளை அடிப்படையாக கொண்ட தெரிவாக அமையாது.

(4) பூச்சியமான நிலையில் தவறுகளும் வழுக்களும் காணப்படும் நிலை திருப்திகரமானது. அதில் மாற்றங்கள் நிகழும்வேளை அதனைப் பணியாளர் சார்ந்த பிரச்சினையாக ஒருதலைப் பட்ச நோக்கில் அணுகமுடியாது.

(5) பிரச்சினைகள் முழு ஒழுங்கமைப்புக்குமுரியதாக எழுகையில் அது எங்கிருந்து தோற்றம் பெறுகின்றது என்பதை குறிப்பிட்டுக் கூறக்கூடிய நிலையிலே கண்டறிந்து தீர்த்துக் கொள்ளல் வேண்டும்.

பண்பைப் பராமரித்துக்கொள்ளல் கல்விச் செயற்பாட்டிலே சிறப்பான குறிக்கோளாகக் கொள்ளப்படுகின்றது. அதனை முன்னெடுப்பதற்குப் பின்வரும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

(1) கற்பித்தலிலே தொடர்ச்சியான முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருத்தல்.

(2) கற்பித்தற் சாதனங்களிலும் வளங்களிலும் தொடர்ச்சியான அபிவிருத்திகளை மேற்கொள்ளல்.

(3) ஆசிரியர் மாணவர் இடைவினைகளில் இடைவிடாத முன்னேற்றங்களை வருவித்துக் கொண்டிருத்தல்.

(4) மதிப்பீடு செய்தல் மீள்நோக்கல் முதலியவற்றிலும் இடை விடாத அபிவிருத்திகளை ஏற்படுத்திக் கொண்டிருத்தல்.

(5) தொடர்ச்சியான முன்னேற்றத்துக்குரிய முகாமைத்துவ ஒழுங்கமைப்பை வினைத்திறனுடன் பராமரித்தல்.

கல்வியியலிற் பண்பை மேற்கொள்ளல் ஒவ்வொருவருக்கு முரிய கடமையாகின்றது. ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை ஆசிரியர்களே (மட்டும்) பொறுப்பியத்துக்கு *(Accountablity)* உள்ளாக்கப்படுகின்றனர்.

கல்வியில் பண்பை முன்னெடுப்பதற்கு ஆசிரியர் மட்டும் பொறுப்பானவர் அல்லர். அது ஆசிரியரை மட்டும் அடிப்படை யாகக் கொண்ட நடவடிக்கை அன்று. அதேவேளை ஓரிரு செயற் பாடுகளை மட்டும் மேற்கொண்டுவிட்டு எழுபண்பு மேலோங்கலை மேற்கொள்ள லாம் என்ற தவறான அணுகுமுறையும் இலங்கையிலே காணப்படுகின்றது.

கடந்த நூறு ஆண்டுகளாக நம்பிக்கை உறுதிப்பட்டயம் *(Accredation)* வழங்கும் முறை பல்வேறு மட்டங்களிலே மேற்குலகக் கல்வியில் வளர்ந்து வந்துள்ளது. இந்த எண்ணக்கரு பற்றிய தெளிவான விளக்கம் கல்வியியலாளருக்கு வேண்டப்படுகின்றது. அதனை குறிப்பிடும் ஆங்கிலச் சொல் இலத்தீன் மொழியிலுள்ள *Credere* என்பதன் அடியாகப் பிறந்தது. அதன் பொருள் நம்பிக்கை மேற்கொள்ளல் என்பதாகும். குறிப்பிட்ட நிறுவனம் *உத்தியோக பூர்வமான தராதரங்களை அடைந்துள்ளமை என்பதை இனங்காணலும், அதில் நம்பிக்கை கொள்ளச் செய்தலும் அதனை உறுதிப்படுத்தலும் "நம்பிக்கை உறுதிப்பட்டயம்"* என்பதிலே உள்ளடக்கப்படுகின்றது.

நம்பிக்கை உறுதிப்பட்டயம் என்பது ஒரு கல்வி நிறுவனத்தின் தொடர்ச்சியான செயல்முறைகளைக் கருத்திற் கொள்கின்றது. குறிப் பிட்ட பரீட்சையையும் அதன் பெறுபேறுகளையும் அடிப்படை யாகக் கொண்டு நம்பிக்கை உறுதிப்பட்டயம் வழங்கல் தவறான செயற்பாடாகும்.

ஒரு கல்வி நிறுவனம் தனது கல்விச் செயற்பாட்டை முழுமை யாகவோ பகுதியாகவோ தவணைக்கு ஒரு தரமோ மதிப்பீடு செய்தலும் இலக்குள் அடையப்பட்டுள்ளனவா என்று பக்கச் சார்பின்றி மதிப்பீடு செய்தலும், உயர்ந்த நிறுவனங்களே ஈடு ஒப்புமை கொள்ளத்தக்க வகையிலே அதன் செயற்பாடுகள் அமைகின்றனவா என்பதும் நம்பிக்கை உறுதிப்பட்டயம் வழங்கலிலே நோக்கப்படுகின்றது.

கல்வி நிறுவனம் ஒன்றினது செயல் முறையிலே பின்வரும் கூறுகள் கவனத்திலே கொள்ளப்படுகின்றன.

(1) கல்வி இலக்குகள் பற்றிய தெளிவான வரைபு.

(2) அந்த இலக்குகளைக் குவியப்படுத்தி நெறிப்படுத்தப்பட்ட சுயகற்றலை மேற்கொள்ளல்.

(3) தெரிவு செய்யப்பட்ட இணைகுழுவினரால் *(Peers)* குறிப் பிட்ட நடைமுறைத் தளத்தில் மதிப்பீட்டை மேற்கொள்ளல்.

(4) குறிப்பிட்ட கல்வி நிறுவனம் நம்பிக்கை உறுதிப்பட்டயத்தை வழங்குவதற்குத் தகுதிபெற்றுள்ளதா என்ற பெறுமானத்தை சுயாதீனமான ஆணைக்குழுவினர் புறவயமாகக் கண்டறிவர்.

தராதரம் என்ற இலக்கினை அடைவதற்குரிய வினையாற்றலை மேம்படுத்துவதற்குரிய கருவியாக எட்டற் குறி *(Bench Mark)* அமைகின்றது எட்டற் குறியானது தரத்தை நிர்ணயிப்பதற்கு உதவுகின்றது. பயிற்சியை வழங்குபவர்களின் அடிப்படை இலக்காக எட்டற் குறி அமைகின்றது. தராதரங்கள் இரண்டு நிலைகளிலே நோக்கப்படு கின்றன. அவை:

(1) தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட தராதரங்கள் *(Competency Based Standards)*

(2) இலக்குகளும் தராதரங்களும்

தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டதராதரம் வெளிப் பாடுகள் அல்லது புலப்பாடுகளிலே கவனம் செலுத்துகின்றது. அது மரபு வழியான பாட அடிப்படைக் கலைத்திட்டத்திலிருந்து வேறு படுகின்றது. எவ்வெவ் துறைகளிலே தேர்ச்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று கூறுதல் அங்கே முக்கியத்துவம் பெறுகின்றது. தேர்ச்சிகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. மரபுவழியான பாடக்கலைத்திட்டம் அறிவின் ஒன்றிணைப்பை நோக்காது, அறி வைப் பாடங்கள் என்ற அடிப்படையிலே கூறுபடுத்தி விடுகின்றது.

இலக்குகள் அறிகை ஆட்சி, எழுகை ஆட்சி, உடலியக்க ஆட்சி என்ற நிலைகளிலே வரையறுக்கப்படுகின்றன. குறித்த இலக்குகளை அடைவதற்குரிய மட்டங்கள் தராதரத்தினால் நிர்ணயிக்கப்படு கின்றன. அங்கீகாரிப்புத் தேவைகளுக்கு அரசினாலும் தொழில் வழங்குனராலும், கல்வி நிலையங்களாலும் பயன்படுத்தப்படுவதற்கு தராதரம் பயன்படுகின்றது. தராதரத்தை உறுதிப்படுத்தி வழங்கப்படும் சான்றிதழ்களை அவை பயன்படுத்திக் கொள்கின்றன.

தராதரத்துக்கான அனைத்துலக ஒழுங்கமைப்பு (ISO) *1946* ஆம் ஆண்டிலே தோற்றம்பெற்றது. *1987* ஆம் ஆண்டிலே பண்புத் தொகுதி

முகாமைத் தராதரங்கள் ISO9000 வெளியிடப்பட்டன. அவை உற்பத்திக்குரிய வடிவமைப்புக்களுடன் தொடர்புடையதாக இருந்தாலும் கல்வித்துறைக்கும் பொருத்தமான வகையிலே எடுத் தாளப்படுகின்றன. 1995ஆம் ஆண்டிலே கல்விக்கும் பயிற்சிக்குமென (ISO 9001) வெளியிடப்பட்டது. இருபது தரக் காப்பீட்டுப் பிரிவுகளுள் பன்னிரண்டு கல்வியுடன் நேரடியாகத் தொடர்புடையன அவை வருமாறு:

1. முகாமைப் பொறுப்பு - வினப்பாடு
2. பண்புச் செயற்றொகுதி
3. ஒப்பந்த மீளாய்வு
4. செயற்கோலக்கட்டுப்பாடு
6. கொள்வனவு
9. பொருட்கொள்வனவாளர் (நிரம்பல் தரப்பட்ட உற்பத்தி)
13. அங்கீகரிப்புக்கு உட்பதாக உற்பத்திகளின் கட்டுப்பாடு
14. பிழைதிருத்தும் வினைப்பாடு
16. பண்பு ஆவணங்கள்
17. உள்ளக ஆவணங்கள் ஆய்வு
18. பயிற்சி

*ஏனைய பிரிவுகள்:*

5. ஆவணப்படுத்தல்
8. உற்பத்தி அடையாளப்படுத்தலும் இனங்காணப்படலும்
10. புலனாய்வும் பரீட்சித்தலும்
11. புலனாய்வு செய்தல், அளவீடு செய்தல் பரீட்சித்தல், சாதனங்கள்
12. புலனாய்வு பரீட்சித்தல் அந்தஸ்து
15. கையாளல், களஞ்சியப்படுத்தல், பொதியிடல், பாதுகாத்தல், விநியோகித்தல்.
19. சேவைவழங்கல்
20. புள்ளிவிபர நுண்முறைகள்

பண்பு மற்றும் தராதரம் ஆகிய இரு எண்ணக்கருக்களும் கல்வியலைப் பொறுத்தவரை முக்கியமானவை. அவை இரண்டும் சமூக நோக்கிலும் சமத்துவ நோக்கிலும் எட்டப்படல் வேண்டும்.

# முழுமைப் பண்பு முகாமைத்துவமும் கல்வியும்

முழுமை பண்பு முகாமைத்துவம் (TQM) என்பது தொடர்ச்சியான முன்னேற்றத்துக்குரிய கருத்தாழத்தைக் கொண்டது. கல்வி நுகர்ச்சியாளரின் தேவைகள், விருப்பங்கள், எதிர்ப்பார்ப்புகள் முதலியவற்றை வினைத்திறனுடன் அடைந்துகொள்வதற்குரிய நடைமுறைக் கருவிகளின் தொகுதியை அது வழங்குகின்றது என எட்வேட் சால்லிஸ் ஒரு சமயம் குறிப்பிட்டார். சரியானவற்றை முதல் முறை யாகச் செய்தலும் எப்பொழுதும் இடைவிடாமற் செய்து கொண்டி ருத்தலும் அதன் உன்னத பண்புகளாகும். கல்வி நிறுவனத்தின் ஒவ்வொரு அலகையும் ஒவ்வொரு நபரையும் முழுமையாக உள் ளடக்கி மேற்கொள்ளப்படும் செயல் முறையாக முழுமைப் பண்பு முகாமைத்துவம் அல்லது கூட்டுமொத்த முகாமைத்துவம் செயற்படுகின்றது.

இந்தச் செயற்பாட்டில் முகாமைத்துவம் என்பது நிறுவனத்திலுள்ள ஒவ்வொருவரையும் உள்ளடக்குகின்றது. ஒவ்வொருவரதும் அந்தஸ்திலும், நிலையிலும் வகிபாகத்திலும் வேறுபாடுகள் காணப் பட்டாலும் அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது பொறுப்புக்கு முகாமை யாளராகின்றனர். அதாவது மேலாண்மை செலுத்த வேண்டியுள்ளனர்.

முழுமைப் பண்பு முகாமைத்துவத்தின் நோக்கம் அதன் வெளியீடுகளில் உன்னதங்களைத் *(Excellence)* தவிர ஏனையவற்றை நிராகரித்தலாகும். உன்னதங்களை எட்டுவதிலே ஆளணியினரின் தொடர்ச்சியான செயல்முறைகளை அந்த அணுகுமுறை குவியப் படுத்துகின்றது. தொடர்ச்சியான புத்தாக்கங்களையும் முன்னேற்றங்க ளையும் மேற்கொள்வோராய் ஆளணியினர் செயற்படல் வேண்டும். தொடர்ச்சியான முன்னேற்றங்களை மேற்கொள்ளலுக்கு ஜப்பானியர் ***"கைசென்"*** *(Kaizen)* என்று பெயரிட்டுள்ளனர்.

அதிக பட்சமான நடைமுறைச் சாத்தியத்தை முழுமைப் பண்பு முகாமைத்துவம் வலியுறுத்துகின்றது. முன்னேற்றம் - வெற்றி - நம்பிக்கை முதலாம் தொடர் பரிமாணங்கள் அங்கே இடம்பெறு கின்றன. பெரும் செயற்பணிகளைப் பொருத்தமான சிறுகூறுகளாக்கி வினைத்திறனுடன் மேற்கொள்ளல் இடம்பெறுகின்றது. அது செயற் பண்பாட்டில் நேர்முக மாற்றத்தை வேண்டி நிற்கின்றது. செயற் பாட்டு உளப்பாங்கில் நேர்மாற்றம் வேண்டப்படுகின்றது. செய்யும் முறைகளிலும் நேர்மாற்றம் வேண்டப்படுகின்றது.

அதனை நடைமுறைப்படுத்துவதற்கு இசைவும் அனுகூலமு முள்ள வேலைச் சூழல் முதற்கண் வேண்டப்படுகின்றது. அதனைப் போன்று வினைத்திறனுடன் தொழிற்படுவோர் உருவாக்கும் அடைவுகளுக்கும் வெற்றிகளுக்கும் பாராட்டு மற்றும் அங்கீகாரம் வழங்கப்படல் வேண்டும்.

மரபுவழியான முகாமைத்துவத்தில் உயர்நிலை முகாமையா ளர்களே செயலடுக்கமைவில் மேலமைந்த நிலையிலிருப்பர். ஆனால் முழுமைப் பண்புக்கல்வி முகாமைத்துவத்தில் பெரும் எண்ணிக் கையான மாணவர் உச்ச நிலையிலும், சிறிய எண்ணிக்கையினரான தலைவர்கள் அடிநிலையிலும் இருப்பர். அது ஆட்சி நிரலிலே பெயர்ச்சியை *(Paradigm Shift)* ஏற்படுத்தும். அங்கு விளைஞருக்கு *(Clients)* முக்கியம் தரப்பட்டாலும் தலைமை வகிபாகத்தின் முக்கியத்துவம் என்றும் நிராகரிக்கப்படுதல் இல்லை.

முழுமை நிலை முகாமைத்துவத்தைப் பொறுத்தவரை உற்பத்தி நிறுவனங்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்குமிடையே வேறுபாடு உண்டு என்பதை நினைவிற்கொள்ளல் வேண்டும். கல்வியைப் பொறுத்தவரை விளைஞராகிய மாணவரே தமது பண்பு உயர்ச்சி யைப் பொறுத்தவரை பங்கேற்க வேண்டியவர்களாகவுள்ளனர். அதாவது தமக்குரிய கற்றல் தரத்தை மேம்படுத்த அவர்களும் முழு மையாகப் பங்குகொள்வோராய் மாற வேண்டியுள்ளது. அது மட்டு மல்ல அவர்களோடு இணைந்து கற்கும் கற்போரும் கற்றல் பண்பு மேம்பாட்டிலே பங்கு கொள்ள வேண்டியுள்ளது.

இச்செயற்பாட்டிலே "உள்ளக அங்காடிப்படுத்தல்" *(Interal Marketing)* என்பது அதிக முக்கியத்துவம் பெறுகின்றது. கல்வி நிலையத்தின் உள்ளகத்தே நிகழும் குறிப்பேற்றங்களை *(Comments)*

செவிமடுத்தலும் தகவல்களை அனைவருக்கும் பரிமாறிக் கொள்ள லும், நேர்முகமான கருத்தாடல்களுக்கு இடமளித்தலும் உள்ளடக்கப்படுகின்றன. உள்ளகத்தே நடப்பியல் நிலையிலே யாது நிகழ்கின்றது என்பதைக் கண்டறிவதற்குரிய பொருத்தமான துளாவற் கருவியாக "உள்ளக அங்காடிப்படுத்தல்" அமைகின்றது. பொருத்த மான பின்னூட்டல் களைப் பெற்றுக்கொள்வதற்கும் அது துணை செய்கின்றது.

கல்விசார்ந்த முழுமைப் பண்பு முகாமைத்துவத்தில் வாண்மை சார்ந்த உழைப்பு வலு முக்கியமாகக் கருதப்படுகின்றது. மரபுவழி யான அணுகுமுறையில் வாண்மையினரே பண்புக்கும் தராதரத்துக் கும் பொறுப்பானவர்களாகக் கருதப்பட்டனர். முழுமைப் பண்பு முகாமைத்துவம் வாண்மையினரது முக்கியத்துவத்தையும் மாண வரது முக்கியத்துவத்தையும் தொடர்ச்சியான முன்னேற்றச் செயற் பாடுகளுடன் தொடர்புபடுத்தி வலியுறுத்துகின்றது. வாண்மையினர் தொடர்ந்து கற்போராயும் மாணவருடன் இணைந்து கற்போராயும் இருத்தல் வேண்டும்.

முழுமைப் பண்பு முகாமைத்துவம் கற்றலின் பன்முகப்பட்ட கோலங்களை வலியுறுத்துகின்றது. அந்தக் கோலங்கள் பற்றி வாடிக் கையாளராகிய மாணவர் கட்டாயம் தெரிந்திருத்தல் வலியுறுத்தப்படு கின்றது. "அனைவராலும் அடைய முடியும்" *(Al Shall Succeed)* என்பதில் ஆசிரியரும் மாணவரும் இணைந்து தொழிற்பட வேண்டி யுள்ளது. கற்றலை முடுக்கிவிட குழுக்கள் அமைக்கப்படலாம். அதில் வாண்மை நிலையிலுள்ள பெற்றோருக்கும் இடமளிக்கப்படலாம். தொடர்ச்சியான ***"பின்னூட்டல் வளையங்கள்"*** எப்போதும் வேண்டப்படுகின்றன. கணிப்பீடுகளும், பின்னூட்டல்களும் தொடர்ச்சியான முன்னேற்றத்துடன் இடம்பெறல் வேண்டும்.

பண்பு பற்றி விளக்கவந்த ஆய்வாளர்களுள் எட்வேட் டெமிங் சிறப்பான இடத்தைப் பெறுகின்றார். பண்பு வீழ்ச்சி ஏற்படுமிடத்து அடிப்படையிலிருந்து முழுக் கட்டமைப்பும் மாற்றத்துக்கு உள்ளாக் கப்படல் வேண்டும் என்பது அவரது முன்மொழிவு. குறுங்கால இலக்குடன் உடனடித் தீயை அணைக்கும் செயற்பாடுகள் *(Fire Fighting Approach)* அதிக செலவையும் வீண்விரயத்தையும் ஏற்படுத்தும்.

உயர் முகாமை நிலைகளில் உள்ளோர் புதுமைகளுக்கும், மாற்றுச் சிந்தனைகளுக்கும் இடம்கொடுக்காத நிலையும் பண்பு வீழ்ச்சியைத்

தொடர்ச்சியாக ஏற்படுத்தும் "பண்பு பற்றிய பண்பாடு" வளர்க்கப்படாமையும் இடர்களை உண்டாக்கும். கல்வியிற் பண்பு நோக்கிய பண்பாட்டை உருவாக்குதல் ஒவ்வொருவரதும் கடமை யாகின்றது.

தனித்து ஓர் ஆசிரியரின் ஆற்றுகையை மதிப்பீடு செய்வதால் மட்டும் முழுமைப் பண்பு முகாமைத்துவத்தை ஏற்படுத்திவிட முடியாது. அது குறுங்காலத் தீர்வாகவும் சில வேளைகளில் அவரது ஆற்றுகையை மேலும் வீழ்ச்சியடையச் செய்வதாகவும் அமையலாம். எந்தவொரு ஆசிரியர் உருவாக்கும் விளைவுகளையும் திட்டவட்ட மான எண் கணிப்பீட்டினில் கொண்டுவர முடியாது. அவ்வாறான செயற்பாடுகள் எதிர்விளைவுகளையே ஏற்படுத்தும். அது ஆசிரிய ரைத் தவறான வழிகளுக்கும் இட்டுச்செல்லும்.

ஆசிரியரை நோக்கி முன்வைக்கப்படும் குறிப்பிட்ட கணிப்பீட்டு முறைக்கு மட்டும் முகம்கொடுக்கும் நிலைக்கு அவர்கள் தள்ளப்படு வார்களேயன்றி ஒட்டுமொத்தமான பண்பு உயர்ச்சிக்கு துணை நிற்கமாட்டாது.

பரீட்சை முடிவுகளை வைத்து பண்பைத் தீர்மானித்தாலும் தவறுகளுக்கு இட்டுச்செல்கின்றது. பிரித்தானியக் கல்விமுறை உருவாக்கிய தவறான வழிப்படுத்தல் என்றும் இது குறிப்பிடப்படு கின்றது. பாடசாலையின் வாடிக்கையாளராகிய *மாணவரிடத்து எத்தகைய மகிழ்ச்சியையும், உளநிறைவையும் கற்றல் நம்பிக் கையையும் ஏற்படுத்தியுள்ளது என்பதைக் கருத்திற் கொண்டே முழுமைப் பண்பு முகாமைத்துவம் பற்றி அறிந்துகொள்ள முடியும்.*

கல்வியின் பண்பு வீழ்ச்சிக்குரிய பொதுவான காரணிகளாகப் பின்வருவன சுட்டிக் காட்டப்படுகின்றன.

(1) வறிதான கலைத்திட்ட வடிவமைப்பு

(2) வறிதான வேலைச் சூழல்

(3) பொருத்தமற்ற முகாமைத்துவ மற்றும் நிர்வாக அணுகுமுறைகள்.

(4) ஆக்கவுந்தலுடன் கற்றல் கற்பித்தலில் ஈடுபட முடியாத உள்ளக மற்றும் புறநெருக்குவாரங்கள்.

(5) வறிதாயிருக்கும் வளங்கள்.

(6) ஆசிரிய வாண்மை விருத்திச் செயற்பாடுகளின் போதாமை யும், வினைத்திறன் குன்றிய செயற்பாடுகளும்.

(7) புதிய கலைத்திட்ட நடவடிக்கைகளுக்கு முகங்கொடுக்க முடியாதிருத்தல்.

(8) தவறான கணிப்பீட்டு முறைகளும் பின்னூட்டல்களும்.

(9) தவறான இறுகிய கல்வி விழுமியங்களுடன் கட்டுப்பட்டி ருத்தல்.

(10) தவறான அரசியல் மற்றும் புறத்தலையீடுகள்.

முழுநிலைப் பண்புவீழ்ச்சிக்குரிய குறித்துரைக்கத்தக்க சிறப் பான காரணிகளும் உள்ளன. அவை வருமாறு:

(1) தனித்த ஓர் அதிகாரியின் தவறான அணுகுமுறைகள்.

(2) தனித்த ஓர் ஆசிரியரின் தவறான அணுகுமுறைகளும் புலமை வலுவின் போதாமையும்.

(3) குறிப்பிட்ட துறைகளில் ஊக்கலின் போதாமை.

(4) குறிப்பிட்ட ஓர் அலகு செயற்படாதிருத்தல் அல்லது செயற் பாட்டின் போதாமை.

(5) தொடர்பாடல் இடைவெளிகள் தோன்றுதல்.

முழுமைப் பண்பு முகாமைத்துவம் பற்றி ஆராய்ந்த ஜோசப் யுறன் 85/15 என்ற செயல் விதியை முன்வைத்தார். ஒரு நிறுவனம் அல்லது பாடசாலையின் பண்பு பற்றிய பிரச்சினை எழுவதற்கு அதன் செயல் வறிதான முறையிலே கட்டமைப்புச் செய்யப்பட்டுள் ளமையே காரணம் என்று குறிப்பிட்டார். எண்பத்தைந்து வீதமான பிரச்சினைகள் முகாமை சார்ந்தே மேலெழுகின்றன. ஒரு நிறுவனத் தின் 85% பிரச்சினைகள் மீது முகாமை செய்வோர் கட்டுப்பாடு களைச் செலுத்த வல்லவர்கள்.

மேற்கூறியவற்றை அடியொற்றி எழுதிறன் பண்பு முகாமைத்து வம் *(Strategic Quality Management - SQM)* என்ற கருத்தை முன்வைத்தார். அது மூன்று பகுதிச் செயல் முறையைக் கொண்டது. அப்பகுதிகள் ஒவ்வொன்றும் பண்பு முன்னேற்றத்துக்குரிய தனித்து

வமான பங்களிப்புக்கு ஈடுகொடுக்க முடியும். அந்த மூன்று பகுதிகளையும் கையாள்வோர் வருமாறு.

(1) முதுநிலை முகாமையாளர் - இவர்களுக்கே நிறுவனம் பற்றிய எழுதிறன் ஆற்றல்கள் காணப்படும்.

(2) நடுநிலை முகாமையாளர் - இவர்கள் பண்பு தொடர்பான செயற்படு நோக்கைக் கொண்டிருப்பர்.

(3) தொழிற்படும் ஊழிய வலுவினர் - இவர்களே தரக்கட்டுப் பாட்டுக்கு உரியவர்கள்.

பாடசாலை அமைப்பில் ஆசிரியர்களிடமே இப்பொறுப்பு உள்ளது. இவ்வாறான யுறனுடைய அணுகுமுறைகள் செயற்றிட்டம் ஒவ்வொன்றின் வழியாகவும், கூட்டுநிலையான பிரச்சினை விடுவித்தல் வழியாகவும் பண்புநிலையான முன்னேற்றத்தை நோக்குகின்றன. செயற்றிட்டம் - அதனைத் தொடர்ந்த அடுத்த செயற்றிட்டம் - என்பவற்றின் வழியாகவே பண்பு முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பது அவரது கருத்து அதனைத் தவிர வேறு வழியில்லை என்பதும் அவரது துணிபு.

பண்பு முன்னேற்றம் தொடர்பாக "பூச்சியக் குறைபாடுகள்" *(Zero Defects)* என்ற எண்ணக்கரு முன்வைக்கப்பட்டுள்ளது. அது திறனாய்வுக்குரிய ஓர் எண்ணக்கருவாகும். வழுக்கள், தோல்விகள், விரயங்கள், தாமதம் முதலியவை பண்பற்றவை என்று குறிப்பிடுகின்றது.

பண்பு என்பது சுயாதீனமானதும் கட்டற்றதும் என்ற கருத் தாகும். பண்போடு இணைந்து செல்ல முடியாதவிடத்து திரும்பச் செய்தல், மீள்ப்பொருந்தும்படி செய்தல், மீளப் பரீட்சித்தல், புலனாய்வு செய்தல், மேற்பார்வை செய்தல் முதலியவை வேண்டப்படுகின்றன. அவை பண்பு இழப்புக்குக் கொடுக்கப்படும் விலைகளாகின்றன.

"பூச்சியக் குறைபாடு" என்பது தோல்விகளை நீக்குதலும், வெற்றியை நோக்கி நகர்தலுமாகும். சரியான முறையிலே முதலில் செய்தல் எப்பொழுதும் சரியானவற்றைச் செய்தல் முதலியவற்றை அவர் குறிப்பிட்டுள்ளார். புள்ளிவிபர அடிப்படையிலே பண்பை நிர்ணயம் செய்தலையும் குரொஸ்பி நிராகரிக்கின்றார். பண்பு என்பது உறுநிறைவு *(Perfection)* என்ற ஒரே தராதரத்தை அல்லது அளவீட்டை மட்டும்

கொண்டது என்பது அவரது துணிபு. வழுவற்ற செயற்பாடு கள் வாயிலாக வருமுன்னர் காத்தலை அவர் வலியுறுத்தினார்.

பரீட்சைகளில் அதிகமானோர் தோல்வி அடைதலே உயர்ந்த பண்பு என்றும் தரம் என்றும் கருதும் தவறான உளப்பாங்கைக் காலனித்துவக் கல்வி முறை உருவாக்கியுள்ளது. அதனை விமர்சிப் பதற்குப் பண்பு பற்றிய குரொஸ்பியின் கருத்துக்கள் பயன்படுகின்றன.

பண்பைப் பராமரிப்பதற்குரிய பதினான்கு படிநிலைகளை அவர் குறிப்பிடுகின்றார். அவை:

(1) முகாமைத்துவ அர்ப்பணிப்பு

(2) பண்பை முன்னேற்றம் பெறச் செய்யும் செயற்குழு

(3) பண்பைக் கணிப்பிடல் (பொருத்தமற்றவற்றைத் தவிர்த்தல்)

(4) பண்புக்குரிய செலவு

(5) பண்பு பற்றிய உற்றுணர்வு

(6) பிழை நீக்கும் வினைப்பாடு

(7) பூச்சிக் குறைப்பாட்டுத் திட்டமிடல்

(8) மேற்பார்வையாளருக்குரிய பயிற்சி

(9) பூச்சிக் குறைபாட்டு நாள்

(10) குறிக்கோள் உருவாக்கல்

(11) வழூக்காரணிகள் நீக்கல்

(12) அங்கீகாரம் தருதல்

(13) பண்புப் பேரவை

(14) மீளமீளச் செய்யும் முடிவற்ற முன்னெடுப்பு.

மரபுவழியான பெறுமானங்களுடன் தொழிற்படும் நிறுவனங் கள் பண்பை எட்டுவதற்குப் பல்வேறு தடைகளைக் கொண்டுள் ளன. பணியாட்சிப் பண்பு, செயற்பாடுகள் துண்டங்களாகவும் தனித்த பிரிவுகளாகவும் ஆக்கப்பட்டிருத்தல், பொது இலக்குகள் அற்ற சுயநலப் போக்கு, மேலுள்ளோரின் வலுவான இடையூறு களும் தலையீடுகளும், நெகிழ்ச்சியற்ற இறுகிய அறிவிப்புக்கள், மாணவர்களைச்

சொத்துக்களாகக் கருதாது பொறுப்புக்களாகக் கருதுதல், ஆசிரியர்களைத் தாழ்வாக்கி அடிபணிய வைக்கும் நிலை முதலியவை தடைகளாகின்றன. அந்நிலையில் கல்வி நிறுவனங்கள் 180 பாகைத் திருப்பத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளன.

முழுமைப் பண்பைச் செயற்படுத்தும் நிறுவனங்களிலே பின்வரும் சிறப்பியல்புகள் உள்ளடங்கியிருக்கும்.

(1) வாடிக்கையாளராகிய மாணவரைக் குவியப்படுத்தியிருக்கும்.

(2) பிரச்சினைகள் வராது தடுத்தலிலே கவனம் மேலோங்கியிருக்கும்.

(3) மனித முதலீடுகளை வினைத்திறனுடன் உள்ளடக்கும்.

(4) பண்புக்குரிய உறுதிறன்களைக் கொண்டிருக்கும்.

(5) குற்றம் சுமத்துவோரையும் கருத்துச் சொல்வோரையும் கற்றுக் கொள்வதற்கு வழிசமைப்போராய்க் கொள்ளும் பண்பு வலுப் பெற்றிருக்கும்.

(6) நிறுவனத்தின் எல்லாப் பரிமாணங்களிலும் திட்டவட்டமான பண்புக் கூறுகள் வரையறுக்கப்பட்டிருக்கும்.

(7) பண்புக் கொள்கையும் திட்டமும் நிலை பெற்றிருக்கும்.

(8) முதுநிலை முகாமையாளர் எடுத்துக்காட்டு மாதிரியினராகப் பண்பை முன்னெடுத்துச் செல்வர்.

(9) முன்னேற்ற வழிமுறை அனைவரையும் தழுவியிருக்கும்.

(10) பண்பை வளம் செய்பவர் முன்னேற்றத்தை முன்னெடுத்துச் செல்வார்.

(11) ஒவ்வொருவரிடத்துமுள்ள பண்பு மேம்பாட்டு ஆக்கமலர்ச் சிக்கு இடமளிக்கப்படும்/ உற்சாகமளிக்கப்படும்.

(12) வகிபாகமும் பொறுப்பியமும் நன்கு வரையறுக்கப்பட்டி ருக்கும்.

(13) தெளிவான மதிப்பீட்டு உறுதிறன்களைக் கொண்டிருக்கும்.

(14) வாடிக்கையாளருக்குரிய திருப்தி பண்பின் அடிப்படையாக எட்டப்படும் என்பதை நம்புதல்.

(15) நீண்டகாலத் திட்டங்களைக் கொண்டிருக்கும்.

(16) பண்பாட்டின் ஒரு கூறாகப் பண்பை உள்ளடக்கி நிற்கும்.

(17) பண்பு நிரையில் ஒவ்வொன்றும் தமக்கேயுரிய தனித்துவமான உறுதிறன்களைப் பயன்படுத்தி முன்னேற்றத்தை இட்டுச் செல்லல் நிலைபெற்றிருக்கும்.

(18) தனித்துவமான செயற்பணி இலக்குகள் இடம்பெற்றிருக்கும்.

(19) சக உத்தியோகத்தர்களை வாடிக்கையாளராகக் கருதிச் செயற்படும்.

முழுமைப் பண்பை உருவாக்குவதற்குரிய நிறுவன ஒழுங்கமைப்பின் இயல்பிலே ஒவ்வோர் அலகும் முழுநிலை அளவில் விளைதிறனுடனும் வினைத்திறனுடனும் தொழிற்படுவதற்குரிய ஏற்பாடுகள் அவசியம். தெளிவாக வரையறை செய்யப்பட்ட தர நிபந்தனைகள் உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும். நிறுவன ஒழுங்கமைப்பிலே நிலைக்குத்து மற்றும் குறுக்குமுக இணக்கப்பாடும் அவற்றுக்கிடையேயுள்ள எல்லைகள் முறிவின்றி நெகிழ்ச்சியாக இணையும் இயல்புகளைக் கொண்டிருத்தலும் பண்பைச் செழுமைப் படுத்துதலுக்குத் துணை நிற்கும். அனைத்து அலகுகளும் ஒரு தனித்த கட்டளை அமைப்புக்கு உள்ளாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

முழுமைப் பண்பு முகாமைத்துவத்தில் ஆசிரியர்களுக்கு தொடர்ச்சியான வலுவூட்டற் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளன. வலுவூட்டலைப் பின்வரும் வழிகளில் மேற் கொள்ளலாம்.

(1) அனைத்துப் பிரச்சினை விடுவிக்கும் செயற்பாடுகளிலும் ஆசிரியர்களை ஈடுபடுத்துதல், விஞ்ஞான மற்றும் புள்ளியியல் அடிப்படைகளைப் பயன்படுத்திச் செயற்பாட்டை வளம் பெறச் செய்தல் அங்கு சிறப்பிடம் பெறல் வேண்டும்.

(2) எவ்வாறு செயற்றிட்டங்கள் கையாளப்படல் வேண்டுமென்று அவர்களைக் கேட்க வேண்டுமேயன்றி எவ்வாறு அவை நிகழும் என்று கேட்கலாகாது.

(3) அவர்களது அர்ப்பணிப்பைப் பெறும் பொருட்டு முகாமைத்துவத் தகவல்களை இயன்றளவு பகிர்ந்துகொள்ளல் வேண்டும்.

(4) பண்பை வளர்த்தெடுப்பதற்குத் தடையாக உள்ளவற்றை அவர்களிடம் கேட்டறிதலே சிறப்புடையது.

(5) மேலிருந்து கீழ்நோக்கிய அணுகுமுறைகளைக் கைவிட்டுப் பொருண்மை கொண்ட முன்னேற்றத்தை மேற்கொள்ளல் வேண்டும்.

(6) வாண்மை நிலை தழுவிய முன்னேற்றங்களைத் தொடர்ச்சி யாக முன்னெடுத்தலைக் கடப்பாடாகக் கொள்ளல் வேண்டும்.

(7) தொடர்ச்சியான ஒழுங்கமைந்த தொடர்பாடலை மேற்கொள் ளலே சிறப்புடையது.

(8) சகிப்புத் தன்மையுடன் முரண்பாடுகளையும் பிரச்சினைகளை யும் விளங்கிக்கொண்டு செயற்பட வேண்டும். பிரச்சினை களைச் சுவைப்பட நோக்குதல் முக்கியமானது.

(9) அனைத்துக்கும் விடைதராவிடிலும் ஆதரவுதரல் வேண்டும்.

(10) குழுவைக்கட்டியெழுப்பல், தலைமைத்துவம், செயல்நிலை முகாமைத்துவம், தொடர்பாடல், வாடிக்கையாளர் சேவை, உளவியல், தலைமைத்துவம், முதலாம் துறைகளிலே வாண்மைப் பயிற்சிகளை முன்னெடுத்தலே சிறப்புடையது.

(11) நல்லாசிரியர் உருவாக்கலுக்குரிய மாதிரிகையாக அதிபர், மற்றும் கல்வி முகாமையாளர் செயற்படல் வேண்டும்.

(12) அதிகாரத்தைச் செலுத்தாது வளம் செய்வோராய் தொழிற் படலே ஏற்புடையது.

(13) தன்னிச்சையாகச் செயற்படவும் அதேவேளை பொறுப்புக் களை ஏற்கவும் சந்தர்ப்பங்களை வழங்குதலே வரவேற்புக் குரியது.

முழுமைப் பண்பு முகாமைத்துவத்தில் அதிபர்களது செயற் பாடுகள் பின்வருமாறு அமைதல் வேண்டும்.

(1) பாடசாலையின் முழுமைப் பண்பு பற்றிய விரிந்தநோக்கு இருத்தல்.

(2) முழுமைப் பண்பை முன்னெடுப்பதற்குரிய அர்ப்பணிப்பு இருத்தல்.

(3) முழுமைப் பண்பு பற்றித் தொடர்பாடல் மேற்கொள்ளல்.

(4) மாணவரினதும் சமூகத்தினதும் தேவைகளுக்கு உறுதிதருதல்.

(5) ஆசிரிய மேம்பாட்டை முன்னெடுத்தல்.

(6) தவறுகள் நிகழும் பொழுது ஆசிரியர்கள் மீது பொறுப்பைச் சுமத்தாது இருத்தல்.

(7) பாடசாலையுள் புத்தாக்கங்களை முன்னெடுத்தல்.

(8) பாடசாலை ஒழுங்கமைப்பை வினைத்திறனுடனும், பொறுப் புடனும் இயக்குதலும், உயர்நிலையான அர்ப்பணிப்பை வழங்குதலும்.

முழுமைப் பண்பு முகாமைத்துவத்தை முன்னெடுப்பதற்குரிய செயற்கருவிகளும் நுட்பவியலும் பற்றிய அறிவு கல்வி முகாமையாள ருக்கும் ஆசிரியருக்கும் முக்கியமானவை. கருவிகளுள் முதற்கண் மூளை விசைப்படுத்தல் *(Brainstor ming)* முக்கியத்துவம் பெறுகின் றது. ஒவ்வொருவரும் வெளியிடும் கருத்துக்களை எழுதுதல். அக்கருத்துக்களை விவாதமின்றி அங்கீகரித்தல், முன்னைய கருத் துக்களை அடியொற்றி எண்ணங்களை வளர்த்தல் முதலியவற்றில் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

அடுத்துவரும் செயற்கருவிகளுள் இணையுறவு வலைப்பின்னல் *(Affinity Network)* முக்கியத்துவம் பெறுகின்றது. பெருங்குழுவினரிட மிருந்து பொது கருத்துக்களை ஒற்றுமைப்பாட்டின் அடிப்படையிலே பகுத்து அறிவதற்கு இந்த நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. செயற் பாட்டில் தருக்கத்தைக் காட்டிலும் படைப்பாக்கற் பண்பே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

கருவிகளிலும் நுட்பங்களிலும் அடுத்து அமைவது ***"மீன் எலும்பு வடிவம்"*** அல்லது ***"இசிகவா விளக்கப்படம்"*** *(Fishbone or is Hikawadiagram)* ஆகும். குறிப்பிட்ட பிரச்சினைகளின் கார ணம் விளைவுகளை மேலும் கீழுமாக பண்பு மேலோங்கல் நோக் கில் வடிவமைக்கும் பொழுது அது மீன் எலும்புவடிவில் அமையும். இதனை இசிகவா என்பவர் அறிமுகம் செய்தார்.

இத்துறையில் விசைக்களப் பகுப்பாய்வு செய்தல் *(Force Fieldanalysis)* என்ற நுட்பமும் பயன்படுத்தப்படுகின்றது. மாற் றத்தை வேண்டி நிற்கும் சந்தர்ப்பத்தை பகுப்பாய்வு செய்வதற்கு இந்த முறை பயன்படுத்தப்படுகின்றது. மாற்றத்தை வேண்டும் விசை - மற்றும் மறுதலிப்பு விசை ஆகியவற்றை அறிந்து மாற்ற விசையை எவ்வாறு

வலுப்படுத்துதல் என்பதும் மறுதலிப்பு விசையை எவ்வாறு தணித்தல் என்பதும் ஆராயப்படும்.

செயல்முறை அட்டவணைப்படுத்தல் *(Process Charting)* என்ற நுண் உபாயமும் இத்துறையில் இடம்பெற்றுள்ளது. அத்துடன் பாய்ச்சல் அட்டவணைகளும் *(Flowe Charts)* பயன்படுத்தப்படு கின்றன.

ஜப்பானியர் பண்புத் தொழிற்பாடு விருத்தி *(Quality Function Development)* என்ற செயற்பாட்டைப் பரவலாகப் பயன்படுத்து கின்றனர். செயல்முறையின் ஒவ்வொரு கட்டத்திலும் வாடிக்கையா ளராகிய மாணவரின் தேவைகளை முன்னுரிமைப்படுத்தல் முக்கியத்துவம் பெறுகின்றது. கலைத்திட்டமும் அவர்களது தேவை களைக் கண்டறிந்த பின்னர் அதற்கேற்ப வடிவமைக்கப்படுகின்றது.

முழுமைப் பண்பு முகாமைத்துவத்தைச் செயற்படுத்தப் பண்புச் சட்டங்கள் *(Quality Frame Works)* வேண்டப்படுகின்றன. அந்தச் சட்டங்கள் பின்வருவனவற்றை அடியொற்றி அமைக்கப்படுகின்றன.

(1) என்ன செய்கின்றீர்கள் என்பதைக் கண்டறிதல்.

(2) கையாளும் முறைகளையும் வழிக்கோலங்களையும் வினா வுக்கு உள்ளாக்குதல்.

(3) எவற்றைச் செய்யவிருக்கின்றீர்கள் என்பவற்றை ஆவணப் படுத்துதல்.

(4) செய்கின்றீர்களா என்பவற்றை நோக்கல்.

(5) அவற்றுக்கு ஆதாரங்களைத் தருதல்.

சமகாலக் கல்வியை வளம்படுத்துவதற்கும் விளைதிறன், வினை திறன் ஆகியவற்றைப் பெருக்குவதற்கும் நம்பிக்கையூட்டுவதற்கும் முழுமைப் பண்பு முகாமைத்துவம் கைகொடுக்கும்.

***

# அறிவுக் காலனித்துவமும் மாற்று வாசிப்பும்

வாசிப்புச் செயற்பாடு சமூக இயல்போடும் கல்விக் கவிநிலை யோடும் இணைந்த இயக்கமாகின்றது. "சிதைந்து செல்லும் குடும் பங்களை நூல்களால் ஒன்றிணைப்போம்" *(United Through Books)* என்ற தலைப்பிட்ட சுவரொட்டிகள் ஒரு சமயம் பிரித்தானியப் புத்தகவாரமொன்றிலே காட்சிப்படுத்தப்பட்டன. சமூகத்தின் அடிப் படை அலகாகவும் அடியாதாரமாகவும், கல்வியின் ஆரம்பநிலைய மாகவும் இருக்கும் குடும்பத்தை வாசித்தலாலும், நூல்களாலும் சிதைவுறாது தடுக்கலாம் என்ற முன்மொழிவு சமூகம் - கல்வி - வாசிப்பு ஆகியவற்றுக்கிடையேயுள்ள நேர்த் தொடர்புகளை மீள வலியுறுத்துகின்றது.

பிரடிக் ஜேம்சன் அவர்கள் (1999) அண்மை வரலாற்றுப் போக் கில் நிகழ்ந்த மூன்று பெரும் அடிக்கட்டுமானத் தொடர்ச்சிகளை விளக்கியுள்ளார். அவை:

*(1) அங்காடி முதலாளியம்* - அதாவது, கைத்தொழிற் புரட்சியைத் தொடர்ந்து நிகழ்ந்த முதலாளிய வளர்ச்சியும், முதலாளியம் தம்மை வலுப்படுத்திக் கொள்வதற்கென உருவாக்கிக் கொண்ட உளக்கவர்ச்சிக் *(Romantic)* கோட்பாடுகளும் அழகியலும் அவற்றைத் தழுவி எழுந்த நூலாக்கங்களும் வாசிப்பும். (19ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலம் வரை)

***(2) தனியுரிமை முதலாளியம்*** - தொழில்நுட்ப வளர்ச்சியோடும், வலு நுகர்ச்சியின் அதிகரிப்போடும் நுகர்ச்சிப் பொருட்களின் ஆக்கத் தோடும் அது மேலும் வலிமைபெறத் தொடங்கிற்று. நுண்மதி சார்ந்த எழுத்தாக்கச் செயற்பாடாகவும், கலையாக்க வழிகாட்டலாகவும்

நவீனத்துவம் உருவாக்கப்பட்டது. அவற்றோடு இணைந்த வகையிலே கல்வி முறைமையும், நூலாக்கங்களும் வாசிப்புக் கோலங்களும் வளர்ச்சியுறத் தொடங்கின. (20ம் நூற் றாண்டின் நடுப்பகுதிவரை)

*(3) நுகர்ச்சிவாத முதலாளியம்* - தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி, சேவைக் கைத்தொழில்களின் வளர்ச்சி, பல்தேசிய நிறுவனங்களின் ஆக்கம், நவீன சந்தைகளினதும், புதிய நுகர்ச்சிக் கோலங்களினதும் தொடர்ச்சியுடன் இணைந்து எழுச்சி கொண்டுள்ளன. அவற்றோடிணைந்த உலகமயமாக்கல் மற்றும், பின்னவீனத்துவக் கோட்பாடு முதலியவை இன்றுவரை பிரவாகமெடுக்கத் தொடங்கியுள்ளன.

நுகர்ச்சிவாத முதலாளியத்துடன் தொடர்புடைய கல்விமுறைமையும், நூலாக்கங்களும் உலகெங்கணும் பெருக்கெடுக்கும் ஆட்சி தலை தூக்கியுள்ளது.

அடிப்படை ஒன்றாக இருந்தாலும் மாறுபட்ட கோலங்களுடன் முதலாளியம் வளர்ச்சிபெறத் தொடங்கியுள்ளது. சுரண்டல் இவ்வாறுதான் நிகழ்கின்றது என்று துலக்கமுறாதவாறு முதலாளியம் தனது தொழிற்பாடுகளை தோற்றம் ஒருவகையிலும் செயல் இன்னொரு வகையிலுமாக வெளிக்கொண்டு வருகின்றது. அரசுகளும் ஆட்சிமுறைகளும் அதன் வழியாகவே உலகளாவிய முறையிலே கட்டமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

மேற்கூறிய செயற்பாடுகள் குடும்பங்களின் இயல்பு, கல்வி முறைமை, தொழிற்கோலங்கள், வாசிப்புப் பண்பாடு, நூலாக்க முயற்சிகள், நுகர்ச்சி முறைமை, மனித உளப்பாங்குகளின் ஆக்கம் முதலியவற்றிலே செல்வாக்குகளை ஏற்படுத்தி வருகின்றன.

அவற்றின் தொடர்ச்சியாக வாசிப்பிலும் நூலாக்கங்களிலும் தீவிர முரண்பாடுகள் எழுச்சிக்கொள்ளத் தொடங்கியுள்ளன.

(1) ஒருபுறம் கொக்காகோலா போன்ற போலி நுகர்ச்சிப் பொருள்களின் எழுச்சியும் மறுபுறம் கிராமிய மரபுவழி நுகர்ச்சிப் பொருட்களின் திணறலும்

(2) மலினப்பாட்டைச் சுமந்து நிற்கும் வெகுசனங்களைக் குவியப் படுத்தும் கலை இலக்கியங்களும் அவற்றோடு மாறுபாடு கொண்டு நிற்கும் தரவுறுதிப்பாட்டுக் கலை இலக்கியங்களும்.

(3) முதலாளியத்தால் அவ்வப்போது பறக்கவிடப்படும் மானிட நயப்பு மாயைத் தோற்றங்களும், "முதலாளியம் இறந்து விட்டது" என்று சொல்லி அதனை வலிமைப்படுத்தும் தத்துவச் சரங்களும், அவற்றோடு முரண்பட்டு மீளவும் மார்க்சி யத்தை நோக்கி நகரும் கருத்தியல் வலுவும்.

(4) சூழலையும், இயற்கை வளங்களையும் தீவிர சுரண்டலுக்கு உள்ளாக்கி அழித்துக் கொண்டிருத்தலும் அவற்றோடு எதிர் முனைப்புக் கொண்டு அவற்றின் பின்னால் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் வலிய கரங்களை வெளிப்படுத்துதலும்.

(5) பெண்நிலை ஒடுக்குமுறை, தேசிய இனங்களின் விடுதலை வேட்கைகளை ஒடுக்குதல், தொழிலாளர்களின் போராட்டங் களைச் சிதறடித்தல் போன்ற செயற்பாடுகளோடு முரண்படும், பெண்ணிய விடுதலை, இனத்துவ விடுதலை, வர்க்கவிடுதலை முதலியவற்றை முன்னெடுக்கும் செயற்பாடுகள்.

(6) ஒரு காலத்திலே சோசலிச உச்சங்களை எட்டிய நாடுகள் இன்று தடம் புரண்டு முதலாளிய நாடுகளைக் காட்டிலும் இழிவான உலக விவகாரச் செயல்களில் ஈடுபடுதலும் அவற் றுக்கு மாறுபாடான கருத்து விசைகளை ஓரங்கட்டப்பட்ட சிறிய நாடுகளும் ஆய்வறிவாளரும் வெளிப்படுத்துதல்.

(7) முதலாளியத்துக்கு உரமூட்டும் கருத்தியல் வடிவங்களை உருவாக்குமாறு புலமையாளர்கள் குத்தகைக்கு அமர்த்தப் பட்டு இயக்கப்படுதலும், அவர்களின் செயற்பாடுகளுக்கு முரணாக மானிட நேயம் கொண்ட ஆய்வறிவாளர் விலை போகாது தொழிற்படுதலும்.

(8) மேலோட்டமான மேல்விரவு அறிவுத் தெறிப்பு எழுத்தாக் கங்களும் அவற்றோடு முரண்படும் ஆழ்நிலைக் கற்றலுக்குரிய எழுத்து முயற்சிகளும்.

மேற்கூறிய முரணியல்புகளை ஒட்டியும் வெட்டியும் எழுத்தாக் கங்களும், நூலாக்கங்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றை அடியொற்றி எதிர்வாசிப்பும் நேர்வாசிப்பும் வளர்ந்த வண்ணமுள்ளன.

அறிவுப் பொருளாதாரத்தின் வளர்ச்சியில் அறிவு முதலீடாகவும், அதேவேளை விற்பனைப் பண்டமாகவும் மாறுகின்றது. அறிவின்

வழியாக எழும் கண்டுபிடிப்புக்களும் புத்தாக்கங்களும் ஆழ்ந்த வாசிப்புடன் தொடர்புடையவை. ஆழ்ந்த வாசிப்பு அறிவுப் பொரு ளாதார ஆக்கத்திலே அடிப்படையாக வேண்டப்படும் செயற்படா கின்றது. ஆழ்ந்த வாசிப்பிலே பின்வரும் பரிமாணங்கள் பொதுவாக இடம்பெற்றிருக்கும்.

அ. புதிய எண்ணக்கருக்கள்

ஆ. பொருளுக்கு ஏற்றவகையிலே ஆழ்ந்த உரையாடல்

இ. சிக்கலாகிய எடுத்துரைப்பு

ஈ. பழக்கமற்ற மொழிமுற்கவிப்புக்கள்

எவற்றையும் இலகுவாகவும் மேலோட்டமாகவும் வாசித்துப் பழக்கப்பட்ட ஒரு வாசகர் மேற்கூறிய அமைப்புத் தழுவிய எழுத் தாக்கங்களை எதிர்கொள்ளும் பொழுது அறிகை நிலைச் சமநிலைப் பிறழ்வுகளை அனுபவிக்க நேரிடும். வாசிப்பைப் பொறுத்தவரை அது ஒரு சவால் நிலை அல்லது அறைகூவல் நிலை, அறிவின் முன் னெழு பாய்ச்சலுடன் ஒன்றிணைய வேண்டுமாயின் மேற்குறித் துள்ள அறைகூவலுக்கு முகம் கொடுத்தல் வேண்டும். அறிவைத் திரட்டிக் கொள்ளல் என்பது கடினத் தன்மைகளையும், சிக்கல் களையும் தொடர்ச்சியாகச் சந்திக்கவேண்டிய நெடுவழிப் பயண மாகும்.

அறிவாற்றல்களை முன்னெடுத்துச் செல்லும் சமூகங்கள் மேற் கூறிய சிக்கல் மற்றும் கடின வழிகளை இங்கிதமாக ஏற்று வருவதால் அறிவின் வழியான பொருண்மிய ஆக்கங்களை அனுபவித்து வருகின்றன. ஆழ்ந்த வாசிப்பு, சிக்கலான அறிவு, புதிய புதிய சொல்லாடல் முதலியவற்றை ஏற்க மறுக்கும் சமூகங்கள் அறிவுசார் பொருண்மிய நிலையிலே பின்னடையத் தொடங்குதல் தவிர்க்க முடியாததாகின்றது.

அறிவின் உற்பத்தியும், பங்கீடும், சந்தைப்படுத்தலும் பெரும் முதலாளிய நிறுவனங்களின் உரிமைக்கும் கட்டுப்பாடுகளுக்கும் கீழ் அமைந்துள்ளன. அவற்றை அடியொற்றி அவை மிகை இலாபத்தைச் சம்பாதிக்கத் தொடங்கியுள்ளன. புதிய கண்டுபிடிப்புக்கள் தனி யுரிமைப் பதிவுகளுக்குச் சட்டபூர்வமாக உள்ளடக்கப்படுகின்றன.

அந்நிலையில் அறிவை அடியொற்றிய *"புதிய காலனித்துவம்"* வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது. புதிய அறிவுக் காலனித்துவம்

தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்குரிய மலினமான நுண்வழி முறைகளைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது. அதற்குரிய எடுத்துக் காட்டுக்கள் வருமாறு.

(1) சிறார்களினதும் இளைஞர்களதும் உள்ளங்களை ஆழ்ந்த அறிவு நுகர்ச்சியிலிருந்து திசை திருப்பி வரும் - கணனி விளையாட்டுக்களும், மென்பொருள்களின் உற்பத்தியும்.

(2) ஆழ்ந்த கல்வி ஈடுபாட்டைச் சிதறடிப்புக்கு உள்ளாக்கும் உளவியல் பதகளிப்பை உருவாக்கும் காட்டூன் தயாரிப்புக்கள்.

(3) கலை மலினம் கொண்ட தொடர் நிகழ்ச்சிகளை ஒளி பரப்புதல்.

(4) கல்வி ஈடுபாட்டைக் காட்டிலும் இரண்டாம் நிலைப் பொழுது போக்குச் செயற்பாடுகளுக்கு அதீத முக்கியத்துவம் வழங்குதல்.

(5) நவீன மாயவித்தைக் *(Neo Magic)* கோலங்களை ஊடகங்கள் வழியாக முன்னெடுத்தல்.

(6) வாசகர்களையும், நேயர்களையும் செயலூக்கம் குன்றிய விடுகற்பனைகளுக்குள் *(Fantasies)* அமிழ்த்தி விடுதல்.

(7) அறிவுக்கு முன்னுரிமை வழங்காத தலைமைத்துவ வழி பாட்டை *(Hero Worship)* உருவாக்குதல்.

மேற்கூறிய அறிவுக் காலனித்துவச் செயற்பாடுகளுக்கு மாற்றீடாக அமைவது உயர்நிலையான வாசிப்புப் பண்பாடாகும். உயர்நிலையான வாசிப்புப் பண்பாடு பல்வேறு காரணிகளுடன் தொடர்புடையது. அவை:

அ. தரமான கல்வி முன்னெடுப்பு

ஆ. ஆற்றல் மிக்க ஆசிரிய வாண்மை

இ. அறிவுத் தேடலை அவாவி நிற்கும் சமூகம்

ஈ. அறிவுப் பொருளாதாரம் பற்றிய உற்றுணர்வு

உ. உயர்நிலையான எழுத்தாக்க முயற்சிகளும், நூலாக்கங்களும்

முன்னைய காலனித்துவ எதிர்ப்புச் செயற்பாடுகளிலே அறிவும், கல்வியும், தேசிய நிலைக்கலைகளும், நூலாக்கங்களும் பயன் படுத்தப்பட்ட வரலாற்று அனுபவங்களை மீள் நோக்க வேண்டியுள்ளது.

நவீன அறிவுக் காலனித்துவ எதிர்ப்பில் அவற்றை மேலும் கூர்மையாகப் பயன்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது.

உயர்நிலையான வாசிப்பானது குடும்பநிலையிலும், சமூக நிலையிலும் பொருண்மிய நிலையிலும் மேலெழுச்சிகளை *(Articulation)* ஏற்படுத்த வல்லது.

இன்றைய நிலையில் வளர்முக சமூகங்கள் ஆழ்நிலை வாசிப்பை நோக்கி நகர்ந்து செல்ல வேண்டிய தவிர்க்க முடியாத நிலைத்தோற்றம் பெற்றுள்ளது. அந்தப் புதிய தேவையோடு நூலாக்கங்களும் வெளியீட்டு முயற்சிகளும் புதிய ஊக்குவிப்பு ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்படுதல் அறிவார்ந்த கடமையாகின்றது.

***

# அறிவை முகாமை செய்தல்

*அறிவை முகாமை செய்தல் (Knowledge Management)* என்பது அண்மைக்காலமாகச் சிறப்பாக நோக்கப்படும் ஓர் எழுபொருளாக வுள்ளது. தொழில்கள் அனைத்தும் மேலும் மேலும் அறிவு மயமாகி வருகின்றன. அறிவும் அறிவால் மேலெழும் கண்டுபிடிப்புக்களும் உற்பத்தியின் விளைதிறனை அதிகரிக்கச் செய்த வண்ணமுள்ளன. பின்னைய முதலாளியத்தின் வளர்ச்சியில் அறிவின் அதீத முக்கியத்துவத்தை ஆய்வாளர் டக்கர் பீட்டர் டுறூக்கர் விரிவாக விளக்கியுள்ளார். *(Drucker, 1993, Post Capitalist Society),* அதன் தொடர்ச்சியாக "அறிவுப் பண்பாடு", "ஆய்வறிவு மூலதனம்", "அறிவின் ஆக்கம்" முதலாம் பரிமாணங்கள் ஆழ்ந்து நோக்கப்படுகின்றன. அவை நிறுவனங்களின் வளமும் பலமுமாகின்றன. அறிவே செல்வத்தை ஆக்கவும், மீளாக்கவும் வல்ல கருவியாக மேலெழுகின்றது.

தகவல் யுகத்திலே அறிவு பதிலீடில்லா வளமாக எழுகின்றது. கல்வி நிறுவனத்திலிருந்து உற்பத்தி நிறுவனங்கள் வரை தகவலையும் அறிவையும் சிறந்த முறையிலே பயன்படுத்த வேண்டியுள்ளன. அறிவுக்கும் தகவலுக்குமிடையே வேறுபாடு உண்டு. அறிவு என்பது அறியும் பொருளை வேண்டி நிற்கின்றது. தமது ஆற்றலினால் ஒருவர் தகவலைப் பயன்படுத்தும் பொழுது அது அறிவு பெறலாகின்றது.

சிக்கலான கற்றற் செயல்முறையுடன் ஒன்றிணைந்து அறிவு தொழிற்படுகின்றது. சிந்தனையுடனும் கற்றலுடனும் தொழிற்பாடுகளுடனும் அறிவு சேர்ந்திணைந்துள்ளது. உள்ளத்தின் தொழிற்பாடுகளிலிருந்தே அறிவு மேலெழுகின்றது. அறிவின் ஆக்கம் உணர்வு பூர்வமான செயற்பாடாகின்றது.

விளக்கத்துக்குரிய அறிவு வினைப்பாட்டுக்குரிய அறிவு என்றவாறு அறிவு இருவகைப்படும். அறிவு மேலும் இருவகைப் படுத்தி நோக்கப்படுதல் உண்டு. அவை "வெளியெழு" *(Explict)* அறிவு மற்றும் "திறனுறை" *(Tacit)* அறிவு என்று குறிப்பிடப்படும். வெளியெழு அறிவு இலகுவாக அறியப்படத்தக்கதும், பயன்படுத்தத் தக்கதுமாகும். திறனுறை அறிவு ஒருவருக்கே உரிய தனித்துவமான தும், பிறரால் இலகுவாகக் கண்டுகொள்ளப்பட முடியாததுமாகும். வெளியெழு அறிவு பின்வரும் இயல்புகளைக் கொண்டது.

(1) அது புறநிலையானதும் வரன்முறைப்பட்டதுமாகும்.

(2) தகவல்களை இலகுவாக அணுகிக் கொள்ள முடியும்.

(3) இலகுவாகக் கோடல் *(Coding)* செய்யப்படக் கூடியது.

(4) உணர்வு பூர்வமாக அணுகப்படத்தக்கது.

(5) இலகுவான தொடர்பாடலுக்கு உட்படுத்தத் தக்கது.

**திறனுறை அறிவு பின்வரும் சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளது.**

(1) அது சமூகத்தாலே கட்டுமை செய்யப்படுகின்றது.

(2) நாட்டாரியல்புகள் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

(3) தனிமனித மூளையினுள்ளே அது சேமித்து வைக்கப்பட்டிருக்கும்.

(4) தற்சார்புகள், உணர்ச்சிகள், தற்படிமங்கள், விழுமியங்கள், நம்பிக்கைகள் முதலியவற்றைக் கொண்டிருக்கும்.

(5) அவற்றைவெளிக்கொண்டு வந்து கோடல் செய்தல் எளிதன்று.

(6) தொடர்பாடல் கொள்ளவும், பங்கெடுத்துக் கொள்ளலும் கடினமானது.

(7) அனுபவங்களின் வளமுள்ள களஞ்சியப்படுத்தலாக அது அமையும்.

தொகுத்து நோக்கும்பொழுது அறிவு என்பது தகவலிலும் மேலான பொருள் என்பது புலப்படும். அது சமூக வயப்பட்டது. சமூகத்துக்கும் நிறுவனங்களுக்குமுரிய சொத்தாக அறிவு அமைகின் றது. அறிவோரின் உள்ளத்திலே அறிவு கட்டுமை செய்யப்படுகின் றது. விளக்கத்தின்

வழியாக அறிவு அணுகப்படுகின்றது. அது தனி நபரின் நுகர்ச்சியிலே தங்கியுள்ளது. வினைப்பாட்டுக்குரிய பரிமாணங்களையும் அறிவு கொண்டிருக்கும்.

அறிவை முகாமை செய்தல் என்பது அண்மைக்காலமாக வளர்ச்சி பெற்றுவரும் ஒரு புதிய நெறியாகும். தகவலின் கட்டில்லாப் பிரவாகம், அறிவை முகாமை செய்யும் செயற்பாட்டைத் தூண் டியது. அறிவின் திரட்சியைக் கைத்தொழில்களுக்கும் உற்பத்திக்கும் பயன்படுத்த முயன்றவேளை அதனை முகாமை செய்யும் தேவை மேலெழலாயிற்று. அறிவின் பயன்பாடு குன்றியவேளை உற்பத்தி வீழ்ச்சியையும் வருமான வீழ்ச்சியையும் நிறுவனங்கள் அனுபவிக்க லாயின. அத்துடன் சந்தர்ப்பங்களும் இழக்கப்படலாயின.

அறிவை முகாமை செய்தல் இலக்குகளை நோக்கி விரைந்து நகர்ந்து செல்வதற்கு அடிப்படையானது. முன்னேற்றங்களையும், புத்தாக்கங்களையும் அதன் வழியாக ஏற்படுத்திக் கொள்ள முடியும். அறிவுக்கும் உற்பத்திப் பெருக்கினுக்குமுள்ள தொடர்பை விளக்க வந்த ஜப்பானியர்களின் தொழிற்பாட்டில் "தொடர்ச்சியான முன் னேற்றங்களும், புத்தாக்கங்களும்" என்று குறிப்பிடப்படுகின்றது. அந்தவழி "கைசென்" *(Kaizen)* என்று ஜப்பானிய மொழியில் அழைக்கப்படும்.

நிறுவனத்தின் கூட்டான ஞாபகமாகவும், நுண்ணறிவு சார்ந்த சொத்தாகவும் அறிவு விளங்குகின்றது. வரன்முறை சார்ந்த அறிவு முறைசாரா அறிவு ஆகிய இரண்டினையும் அறிவை முகாமை செய்தல் கவனத்துக்கு எடுத்துக்கொள்கின்றது. தகவல்களை ஆக்க வழியிலே பயன்படுத்துதல் அங்கே முனைப்புப் பெறுகின்றது.

அறிவுசார் *(Knowledgeable)* நபர் தமது உள ஆற்றலைப் பயன் படுத்தி புதிய சிந்தனைகள், கருத்தாக்கங்கள், எண்ணக்கருக்கள் முதலியவற்றை உருவாக்கிக் கொள்வதுடன் அவற்றின் வழியாகப் புதிய கண்டுபிடிப்புக்களையும் புத்தாக்கங்களையும், உருவாக்கிக் கொள்வர். அந்நிலையில் அறிவை முகாமை செய்தல் தனிநபருக் குரிய செயற் பாடாகவும் மாறுகின்றது. அதனைச் சமூக இருப்பே நெறிப்படுத்துகின்றது.

அறிவை முகாமை செய்கையில் "அதனை அறிதல்" *(Knowing That)* "எவ்வாறு அறிதல்" *(Knowing How)* ஆகிய பரிமாணங்கள் மீது கவனம்

செலுத்த வேண்டியுள்ளது. "அதனை அறிதல்" என்பது. உறு நேர்வுகளுடன் *(Facts)* தொடர்புடையது. அது வரன்முறைப் பாடுடன் இணைந்தது. இடம்மாற்றம் செய்யப்படக் கூடிய தயார் நிலையில் உள்ளது. உணர்வு நிலையில் அணுகத்தக்கது.

ஒவ்வொருவரும் தத்தமது பட்டறிவின் வழியாகத் திரட்டிக் கொள்ளும் அறிவு "எவ்வாறு அறிதல்" என்ற பிரிவுக்குள் அடக்கப் படுகின்றது. அவ்வாறு கட்டுமை செய்யப்பட்ட அறிவை விநோதமான நிலைமைகளிலிலே பயன்படுத்துதலும் ஆக்க மலர்ச்சிக்கு இட்டுச் செல்லலும் "எவ்வாறு அறிதல்" என்ற பரிமா ணத்தின் பாற்பட்டது.

ஓர் எடுத்துக்காட்டினால் மேற்கூறிய இரண்டையும் விளக்க லாம். வண்டி ஒன்றை ஓட்டக் கற்றுக்கொள்ளல் "எவ்வாறு அறிதல்" என்பதற்கு எடுத்துக்காட்டு. அதேவேளை நெடுஞ்சாலை விதிகளைக் கற்றுக் கொள்ளல் "அதனை அறிதல்" என்பதற்கு உதாரணமா கின்றது.

அறிவை ஏன் முகாமை செய்தல் வேண்டும் என்ற வினா அடுத்ததாக முக்கியத்துவம் பெறுகின்றது. பின்வரும் வளர்ச்சிக் கோலங்கள் அறிவை முகாமை செய்யவேண்டிய தேவைக்கு விசை யூட்டி வருகின்றன.

(1) ஆற்றுகையினதும் உற்பத்தியினதும் அதிமுக்கிய பொறியாக அறிவு அமைந்துள்ளது.

(2) சமூகம் சார்ந்ததும் பொருள் சார்ந்ததுமான நவீன அறைகூவல் களுக்குப் பொருத்தமாகவும், மதிநுட்பத்துடனும் துலங்க வேண்டிய நிலை தோற்றம் பெற்றுள்ளது.

(3) தொழில்நுட்பவியல் அறிவும், கண்டுபிடிப்புக்களும், புத்தாக் கங்களும் தொடர்ந்தும் விரைந்தும் வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளன.

(4) உற்பத்திகள் அனைத்திலும் அறிவு உள்ளடக்கம் பொதிந்தி ருக்கின்றது.

(5) சந்தைகள் உலகமயமாதலுடன் விரிவடைதலும் தீவிர போட்டி நிலைகள் உருவாதலும் என்ற சூழமைவில் அறிவின் பயன்பாடு அதிகரித்துச் செல்கின்றது.

(6) கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களையும் முகாமை செய்தல் மேலும் சிக்கலாகி வரும் நிலையில் நவீன அறிவின் பிரயோகம் தவிர்க்க முடியாததாகி வருகின்றது.

(7) மாற்றங்களைத் தாமதமாக அன்றி விரைந்து வேகமாக முன் னெடுக்க வேண்டிய நிலையில் அறிவு மயப்பாடு தொடர்ச்சி யாக இடம்பெற வேண்டியுள்ளது.

(8) அனைத்து நிறுவனங்களிலும் வினைப்படுவோர் அறிவை உற்பத்தி செய்பவர்களாகவும், தொடர்ந்து கற்பவர்களாகவும், அறிவைப் பங்கிட்டு அனுபவிப்பவர்களாகவும் இருக்க வேண்டிய தவிர்க்க முடியாத நிலை தோற்றம் பெற்றுள்ளது.

(9) அனைத்து வினைப்பாடுகளிலும் செம்மையும் நுட்பப்பாடு களும் அறிவால் மேலோங்கி வருகின்றது.

ஆற்றலும் திறனும் மிக்க ஒருவர் தாம் பணிபுரியும் நிறுவனத் தைவிட்டு நீங்கும் பொழுது நிறுவனத்துக்கு "அறிவு இழப்பு" ஏற்படு கின்றது. நவீன மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க முடியாதநிலை தோற்றம் பெறுகின்றது. அறிவை ஒழுங்குற முகாமைசெய்யும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பொழுது அந்த அவலத்திலிருந்து மீண்டெழ முடியும்.

தகவல்களில் இருந்து அறிவை உருவாக்குதல், அறிவிலிருந்து மேலும் முன்னேற்றகரமான அறிவை உருவாக்கிக் கொள்ளல் ஆகி யவை தொடர்ச்சியாக இடம்பெற வேண்டியுள்ளன. அறிவைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்தும் பொழுது நிறுவனத்தின் ஆற்றல் வரன்முறையாக மேம்படுகின்றது.

அறிவையும் சிந்தனையையும் ஆக்க மலர்ச்சியும் முன்னெடுத் துச் செல்வதற்குரிய நுட்பங்களை ஆக்கியவர்களுள் எட்வேட். டி. போனோ சிறப்பாகச் சுட்டிக்காட்டப்படத் தக்கவர். "ஆறு சிந்திக்கும் தொப்பிகள்" *(Six Thinking Hats)* பற்றிய எண்ணக்கருவை அவர் முன்மொழிந்தார். அவர் உருவாக்கிய நுட்பம் வருமாறு:

கலந்துரையாடல்களின் போது ஒவ்வொருவரும் வேறுபட்ட "சிந்திக்கும் தொப்பிகளை" முன்வைப்பர். முதலில் ஒருவர் கலந்து ரையாடல் தொடர்பான சிவப்புத் தொப்பியை முன்வைப்பார். ஒவ்வொரு தொப்பியும் ஒவ்வொரு விதத்திலே பொருண்மை கொண்டது.

| | | |
|---|---|---|
| சிவப்புத் தொப்பி | - | மனவெழுச்சி கலந்த சிந்தனை |
| கருமைத் தொப்பி | - | சிந்தனை எங்கே தவறாகப் போகின்றது என்பதைக் குறிப்பிடும். |
| வெள்ளைத் தொப்பி | - | புறவயமாக நிலவரங்களை நோக்கும் |
| மஞ்சள் தொப்பி | - | நம்பிக்கை உறுதி கொண்ட தெரிவினை மேற்கொள்ளும் |
| நீலத் தொப்பி | - | தேவைப்படும் பொருத்தமான தகவல்களைக் கண்டறிந்து வழங்கும் |
| பச்சைத் தொப்பி | - | நடைமுறைப்படுத்தலோடு தொடர்புடையது |

அறிவு முகாமைத்துவத்தை மனவெழுச்சி நுண்மதியுடன் இணைந்து முன்னெடுக்கும் நடவடிக்கையாக மேற்கூறிய செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. கூட்டுறவுடன் செயற்படவும் உராய்வின்றித் தொழிற்படவும், எடுத்துக் கொண்ட இலக்கை நோக்கி முன்னேறிச் செல்லவும் அந்தச் செயற்பாடு வழிவகுக்கின்றது.

அறிவை முகாமை செய்வதில் "அறிவுச் சமுதாயங்கள்" பற்றிய சிந்தனையும் முக்கியத்துவம் பெறுகின்றது. முறைசாரா வகையிலும் அறிவு உருவாக்கப்படுகின்றது. அவ்வப்போது உருவாக்கப்படும் அறிவை ஒழுங்கமைத்தலும், தளத்தில் இணைத்தலும் பயனுள்ள செயற்பாடுகளாகின்றன. "அறிவுச் சமுதாயங்கள்" என்ற எண்ணக்கரு ஒழுங்கமைக்கப்பட்ட குழு *(Team)* என்பதிலிருந்து வேறுபட்டது. ஒழுங்கமைக்கப்படாத, வரன்முறையற்ற நிலையில், அறிவுச் சமுதாயங்கள் உருவாகி நிற்கும் அறிவினதும் அனுபவத்திட்டினதும் முக்கியத்துவம் பலகாலமாக அறியப்படாதிருந்தது. ஆனால் நவீன அறிவு முகாமைத்துவத்தில் அதன் ஆற்றல் நன்கு வலியுறுத்தப்படுகின்றது. கல்வியியல் நிறுவனங்களில் அதன் பயன்பாடு மேலும் முக்கியத்துவம் பெறுகின்றது. புலமையாளரின் சமுதாயங்களை *(Communities of Scholars)* உருவாக்கிக்கொள்ளலும் அவற்றின் பயன்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்ளலும் அறிவை முகாமை செய்தலிலே சிறப்பார்ந்த நடவடிக்கையாக வலியுறுத்தப்படுகின்றது.

அறிவை முகாமை செய்தல் என்பதில் அறிவை உழைப்பில் *(Labour)* இருந்து பிரித்து நோக்குதல் வழுவுடைய தவறான அணுகு முறையாகும். மனித உழைப்பின் வழியாகவே அறிவு முகிழ்த்தெழு கின்றது என்பதை நிராகரித்துவிட முடியாது. அறிவை உழைப்பிலி ருந்து வேறுபடுத்த முயல்வோர் உழைப்பின் இயல்பைக் கொச்சைப்படுத்தி விடுகின்றனர்.

அறிவைத் திரட்டுதல், புதுப்பித்தல் வரன்முறையாகக் களஞ்சி யப்படுத்துதல், தேவை கருதி விநியோகம் செய்தல், செயற்படுத்திய அறிவின் விளைவுகளைக் கணிப்பீடு செய்தல், இலக்குநோக்கிய செயற்பாட்டில் அறிவு பாய்ச்சப்படுகின்றதா என்பதைக் கண்கா ணித்து நெறிப்படுத்துதல் ஆகிய முகாமைத்துவச் செயற்பாடுகள் அனைத்தும் மனித உளஉழைப்பு வயப்பட்ட தென்பதை மறந்துவிட முடியாது.

***

# செயல்நிலைக் கற்றலை முன்னெடுத்தல்

செயல்நிலை ஆய்வு *(Action Research)* போன்று ***"செயல்நிலைக் கற்றலும்"*** *(Action Learning)* அண்மைக் காலத்தைய கல்வியில் அதிகம் எடுத்தாளப்படும் எழுபொருளாகின்றது. செயல்நிலைக் கற்றல் "வினைப்படும் கற்றல்" என்ற பொருளைத் தருகின்றது. இவ்வகைக் கற்றலிலே கற்போர் குறைகள் நிரப்பப்பட வேண்டி கொல்கலன்கள் என்று கருதப்படமாட்டார்கள். வளம் நிறைந்த பெருக்கமுடையவர்களாகவும் மேலும் கற்பதற்குத் தயார் நிலையில் உள்ளவர்களாகவும் அடையாளப்படுத்தப்படுவர். கற்றலுக்கென வழங்கப்பட்ட பொருளைத் தம்மிடமுள்ள ஒட்டுமொத்தமான அனுபவத் தொகுதியின் பெருவளத்தோடு அணுகுவர்.

தெறித்தலுக்கும் வினைப்பாட்டுக்குமுள்ள இணைப்புக்கள் செயல்நிலைக் கற்றலிலே கட்டியெழுப்பப்படுகின்றன. அதாவது, பழைய அனுபவங்கள் மீளுருவாக்கம் செய்யப்பட்டு எதிர்கால நிகழ்ச்சிகளுக்கு ஏற்றவாறு புதிய வழிகளைக் காணல் முன்னெடுக்கப்படுகின்றது. ஆதரவு தருதல் மற்றும் அறைகூவல் விடுத்தல் ஆகியவை செயல்நிலைக் கற்றலில் முன்னெடுக்கப்படுகின்றன.

செயல்நிலைக் கற்றல் குழுவையும் கருத்தாடலையும் *(Dialogue)* உள்ளடக்கியது. கருத்தாடல் என்பது கலந்துரையாடல் *(Discussion)* என்பதிலிருந்து வேறுபட்டது. கருத்தாடலில் ஆக்கமலர்ச்சிப் பண்பு மேலோங்கியிருக்கும். கருத்துக்களின் பிரவாகமும் மேலோங்கியிருக்கும். கருத்தாடலின் இணைப்புக் கற்றல் முன்னெடுக்கப்படும். அறிதலை "இணைப்பு நிலை", "பிரிநிலை" என்று இருவேறு எண்ணக்கருக்கள் வழியாக விளக்குவர். அளிக்கை செய்வோரின் உலகை விளங்கி

அதிலிருந்து செயற்படத் தொடங்கல் இணைநிலைக் கற்றலில் முன்னெடுக்கப்படுகின்றது.

அகவயமான அறிவிலிருந்து இணைநிலைக் கற்றல் கட்டியெழுப்பப்படுகின்றது. ஒத்துணர்வு வாயிலாக அது கற்கப்படுகின்றது. நம்பிக்கையுடனும் நல்லெண்ணத்துடனும் அறியப்படுதல் முன்னெடுக்கப்படுகின்றது. பிரிநிலைக் கற்றலையும், இணைநிலைக் கற்றலையும் பின்வருமாறு தெளிவுபடுத்தலாம்.

அ. பிரிநிலைக் கற்றல் - பக்கச் சார்பின்றி எதிர்க்காரணங்காணல் - *(Reasoning Against)*

ஆ. இணைநிலைக் கற்றல் - நம்பிக்கை ஈடுபாட்டுடன் உடனிருந்து காரணங்காணல் *(Reasoning With)*

பிரிநிலை மற்றும் இணைநிலைக் கற்றல் வாயிலாகக் கற்போர் அடுத்த கட்டத்துக்கு நிலை மாறுகின்றனர். கட்டுமானவாதிகள் அதனைப் பின்வருமாறு குறிப்பிடுவர். அனைத்து அறிவும் கட்டுமை செய்யப்படுகின்றது. அறிவின் உள்ளமைந்த உறுப்பாகக் கற்போர் உள்ளடங்கி விடுகின்றனர்.

செயல் நிலைக் கற்றல் தெறித்தற் செயல்முறையை உள்ளடக்கியது. அச்செயல்முறையிலே பின்வரும் எண்ணக்கருக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

அ. அதனை அறிதல்

ஆ. செயல் வழியில் அறிதலும் அறிவின் பயனும்

இ. செயல் வழியில் நின்று தெறித்தல்

ஈ. செயல் வழி மீது தெறித்தல்

நூல்களில் உள்ளடங்கிய பொருளை அறிதல் "அதனை அறிதல்" எனப்படும். அனுபவ வழியாக அறிவைத் திரட்டுதலும் பயன்படுத்தலும் அடுத்து வலியுறுத்தப்படும் எண்ணக்கருக்களாகின்றது. நேர் மற்றும் எதிர் விசைகளை அறிந்து தெறித்தலும் அடுத்து மேலும் தெளிவான ஆக்கத்தை மேற்கொள்ளலும் செயல்வழியிலே நின்று தெறித்தலாகின்றது. நடப்பியலைத் தெரிந்து கொள்வதற்குரிய வழியாக செயல்வழி மீது தெறித்தல் அமைகின்றது.

கற்கும் செயல்முறையினுள்ளே நிகழும் செயற்பாடாக செயல் வழியில் நின்று தெறித்தலும், தெறித்தலில் நின்று செயற்படலும் அமையும், கற்றற் செயற்பாட்டினுள் அவை ஒன்றுக்கொன்று அனுசரணையாக அமையும். அவற்றின்பின் நிகழ்வதே செயல்வழி மீது தெறித்தலாகின்றது.

செயல்நிலைக் கற்றலின் சமூகச் சூழமைவு பற்றிய ஆய்வுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் தனிவளையம் மற்றும் இருவளையக் கற்றல் *(Single and Double Loop Learning)* முதற்கண் விளக்கப்படுகின்றது. தனிவளையக் கற்றல் கற்றலைப் பராமரித்தலும், முன்னேற்றகரமாக இட்டுச் செல்லலுமாகிய செயற் பாடுகளை உள்ளடக்கி நிற்கின்றது. இருவளையக் கற்றல் தனி வளையக் கற்றலில் இருந்து விடுபட்டு அறிநிரற் பெயர்ச்சியை *(Paradigm Shift)* ஏற்படுத்துகின்றது. புதிய விளக்கத்தையும், தேர்ச்சி பெற்ற உலகு பற்றிய நோக்கையும் நோக்கிப் பெயர்ச்சி கொள்கின் றது. செயல்நிலைக்கற்றல் இவ்வாறான இருவளையக் கற்றலை முன்னெடுக்கின்றது.

செயல்நிலைக் கற்றல் கட்டுமானவாத உளவியலை அடிப் படையாகக் கொண்டது. கற்றற் சூழமைவுச் சமூகநிலையிலே அறிவை உருவாக்குதல் முன்னெடுக்கப்படுகின்றது. மானிடநோக்கு, நடத்தைநோக்கு முதலிய பல்வேறு கண்ணோட்டங்களில் செயல் நிலைக் கற்றல் விளக்கப்படுகின்றது.

செயல்நிலைக் கற்றலிலே வித்தியாசமான குழுச் செயற்பாடுகள் இயக்கப்படும். தலைவர் மற்றும் வரன்முறையான நிகழ்ச்சி நிரல் முதலியவை அங்கே இடம்பெறமாட்டா. குழுவில் அளிக்கை செய் பவரது எழுபொருள் மீது கவனக் குவிப்பு ஏற்படுத்தப்படும். அதனைக் குழுவில் உள்ளோர் கலந்துரையாடல்களுக்கு எடுத்துக்கொள்வர். செயல்நிலைத் தெறித்தலே அங்கு முன்னெடுக்கப்படும். தெளிவான செயற்பணி ஒன்றுடன் இணைக்கப்பட்டதாக குழு இயக்கப்படும். அது குழுச் சீர்மிய முறையிலிருந்தும் வேறுபட்டது. ஆனால் அளிக்கை செய்பவர் ஒத்துணர்வுடன் அணுகப்படுவார்.

உரிய பராமரிப்பு வசதிகளுடன் செயல்நிலை உறுதொகுப்புக் கூட்டம் *(Setmeeting)* ஆரம்பமாகும். தெளிவானதும் வினைத்திறன் மிக்கதுமான ஓர் உறுதி தொகுப்பின் படிநிலை வளர்ச்சி பின்வரு மாறு அமையும்.

அ. முதலில் குழுவின் பராமரிப்போடு உறு தொகுப்புக் கூட்டம் ஆரம்பிக்கப்படும். அங்கே வலுவின் பிரயோகம் ஆரம்ப நிலையில் இருக்கும்.

ஆ. அதனைத் தொடர்ந்து குழுவை வலுவுள்ளதாக மாற்றுவதற் குரியவாறு உறுப்பினர்களின் வலுப்பிரயோகம் அதிகரிக்கத் தொடங்கும்.

இ. அடுத்ததாக குழுவின் தெறித்தற் செயற்பாடுகளின் வழியாக ஆக்க மலர்ச்சி அல்லது படைப்பாற்றல் முன்னெடுக்கப்படும்.

ஈ. அதனைத் தொடர்ந்து குழுவின் ஓய்வுச் செயற்பாடு முன்னெ டுக்கப்படும். அந்நிலையில் வலுப்பிரயோகம் படிப்படியாகக் குறைந்து செல்லும்.

செயல்நிலைக் கற்றல் மரபுவழியான கற்றலில் இருந்து பின்வரும் வழிகளிலே வேறுபடுகின்றது.

(1) செயல்நிலைக் கற்றல் திணிப்புக்குரிய கற்றல் அன்று. கற்போர் தன்னார்வத்துடன் கற்றலில் ஈடுபடுவர்.

(2) இரகசியமும் நம்பிக்கையும் செயல்நிலைக் கற்றலின் சிறப் பார்ந்த பரிமாணங்களாக இருக்கும். முழுத் தொகுப்பில் ஓர் உறுப்பினர் கூறியவற்றை ஏனைய உறுப்பினர்கள் வெளியே எடுத்துச்சென்று கூறுதலும், கதைத்தலும் தவிர்க்கப்படு கின்றன. குழு உறுப்பினர் ஒருவர் மீது மற்றவர் நம்பிக்கை வைத்தல் செயல்நிலைக் கற்றலின் சிறப்பார்ந்த பரிமாணமா கின்றது.

(3) மரபுவழிக் கற்றலில் அறிகை ஆட்சியே அதிக அளவு வலி யுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் செயல் நிலைக்கற்றலில் ஏனைய ஆட்சிகளாகிய இயக்க ஆட்சி, எழுச்சி ஆட்சி என்பவை கூட்டாக வலியுறுத்தப்படுகின்றன.

(4) செயல்நிலைக் கற்றலிலே கற்பவர்கள் தமக்குரிய எழுபொருட் களைக் *(Issues)* குழுவிலே முன்வைத்து; அவற்றுக்குரிய தீர்வுகளை நோக்கி நகர்ந்து செல்வர். அந்தச் செயற்பாடு சுயா தீனமாகவும் விடுதலைப் பாங்குடையதாகவும் இடம்பெறும். கற்றல் ஒரு சமூகச் செயல்முறையாக வடிவமைக்கப்படுகின்றது.

மாணவர் - மாணவர்கிடையேயும் மாணவர் உறு வளஞ் செய்வோருக்கிடையேயும் ஒருவர் மீது ஒருவர் தங்கியிருத்தலும் வலியுறுத்தப்படுகின்றது.

(5) மரபுவழிக் கற்பித்தலில் அதீத போட்டியும் மாணவர்க்கி டையே ஒத்துழைப்பற்ற தூரங்களும் ஏற்படுத்தப்படுகின்றன. செயல்நிலைக் கற்றலில் ஒன்றிணைப்புடன் கூடிய ஈடுபாடும் அதன்வழி மேலெழுச்சி கொள்ளும் ஆக்கச் சிந்தனையுடன் நிகழும் அறிவின் கட்டுமையும் முன்னெடுக்கப்படும்.

(6) கற்போரை வளம் நிறைந்தோராகவும் மிகையினராகவும் *(Ab Undance)* கருதுதல் செயல்நிலைக் கற்லின் சிறப்புப் பண்பாகின்றது.

(7) செயல்நிலைக் கற்றலிலே கற்போர் தமக்குத் தாமே பொறுப் பாகின்றனர். கற்பவர் தாமே வளமுள்ளவர் என்பதோடு இதனைத் தொடர்புபடுத்தி நோக்க வேண்டியுள்ளது.

(8) ஆதரவு தருதலுடன் மட்டும் செயல்நிலைக் கற்றல் நின்று விடுவதில்லை. ஆதரவுடன் இணைந்து கற்றலை முன்னெடுப் பதற்குரிய அறைகூவலும் வழங்கப்படுகின்றது.

(9) கற்போரின் அறிகை மற்றும் மனவெழுச்சி நிலைகளைக் கருத்திற் கொண்டும் சூழமைவை நோக்கியும் ஒத்துணர்வு வழங்கப்படுதல் செயல்நிலைக் கற்றலில் வலியுறுத்தப்படு கின்றது.

(10) குழுஉறுப்பினர் அளிக்கை செய்யும் பொழுது, அதனைத் தொடர்ந்து இடைவினைகள் நிகழ்த்தப்படும் பொழுதும் தரமேம்பாடு முதன்மைப்படுத்தப்படுகின்றது.

செயல்நிலைக் கற்றல் "நிலைமாற்றத்தை" வலியுறுத்துகின்றது. கற்போரின் கற்றல் வளர்ச்சியும் மேம்பாடு நோக்கிய நிலை மாற் றமும் ஒன்றிணைக்கப்படுகின்றன. செயற்பாடுகளினூடே முன்னுரி மைகளைத் தெளிவுபடுத்துதலும், தமக்குரிய பாத்திரத்தை விளங்கிக் கொள்ளலும் கற்றலில் இடம்பெறும். உலக நடப்பியலைப் பல்வேறு வழிகளில் தரிசித்தல் நிலைமாற்றம் என்பதிலே உள்ளடக்கப்படும்.

செயல்நிலைக் கற்றல் பல்வேறு பரிசோதனைகளை அடியொற்றி உருவாக்கப்பட்டுள்ளது. பகுதிநேரக் கற்கை நெறிகளிலும் பின்பட்டக் கற்கை நெறிகளிலும் இது பெரும் வெற்றியைத் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

***

# மரபு வழியான கற்பித்தலிலிருந்து விலகுதல்

சமகாலத்தைய அறிவுசார் பொருண்மிய நிலவரங்கள் கற்ற லிலே வினைப்பெருக்கை *(Boosting)* வேண்டி நிற்கின்றன. அடை வுகளின் தரத்தை உயர்த்துதல், கற்றல் கற்பித்தலை வலுவூட்டல், பன்மை நிலையிலுள்ள கற்போர் அனைவரையும் கவனத்திற் கொள்ளல், முதலியவை பாடசாலைகளில் எழுச்சிகொள்ளத் தொடங்கியுள்ளன. கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து ஆசிரியர்களின் வேலைச் சுமைகள் அதிகரித்து வருதல் உலகளாவிய ஒரு பொதுப் பண்பாகக் காணப்படுகின்றது. அதனை எதிர்கொள்வதற்குரிய வழிவகைகள் பற்றிய ஆய்வுகள் அண்மைக்காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஏனைய வாண்மைகள் மற்றும் முகாமையாளர்களோடு ஒப்பிடும் பொழுது ஆசிரியரது வேலைப் பழுவும் வேலைச் செறிவும் கூடுதலாக இருத்தல் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் தமது வாண் மையின் மீதும் தொழிற்பாடுகள் மீதும் கட்டுப்பாடுகளை மேற் கொள்ள முடியாத பிரச்சினையையும் ஆசிரியர்கள் எதிர்கொள்கின்றனர். மாணவரும் பெற்றாரும் ஆசிரியர்கள் எதிர்கொள்கின் றனர். மாணவரும் பெற்றாரும் ஆசிரியர்கள் மீது அதிக எதிர்பார்ப்புக்களை முன்வைக்கின்றனர். அதேவேளை மாணவர்களிடத்து நடத்தைப் பிறழ்வுகள் மேலோங்குதலும் பெற்றோர் ஆசிரி யர்கள் மீது குறைகூறுபவர்களாக இருக்கும் வேளை ஒத்துழைப்பு வழங்காநிலை காணப்படாதிருத்தலும் இடம்பெறுகின்றன.

மாணவரின் நடத்தைப் பிறழ்வுகளும், வேலைச் சுமையும், மேற்பார்வை முறைமையும், ஆசிரியர்களுக்கு உளநெருக்கீடுகளை உண்டாக்குகின்றன. அதிக நெருக்கீடுகள் கற்றுக்கொள்ளப்பட்ட ஆதரவின்மை அவலத்துக்கு *(Learned Helplessness)* இட்டுச் செல்கின்றது. பின்வரும் நிலைமைகள் ஆசிரியர்களிடத்து உளநெருக்கீட்டை ஏற்படுத்துகின்றது.

(1) ஊக்கல் போதாமையிலுள்ள மாணவருக்குக் கற்பித்தலை முன்னெடுத்தல். ஆசிரியரின் ஊக்குவிப்புக்கள் செயலிழக்கும் நிலை.

(2) மாணவரிடத்து ஒழுங்கு மற்றும் கட்டுப்பாடுகளை முன்னெடுப்பதிலுள்ள இடர்கள்.

(3) வேலைப் பழுவின் அழுத்தங்கள்.

(4) புதிய மாற்றங்களுடன் இணங்கிச் செல்வதில் எதிர்கொள்ளப்படும் இடர்கள்.

(5) பிறரால் மேற்கொள்ளப்படும் பொருத்தமற்ற கணிப்பீடுகள்.

(6) அந்தஸ்து மற்றும் தற்கணிப்பு நிலை

(7) நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான முரண்கோலங்கள்.

(8) வகிபாக முரண்பாடுகளும் வகிபாகங்கள் பற்றிய தெளிவற்ற கலங்கிய சூழலும்

(9) பின்தங்கியதும் வறியநிலையிலுள்ளதுமான வேலைச்சூழல்

(10) மாணவர் ஈட்டும் வெற்றிகளுக்கு ஆசிரியர்கள் விதந்துரைக்கப் படாத நிலையும், பின்னடைவுகளுக்கு ஆசிரியர்களே பொறுப்பியமாக்கப்படுதலும்.

கற்றலின் நோக்கம் *(Aim)* என்பது ஒரு நீண்ட தொடர்ச்சி எடுத்துக்காட்டாக கற்றுத் தேறியவராக அல்லது ஒரு புலமையாள ராக வரவேண்டும் என்பது உடனடியாக அடையப்படக்கூடியதன்று. மேலும் அந்த நிலையை எட்டியபின்னரும் அதனைப் பராமரித்துக் கொள்வதற்குத் தொடர்ந்து கற்க வேண்டும். இலக்கு *(Objective)* என்பது அடையப்படக் கூடியது.

அதேவேளை சமகாலத்துக் கல்வியிலே *Smart* என்ற எண்ணக்கரு முன்வைக்கப்படுகின்றது. அதன் விளக்கம் வருமாறு.

S- Specific - குறித்து நிற்பது

M- Measurable - அளவீடு செய்யத்தக்கது

A- Achievable - அடையத்தக்கது

R - Realistic - *நடப்பியல் சார்ந்தது*

T - Time Bound - *நேர அடைவு கொண்டது*

எடுத்துக்காட்டுகள் வாயிலாக இலக்கையும் நோக்கையும் வேறுபடுத்திக் காட்டலாம். முழுமையான ஆளுமை கொண்டவராக ஒருவரை உருவாக்குதல் என்பது நோக்கத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு. குறித்த எண்ணக்கருவுக்குரிய வரைவிலக்கணத்தை அறிந்து கொள்ளல் இலக்கினுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

கற்போரிடத்து எதிர்பார்க்கப்படும் அறிவு, எழுச்சி, மற்றும் உடலியக்கம் சார்ந்த புலப்பாடுகளை நடத்தைசார் இலக்குகள் என்ற எண்ணக்கரு குறிப்பிடுகின்றது. அளவிடப் படக்கூடிய இலக்குகள், கற்போர் இலக்குகள், போதனைசார்ந்த இலக்குகள் ஆற்றுகைக் குறிக்கோள், எதிர்பார்க்கப்படும் கற்றல் வெளிப்பாடுகள் என்றவா றான பெயர்களால் நடத்தை இலக்குகள் அழைக்கப்படுகின்றன.

நடத்தைசார் இலக்குகள் பின்வரும் சிறப்பியல்புகளைக் கொண்டவை.

(1) கண்டறியப்படக்கூடியவையாயும் அளவீடு செய்யப்படக் கூடியவையாகவும் இருத்தல்.

(2) அவற்றை ஆசிரியருக்கும் மாணவருக்கும் இலகுவாக அறியச் செய்துவிடலாம்.

(3) கற்றல் கற்பித்தலை ஒழுங்கமைப்பதற்கு அவை துணை செய்கின்றன.

(4) தெளிவான சிந்தனையையும் தொழிற்பாடுகளையும் முன்னெடுக்க உதவுகின்றன.

(5) கற்றல் கற்பித்தல் அவாநிலையில் உள்ளோருக்கு அவை உதவும்.

(6) நடத்தைகள் துல்லியமாக விளக்கப்பட்டிருக்கும்.

(7) பாடங்களைத் திட்டமிடுவதற்கு அவை துணை நிற்கும்.

நடத்தைசார் இலக்குகளிலே குறைபாடுகள் காணப்படுதல் நவீன ஆசிரியர்களால் உய்த்து உணரப்படுகின்றது.

(1) அவை பொறிமுறையான இயல்புகளைக் கொண்டுள்ளன.

(2) மாணவர் உள்வாங்குவோராக இருக்கும் நிலை மேலோங்கி நிற்கும் வேளை சுயாதீனமாகச் சிந்தித்தலும் துலங்குதலும் போதுமான அளவிலே கிடைக்கப் பெறுதல் இல்லை.

(3) உடனடிப் புலப்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வேளை, நீண்ட நோக்கங்கள் கருத்திற் கொள்ளப்படுதல் இல்லை.

(4) உயர்நிலையான சிந்தனைத் தொழிற்பாடுகளுக்கு உற்சாக மளிக்கப்படாது உடனடித்துலங்கலே மேலெழுதல் உண்டு. புலப்பாடுகள் மற்றும் வெளிப்பாடுகள் என்பவற்றுக்கான கற்றல் என்ற நிலை வலுப் பெறுகின்றது.

(5) அறிவின் நடத்தைசார் பெறுமானங்கள் வலியுறுத்தப்படும் வேளை, ஊடுருவிய சிந்தனைகளும், கற்பனைகளும், விரிசிந்தனையும் உற்சாகம் பெறுதல் இல்லை.

(6) அறிவு துண்டங்களாகவும் பொதிகளாகவும் பிரித்து வைக்கப் படுகின்றது.

கற்றலும் கற்பித்தலும் தர உறுதியும் தரச்சிறப்பும் கொண்டவை யாயிருத்தல் முக்கியமானது. கற்றல் கற்பித்தலில் கட்டுமானவியல் *(Constructivism)* என்பதன் முக்கியத்துவம் மேலும் முன்னெடுக்கப் பட்டு வருகின்றது. கட்டுமானவியற் கோட்பாடானது அறிவு பெற்றுக்கொள்ளப்படுதல் இல்லையென்பதையும் உள்ளத்திலே கட்டுமை செய்யப்படுகின்றது என்பதையும் வலியுறுத்துகின்றது. கற்போரின் தனித்துவத்துக்கும் தனித்துவமான சிந்தனைக்கோலங் களுக்கும் ஏற்றவாறு அறிவு கட்டுமை செய்யப்படும்.

சுயநெறிப்பாடுடைய செயலூக்கமுள்ள நடவடிக்கையாகக் கற்றல் கொள்ளப்படுகின்றது. அனுபவங்களிலிருந்து கற்றல் நிலை பேறு கொள்கின்றது. உயர்நிலையான சிந்தனையுடன் அது தொடர்பு டையது. தமது உளஅமைப்பை அடியொற்றி மாணவர்கள் அறிவை ஒழுங்கமைத்துக் கொள்கின்றனர். அறிவு தொடர்ச்சியாக மாறிய வண்ணமிருக்கும். அறிவைத் தன்மயமாக்கலும் தன்னமைவாக்கலும் தொடர்ந்து நிகழும் செயல்முறைகளாகின்றன.

கற்றல் ஒரு சமூகச் செயல்முறை. அது சுயநெறிப்பட்டது. தாம் எவ்வாறு கற்கின்றனர் என்பதை உணர்த்தும் மீஅறிகை *(Meta Cognition)* ச் செயற்பாடு நுண்மதி மேலிட்ட நடவடிக்கையாகின்றது.

கட்டுமானவியலிலே பின்வரும் சிறப்புப் பண்புகள் வலியுறுத் தப்படுகின்றன.

(1) சமூக வயப்பட்ட கற்றல்

(2) மீ அறிகை

(3) உயர்நிலையான சிந்தனை

(4) கற்றல் செயல்முறையின் மீது அதீத கவனம் செலுத்தப்படல்

(5) மாணவரை நடுநாயகப்படுத்தல்

(6) உள்ளார்ந்த ஊக்கலை முதன்மைப்படுத்தல்

(7) நெடுங்கோட்டுத் தருக்கத்திலிருந்து வலைப்பின்னல் தருக்கத் துக்கு நகர்ந்து செல்லல்.

(8) கற்றல் தனியாளுக்குரிய கண்டுபிடிப்பாகவும், தற்பரிசோ தனையாவும் அமைதல்.

இந்நிலையிலிருந்து ஆசிரியரின் கற்பித்தல் நகர்ச்சி எவ்வாறு அமைய வேண்டும் என்பதை அடுத்து நோக்கலாம். மாணவரின் சுயாதீனத்தையும், உற்றெழும் *(Initiative)* ஆற்றல்களையும் உற்சாகப் படுத்தல் வேண்டும். அதேவேளை மாணவரிடத்து நிகழும் எண்ணக் கருவாக்க வளர்ச்சியையும் கவனித்துக்கொள்ளல் வேண்டும். உயர்நிலையான வினாக்களைத் தூண்டி உசாவல் விருப்புக்கும் உற்சாகம் தரும் வேளை தொடர்ந்து மதிப்பீட்டுப் பொறிக்குள் மட்டும் மாணவரை வைத்திருத்தலாகாது.

அண்மைக் காலமாக "மூளை நிலைக் கற்றல்" *(Brain Based Learning)* என்ற எண்ணக்கரு முன்வைக்கப்படுகின்றது.

மூளை பற்றிய ஆய்வுகள் சமகாலத்திலே ஆழ்ந்து முன்னெடுக் கப்படுகின்றன. கற்றுக்கொள்வதை மூளை விரும்புகின்றது. தகவல் களைத் தெறிப்பற்ற வகையிலே மூளை பதித்து வைப்பதில்லை. கற்கும் பொருட்டு அது செயற்பட்ட வண்ணம் இருக்கும். புலன் வழியாகத்

தகவல்களை மூளை தெரிவு செய்தே உள்வாங்குகின்றது. மூளையின் சிக்கலான நியூறல் இணைப்புக்கள் கற்றலுக்குச் சாதகமாகவுள்ளன.

ஒரே நேரத்திலே பல்வேறு தொழிற்பாடுகளைக் கொண்டதாக மூளைஅமைக்கப்பட்டுள்ளது. முழுமைகளையும் பகுதிகளையும் மூளை ஒரே நேரத்தில் உள்வாங்கிக் கொள்கின்றது. தகவல்கள் பன்முகப்பட்ட நியூறல் வழியாக மீளமைக்கப்படுகின்றன. உடலின் இரசாயனப் பண்பு மூளையின் தொழிற்பாடுகளிலே செல்வாக்குச் செலுத்துகின்றது.

ஒழுங்கமைத்தற் செயற்பாடுகள் வழியாக மூளை கருத்துக் களை உருவாக்கிக் கொள்கின்றது. தகவல்களிலும் பார்க்க மேம்பட்ட வடிவமே கருத்தெழுகை *(Meaning)* ஆகும். மூளை என்பது சமூக வடிவானது. ஏனைய மூளைகளுடன் தொடர்புகொண்டு அது தன்னை உருவாக்கிக் கொள்கின்றது. மூளைக்கு விடுக்கப்படும் அறைகூவல்களால் அது தன்னை வளம்படுத்திக் கொள்கின்றது. ஒவ்வொரு மூளையும் தனித்துவமானது. இதனால் அறிவைத் தேடிக் கற்றுக் கொள்ளலும் ஒவ்வொருவருக்குமுரிய தனித்துவமாகின்றது. நேர்முகமான மனவெழுச்சிகள் மூளையின் கற்றல் செயற்பாட்டை வினைத்திறன்படுத்தும்.

மூளை நிலைக் கற்றலை ஆசிரியர் எவ்வாறு கையாளலாம் என்பதை அடுத்து நோக்கலாம்.

(1) முதன்மைநேரம், கீழிறங்கும் நேரம் *(Down Time)* என்ற நிலை களிலே முதன்மை நேரமே கற்பதற்குரிய நேரமாகும். கீழிறங் கும் நேரம் மூளை ஓய்வெடுக்கும் நேரமாகும்.

(2) கற்றல் மற்றும் தகவல் திரட்டல் என்பவற்றுக்குரிய செல் வழிகளை *(Channels)* அதிகரித்தல்.

(3) பல்லூடக வழிக்கற்றலை முன்னெடுத்தல்.

(4) செயலூக்கமுள்ள கற்றலை வளர்த்தல்.

(5) கற்போரைக் கற்பிப்போராக வளப்படுத்தல்.

மரபுவழியான கற்பித்தலில் இருந்து நேர்நிலையில் விலகுதல் சமகாலத்துக் கல்வித் தேவையாக மேலெழுகின்றது.

***

# ஆழ்கற்றல்

கற்றற் கோட்பாடு என்பது ஒரு "பெருநிலை" *(Grand)* அணுகு முறை தழுவி உருவாக்கப்படுகின்றது. அதிலிருந்து விடுபடும் நுண்பாக அணுகுமுறைகளை அடியொற்றிக் கட்டமைக்கப்படும் மாதிரிகை கள் அண்மைக்காலமாக மேலெழுச்சி கொள்ளத் தொடங்கியுள்ளன. மாணவரின் இயல்புக்கும் சூழமைவுக்கும் ஏற்றவாறு கற்றலின் இயல்பு பல்வகைமைக் கொள்கின்றது. இந்தப் புதிய திருப்பத்தை அடியொற்றி "மாணவர் கற்றல்" என்ற தொடர் முன்னெடுக்கப்படு கின்றது. *(John Biggs, 1999)*

மாணவர் கற்றல் தொடர்பான இரண்டு வகையான செயற்பாடு கள் கண்டறியப்பட்டுள்ளன. அவை மேல்விரவுக் *(Surface)* கற்றல் மற்றும் ஆழ் *(Deep)* கற்றல் என்பனவாகும். மேல்விரவுக் கற்றல் வேறு அகன்ற கற்றல் வேறு என்பதை முதற்கண் மனங்கொள்ளல் வேண்டும். துண்டங்களான கருத்துக்களை அங்கொன்றும் இங்கொன்றுமாக உட்கிரகிப்பு இன்றிக் கற்றல் மேல்விரவுக் கற்றலா கின்றது. அகன்ற கற்றல் கிடை நிலையில் விரிந்துசெல்லும் செயற்பாடுகளைக் கொண்டது.

குறைந்த நேரத்திலே கூடிய வெளிப்பாடுகளைப் பெறும் அங்கலாய்ப்பு நிலையிலே மேல்விரவுக் கற்றல் இடம்பெறுகின்றது. தாழ்ந்த மட்ட அறிகைச் செயற்பாடுகள் அங்கே மேற்கொள்ளப்படு கின்றன. *அதாவது உயர்ந்த அறிகை மட்டச் செயற்பாடுகள் இடம்பெற வேண்டிய இடத்திலே* தாழ்ந்த அறிகைமட்டச் செயற்பாடுகளே முன்னெடுக்கப்படும் நிலை மேல்விரவுக் கற்றலை உருவாக்குகின்றது. கற்றலில் மட்டுமல்ல வேறுபல வேலைகளிலும் இந்தத் தொழிற்பாடு இடம்பெறுகின்றது.

எதனைக் குறித்துச் செயற்பட வேண்டுமோ அதனை விடுத்து துண்டங்களாகியிருக்கும் தகவல்களைப் பரப்பிவிடுதல் மேல்விரவுக் கற்றலின் வெளிப்பாடாகின்றது. விளக்கமின்றிப் பாடமாக்குதலும், மேல் விரவுக் கற்றலாகின்றது. அண்மைக்காலத்துப் பரீட்சைக் கற்பித்தல் முறைகள் ஒருவகையில் மேல்விரவுக் கற்றலுக்கே வலுவூட்டி வருதல் குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள் ஏன் மேல் விரவுக் கற்றலை மேற்கொள்கின் றார்கள் என்பதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. அவை:

(1) ஏதாவது வகையிலே சித்தியை எட்டிவிட வேண்டும் என்ற அங்கலாய்ப்பு.

(2) புலமை நோக்கைக் காட்டிலும் புலமைசாரா நோக்கங்கள் மேலோங்கியிருத்தல்.

(3) அதிக வேலைப்பழுவும் போதிய நேரம் ஒதுக்க முடியாமை யும்.

(4) குறிப்புக்களை மீள ஒப்புவித்தால் மட்டும் போதும் என்ற தவறான உளப்பாங்கு.

(5) கல்வியும் கற்றலும் தொடர்பான குறைவினை *(Cynical)* அணுகுமுறை.

(6) உள்ளடக்கத்தில் அழ்ந்து செல்ல முடியாத நடப்பு நிலவரம்.

மேல் விரவுக் கற்றலை ஆசிரிய நோக்கிலும் அணுக முடியும். அதனைப் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

(1) பாடத்தை ஆழ்ந்து முன்னெடுக்க முடியாத பாதி நோக்கு.

(2) முழுப் பாடத்தையும் தனித்தனித் துண்டங்களாக மேலோட் டமாகப் பார்த்தல்.

(3) ஈடுபாடற்ற முறையில் பாடத்தை முடித்துவிட வேண்டும் என்ற வெறுப்புடன் இணைந்த உளப்பாங்கு.

(4) நேர இடர்ப்பாடு.

(5) மாணவரின் ஆற்றல் பற்றிய புரிந்துணர்வற்ற கண்ணோட்டம்.

ஆழ் கற்றல் மாணவரின் முன்னைய கற்றல் இருப்புடனும், ஆர்வத்துடனும் தொடாபுடையது. கற்றலை மகிழ்நிலை அனுபவ மாக

ஆக்குதல் ஆழ்செயற்பாடுகளுக்கு இட்டுச் செல்லும். கற்பித்தல் அறைகூவலாயிருக்கும் நிலை பாடத்தில் ஆழ்ந்து செல்வதற்கு உறுதுணையாக இருக்கும். பொருத்தமான வினாக்களை மாணவர் எழுப்புதல் உள்ளடக்கத்தில் ஆழ்ந்து செல்வதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்தும். பாடம் தொடர்பான உசாவல் விருப்பு ஆழ்ந்து செல்வதற்குரிய உற்சாகத்தை மேலும் வழங்கும்.

ஆழ்கற்றலை முன்னெடுப்பதற்குரிய ஆசிரியத்துவம் பின்வரும் செயற்பாடுகளைக் கொண்டதாக இருக்கும்.

(1) பாடத்தோடு தொடர்புடைய உற்சாகமூட்டும் வினாக்களை எழுப்புதலும் பொருத்தமான பிரச்சினைகளை முற்கவிப்புச் செய்தலும்.

(2) மாணவர் தாம் கட்டுமானம் செய்துள்ள அறிவுத்தளத்தி லிருந்து கற்பித்தலை முன்னெடுத்தல்.

(3) மாணவரின் தவறான கருத்தேற்றங்களில் ஊடுதலையீட்டை *(Intervention)* மேற்கொள்ளல்.

(4) பாட உள்ளடக்கத்தினைத் துண்டங்களாக நோக்காது, அனைத்தையும் உள்ளடக்கிய கட்டமைப்பிலே *(Structure)* கவனம் செலுத்துதல்.

(6) நேர்முகமாகச் செயற்படும் கற்றற் களத்தினை ஏற்படுத்திக் கொடுத்தல்.

(7) ஆழ்கற்றலின் தேவையைப் பாட வளர்ச்சியோடிணைந்து வலியுறுத்தல்.

மேல் விரவுக் கற்றல் மற்றும் ஆழ்கற்றல் ஆகிய ஆய்வுகளை அடியொற்றியும், கற்றல் வெளிப்பாடுகளின் தரமேம்பாட்டை அடியொற்றியும் **3P** மாதிரிகை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மாதி ரிகை வகுப்பறையை ஓர் இடைவினைக் களமாகக் கருதுகின்றது. அத்தகைய இடைவினைத் தளத்திலே ஆசிரியரின் செயற்பாடுகளும் மாணவர் இயல்புகளும் ஆழ்கற்றல் மற்றும் மேல்விரவுக் கற்றல் ஆகியவற்றை உருவாக்குகின்றன.

கற்பித்தலின் மூன்றுபெரும் தீர்மானிப்புக்களை அடியொற்றி அந்த மாதிரிகை உருவாக்கப்பட்டுள்ளது. அவை:

(1) மாணவர் என்ன நிலையில் உள்ளனர்.

(2) ஆசிரியர் என்ன செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர்.

(3) மாணவர் எதனைச் செய்கின்றனர்.

மேற்கூறிய காரணிகள் கற்பித்தல் தொடர்பான கட்டங்கள் பற்றிச் சிந்திப்பதற்குரிய ஏற்பாடுகளாகின்றன. மட்டம் ஒன்றில் ஆசிரியரின் வகிபங்கு தகவல்களைத் தருவதாக அமையும். மாணவர் தகவல்களை உள்வாங்குவோராய் மட்டும் இருப்பர். உள்வாங்கு வதற்குரிய ஆற்றல் குறைவாக இருத்தல் அல்லது ஊக்கம் குன்றியிருத்தல் மாணவருக்குரிய பிரச்சினையாகின்றது.

2. மட்டம் இரண்டில் ஆசிரியர் தகவல்களை வழங்குவதுடன் எண்ணக் கருக்களையும், முதன்மை எடுப்புக்களையும் *(Principles)* விளங்கப்படுத்துவர். அவற்றை மேற்கொள்வதற்கு ஆசிரியருக்குப் பன்முக ஆற்றலும், திறன்களும், தேர்ச்சிகளும் இருத்தல் வேண்டும். இங்கு ஆசிரியரின் செயற்பாடுகளிலே கவனக்குவிப்பு மேலோங்கியிருக்கும். எவ்வளவு தூரம் கற்பித்தல் வினைப்பாட்டின் வழியாகத் தெறித்தற் செயற்பாடும் செப்பமுடைமையும் ஏற்படுத்தப்படுகின்றன என்பதும் கருத்திலே கொள்ளப்படும்.

3. மட்டம் மூன்றில் மாணவர் செயற்பாடுகளிலே கவனக் குவிப்பு ஏற்படுத்தப்படும். சரியான கற்றற் செயற்பாடுகளை அவர்கள் மேற்கொள்கின்றார்களா என்பதும், ஆசிரியர் அவற்றை எதிர்பார்த் தாரா என்பதும் உற்றுநோக்கப்படும். அந்நிலையிற் செயற்பணி இருமைப்பட்டதாக அமையும். அவை:

(1) ஆழ்நிலைக் கற்றலை அதிகரிக்கச் செய்தல்.

(2) மேல்விரைவுக் கற்றலை இயன்றளவு குறைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

கற்றல் கற்பித்தலிலே 3P மாதிரிகை ஆக்கத்தை டன்கின் மற்றும் பிடிலே ஆகியோர் ஒன்றிணைந்து மேற்கொண்டனர். 3P என்பதன் பொருள் 3 கட்டங்களாகும். அதனை அடியொற்றிய மாதிரிகை இடைவினைகள் தழுவிய கற்றலை முன்னெடுக்கும் ஒரு நெடுங் கோட்டு வளர்ச்சி ஆக்கமாகும். இந்த மாதிரிகை கற்றலோடு தொடர் புடைய காரணிகளுடன் இணைந்த மூன்று கட்டங்களைக் கொண்டது. அவை:

(1) கற்றல் இடம்பெறுவதற்கு முன்னதாக இடம்பெறுபவை *(Presage)* - $P_1$

(2) செயற்படும் கட்டம் *(Process)* $P_2$

(3) கற்றலால் ஏற்படும் விளைவுகளும், வெளிப்பாடுகளும் *(Product)* $P_3$

கற்றல் இடம்பெறுவதற்கு முன்னதான காரணிகள் இரண்டு வகைப்படும்.

(1) மாணவரை அடிப்படையாகக் கொண்ட காரணிகள் - அவை யாவன மாணவரின் முன்னறிவு அவர்களுக்குரிய விருப்பம் குறித்த பாடம் தொடர்பான உளப்பாங்கு மற்றும் அர்ப் பணிப்பு முதலியவை.

(2) கற்பிக்கும் சூழமைவு தொடர்பான காரணிகள் - எவற்றைக் கற்பித்தல் எவ்வாறு கற்பித்தல், ஆசிரியருக்குரிய ஆற்றல், வகுப்பறைக் கவிநிலை, பாடசாலையின் இயல்பு முதலியவை.

மேற்கூறிய காரணிகள் வகுப்பறையின் செயல் முறையின் போது இடைவினை கொண்டு மாணவரின் உடனடிக்கற்றற் செயற் பாட்டைத் தீர்மானிக்கின்றன. ஆசிரியர் ஆற்றல் மிக்கவராக இருந் தாலும் மாணவருக்குரிய முன்னறிவின்றி ஆழக்கற்றலை முன்னெ டுத்தல் கடினமானது. மாணவர்கள் போதிய முன்னறிவும் ஆற்றலும் கொண்டவர்களாக இருந்தாலும் நேர நெருக்கீட்டால் ஆழக் கற்றலை முன்னெடுத்தல் கடினமாகின்றது.

கற்றல் வெளிப்பாடுகள் அல்லது விளைவுகள் பின்வரும் காரணிகளிலாலே தீர்மானிக்கப்படுகின்றது.

(1) மாணவர் சார்ந்த முற்குறிப்பிட்ட காரணிகள்.

(2) கற்றல் சூழமைவு சார்ந்த காரணிகள்.

(3) கற்றலைக் குவியப்படுத்தும் செயற்பாடுகள்.

குறித்த விளைவுகளை நோக்கிச் செயற்படும் இடைவினை கொண்ட ஒன்றிணைந்த அமைப்பு செயலமைப்பு அல்லது செயற் றொகுதி *(System)* என்று கல்வியிலே குறிப்பிடப்படும். கற்றல் என்பது இந்தச் செயலமைப்பின் பொது இலக்காகக் கொள்ளப்படுகின்றது.

இந்தச் செயலமைப்பில் உள்ளடக்கி நிற்கும் காரணிகள் அனைத்தும் வகுப்பறைகளிலும் ஒரே மாதிரியாகக் காணப்படமாட்டா.

3P மாதிரிகையானது கற்பித்தலை ஒரு சமநிலை கொண்ட தொகுதியாக விளக்குகின்றது. அத்தொகுதியில் ஒவ்வோர் உறுப்பும் சூழலியற் றொகுதியில் இருத்தல் போன்று ஒன்றுக்கு ஒன்று அனு சரணையாகவுள்ளன. சரியான முறையிலே அது இயக்கம் கொள் வதற்கு அவ்வாறான பரஸ்பர அனுசரணை இன்றியமையாது வேண் டப்படுகின்றது.

அந்தத் தொகுதியிலே சமநிலைப் பிறழ்வு காணப்படுமாயின் தரங்குறைந்த கற்பித்தலுக்கும், மேல்விரவுக் கற்றலுக்கும் இட்டுச் செல்லும்.

மேற்கூறிய கருத்துக்களை அடியொற்றி "கட்டுமான இணைப் பாக்கம்" *(Constructive Alignment)* என்ற வடிவமைப்பு முன்வைக் கப்படுகின்றது. இந்த வடிவமைப்பை உருவாக்கும் பொழுது கற்றல் உள்ளடக்கம் தொடர்பான எதிர்பார்ப்பு மட்டத்தை முதலிலே வரை யறை செய்தல் வேண்டும். அதற்குரிய சொல்லாடல், மற்றும் செயற் பாடுகளைப் பயன்படுத்தித் திட்டமிட்ட ஆழ்நிலைக் கற்றலுக்கு வழிவகுத்துக் கொடுத்தல் முதலியவை வற்புறுத்தப்படுகின்றன.

உளவியலிலே குறிப்பிடப்படும் *"கட்டுமானவியல்"* மற்றும் கற்பித்தலிலே குறிப்பிடப்படும் *"இணைப்பாக்க முறை"* ஆகிய வற்றால் *"கட்டுமான இணைப்பாக்கம்"* என்ற புத்தாக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. நவீன கற்பித்தலிலே கோட்பாட்டு நிலை யிலும், செயல்முறை நிலையிலும் இது எடுத்தாளப்பட்டு வருதல் குறிப்பிடத்தக்கது.

கட்டுமான இணைப்பாக்கம் பற்றிய அறிவு கற்பித்தலை வளமுடன் முன்னெடுத்துச் செல்வதற்குரிய கருத்துநிலை வலுவாகவுள்ளது.

***

**பின்னிணைப்பு:**

# எழுபொருட்கள்

*யுத்தம் மற்றும் சுனாமி ஆகியவற்றின் தாக்கங்களுக்கு உள்ளான மாணவரின் நடத்தை வெளிப்பாடுகள்.*

*(கிழக்குப் பல்கலைக்கழகத்துக் கல்வியியல் மாணவர் மேற் கொண்ட களஆய்வுகளில் இருந்து திரட்டப்பட்டவை)*

*1- பதகளிப்புச் சார்ந்த உளவொழுங்குக் குலைவு.*

*அ. பொதுமையாக்கம் செய்யப்பட்டவை*

*ஆ. எழுதிகில் (Panic) வகைப்பட்டவை.*

*இ. இணைப்புறுபயம் (Phobic) சார்ந்தவை*

*ஈ. திடீரெனத் தாக்குதல் வரும் என்ற எதிர்பார்ப்புச் சார்ந்தவை.*

*2- உள அமைவு (Mood) ஒழுங்குக்குலைவு*

*அ. மிகையான உளவழுத்தம்*

*ஆ. உளமுனைவுப்பாடு - நேர் எதிர் என்ற இரு முனைவுகளை நோக்கிய ஊசலாட்டம்.*

*இ. ஏற்ற இறக்கங்களை உள்ளடக்கிய உளநிலை.*

*ஈ. தாம் ஏன் வாழ வேண்டும் என்ற நம்பிக்கை இழப்பு நிலை.*

*3- இணைப்புச் சிதைவு (Dissociative Disorder) உளவொழுங்குக் குலைவு*

*அ. மறதி சார்ந்தவை*

*ஆ. எதிர்பார்ப்புச் சார்ந்தவை*

இ. நிலை மாற்றம் சார்ந்தவை

ஈ. இடமாற்றம் சார்ந்தவை

உ. பல்வகைமை சார்ந்தவை

4- கருத்தேற்றம் சார்ந்த உளநோய் உளவொழுங்குக்குலைவு

அ. அகச் சுரப்பிகள் சார்ந்தவை

ஆ. உடலியக்கம் சார்ந்தவை

இ. போலித் தோற்றமுள்ள நோய்கள் சார்ந்தவை.

**கற்றல் தொடர்பாக மாணவர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்**

(1) கற்றல் தூண்டிகளுக்குத் துலங்க முடியாமை.

(2) ஞாபக மறதி.

(3) உள்ளத்தில் பதித்துவைக்க முடியாமை

(4) சிந்தனைத் தொடர்ச்சி தடைப்படல்.

(5) தொடர்ச்சியான கவனத்தில் ஈடுபட முடியாமை.

(6) தாக்க அனுபவங்களின் குறுக்கீடுகள் இடையிடையே எழல்.

(7) புறவயமான அணுகுமுறைகளில் அகவயநோக்கு அவ்வப் போது குறுக்கிடல்.

(8) தொடர்பாடல் இடர்ப்பாடுகள்

(9) பேச்சுக்குலைவு தோன்றுதல்

(10) சோகமான மனவெழுச்சிகள் கற்றலில் உட்புகல்

(11) கற்றலிலும் பெறுபேறுகளிலும் அவநம்பிக்கை - நீதி கிடைக்கப் பெறாது என்ற தற்கருத்தேற்றம்.

(12) எளிதிலிருந்து சிக்கலை நோக்கி நகர முடியாமை.

(13) எண்ணாற்றல் மற்றும் எழுத்தாற்றற் குலைவு.

(14) அகமனக் குமுறல்களுக்குச் சொல்வடிவம் கொடுத்து வெளியிட முடியாமை.

(15) மனவெழுச்சிகளோடு இணைந்து கற்கமுடியாமை.

(16) அறிகை, எழுச்சி, இயக்கம் ஆகிய மூன்று ஆட்சிகளுக்கு மிடையே இடைவெளிகள் தோன்றுதல்.

(17) சோம்பலும், தனிமைப்படலும் கற்றலில் இடம்பெறல்.

(18) கற்றலுக்கும் தன்னிலை மேம்பாட்டுக்குமிடையே இடைவெளி விரிவடைந்திருத்தல்.

(19) கற்றலுடன் வேதனை கலந்திருத்தல்.

**இத்துறையில் மேலும் வாசிப்புக்குரிய ஆங்கில நூல்கள்**


(1) உலக வங்கி *(2007)* இலங்கையில் அறிவுப் பொருளாதா ரத்தைக் கட்டியெழுப்பல்

(2) உலக வங்கி *(2009)* கற்றலின் கோபுரங்கள்

(3) உவில்சன் ஜோன் *(2000)* கற்றல் கற்பித்தலின் பிரதான எழுவினாக்கள்

(4) ஏர்ல் மேரி மற்றும் ஜோன்பெக் *(2000)* இரண்டாம் நிலைக் கல்வியின் பிரதான எழுவினாக்கள்

(5) பேராசிரியர் சந்திரசேகரம் மற்றும் பேராசிரியர் கருணாநிதி *(2009)* இலங்கைக் கல்வியின் முகத்தோற்றங்கள்.

(6) வால்ஸ் *(1998)* கல்வியும் கருத்தும்.

(7) ஹிஸ்டும் பீட்டேர்சும் *(1970)* கல்வியின் தருக்கம்.


***



பேராசிரியர் முனைவர் சபா.ஜெயராசா தமிழில் "கல்வியியல்" துறைசார்ந்த நூல்கள் பல எழுதி, அத்துறைசார் விருத்தியில் முதன்மையான பங்கு வகித்து வருபவர். கலை, இலக்கியம், உளவியல், தத்துவம் எனப் பல்வேறு துறைசார் புலங்களுடன் ஊடாடி வருபவர். இவற்றின் செழுமை மற்றும் அறிவு, ஆய்வு யாவும் இவரது "புலமைமரபு" எத்தகையது என்பதைத் தனித்துக் துல்லியமாக வெளிப்படுத்தும். மேலும், கலை தத்துவம் பற்றிய தொடர் விசாரணை, இவரை புதிய அறிவுருவாக்கப் பணியில் முழுமையாக ஈடுபட வைப்பதுடன், கல்வியின் பொருள்கோடல் சார்ந்து புதிய புதிய அர்த்தப்பாடுகளை நோக்கிக் கவனம் குவிக்கவும் செய்கிறது. தொடர்ந்து புதிய ஆய்வுக் களங்கள் நோக்கியும் கவனம் கொள்ளத் தூண்டுகிறது.

இன்றுவரை கல்வி உலகில்
முனைவர் சபா. ஜெயராசா
உயிர்ப்புமிகு புலமையாளராகவே
திகழ்கின்றார்.


சேமமடு பதிப்பகம்

விலை : 280.00

ISBN 978- 955- 1857- 85- 1

9 789551 857851

CBCN:2011-01-01-086